# தமிழரசு

1-4-1986 75 காசு




கவிராஜ பண்டிதர் ஜெகவீர பாண்டியனார்



தோற்றம் : 10-3-1886

மறைவு : 17-6-1967



# வரிகள் பல நீக்கம் - வளமான பணிகளுக்கு ஆக்கம்

## மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன்

மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே,

1985—86ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளையும், 1986—87ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும், இந்த அவையின் ஒப்புதல் பெறவேண்டி, அவையின்முன் வைப்பதில், பெரு விருப்பமும் பெருமகிழ்வும் கொள்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையைக் கடமையுணர்வும், பொறுப்புணர்வும் மிக்க உறுப்பினர் பெருமக்கள் எல்லோரும், நல்ல ஆதரவையும், சிறந்த ஒத்துழைப்பையும் நல்கி, பெருமகிழ்வோடு ஏற்பார்கள் என்று பேராவலோடு எதிர்பார்க்கிறேன்.

பெரும்பொருளால் பெட்டக்கதாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு.

என்று ஒரு நல்ல நாட்டிற்கு நல்லிலக்கணம் கூறவந்த திருவள்ளுவப் பெருந்தகையார், மிகவும் சிறப்பித்துக் கூறியுள்ளார். மிக்க பொருள்வளம் உடையதாகவும், எல்லோராலும் விரும்பத்தக்கதாகவும், எத்தகைய கெடுதலும் எய்தாததாகவும், மிகுந்த விளைபொருள் தருவதாகவும் அமைவதே நாடு என்பது வள்ளுவனாரின் வாய்மொழியாகும். இத்தகைய இலக்கணத்திற்குப் பெரிதும் பொருந்திவரக் கூடிய ஒரு சிறந்த நிலப் பகுதியாகத் தமிழ்நாடு பொலிவு பெற்றுத் திகழ வேண்டும் என்பதில், நீங்காப் பற்றும், தணியா ஆர்வமும் கொண்டு, இன்றைய தமிழக அரசு, அரும்பணிகள் பலவற்றையும் நிறைவேற்றி வருகிறது.

2. தமிழ்நாடு அரசு மாநில அளவில், ஏற்படுகின்ற பிரச்சினைகள் பலவற்றையும் தீர்க்கக் கடமைப் பட்டிருக்கிறது. அதுபோல, இந்தியா முழுவதையும் பாதிக்கின்ற அரசியல்—பொருளாதார—சமூகப் பிரச்சினைகள், இந்தியாவின் கூட்டமைப்புக்குள் ஒரு உறுப்பாக இருக்கும் தமிழ்நாட்டையும் பாதிக்கும் போது, அவற்றையும் சமாளிக்க வேண்டிய கடப்பாடுடையதாகத் தமிழ்நாடு அரசு இருக்கிறது. இந்தியா முழுவதும் தழுவிய வகையில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறைப் பொருளாதாரம், புதிய வரிகள்—ஆயத்தீர்வை—ஏற்றுமதி இறக்குமதி வரிகள் போன்றவற்றால் ஏற்படும் இன்றியமையாப் பண்டங்களின் விலை உயர்வு, உரம்—இரும்பு—நிலக்கரி போன்றவற்றின் விலை உயர்வு, இரயில் போக்குவரத்துக் கட்டண உயர்வு, டீசல்—பெட்ரோல் போன்ற எண்ணெய்களின் விலை உயர்வு போன்றவை, தமிழக அரசின் பொருளாதாரத்தையும் தமிழக மக்களின் பொருளாதாரத்தையும் பாதிக்கவே செய்திருக்கின்றன. சில இனங்களில் மத்திய அரசு அளிக்கும் உதவித் தொகை கூடுதலாகி இருக்கிறது என்பதிலே மகிழ்ச்சி ஏற்பட்டாலும், மேலே


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2017
குரோதன - பங்குனி 18
மலர் : 16 இதழ் : 19
1-4-1986

கூறப்பட்ட கட்டண உயர்வு—விலைவாசி உயர்வு போன்றவைகளால் பெரும்பகுதித் தொகை திரும்பப் போய்விடுகின்ற நிலைமைதான் ஏற்பட்டுள்ளது.


3. பொதுவாக, வளர்ச்சித் திட்டங்கள், வறட்சி-வெள்ள நிவாரணப் பணிகள், நலிந்தோர்க்கான நல்வாழ்வுத் திட்டங்கள், ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே இருந்து அவதியுறுபவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டங்கள் போன்றவற்றில் மத்திய அரசின் பங்காக ஒரு பகுதித் தொகை கிடைக்கின்றது என்றாலும், பெரும் பகுதித் தொகைக்கான பொறுப்புக்களை, மக்களோடு நேரடித் தொடர்பு கொண்டுள்ள மாநில அரசுதான், ஏற்க வேண்டியிருக்கிறது. மாநில அரசு ஏற்றுக்கொண்டுள்ள பொறுப்புக்களைச் சிறப்பாகவும் செம்மையாகவும் முடிக்க வேண்டுமானால், அதற்கு மிகுந்த பொருளாதார வசதிகள் தேவைப்படுகின்றன. பொருளாதார வசதிகளைப் பெருக்கிக் கொள்ள, வாய்ப்புக் கூறுகளும் அதிகார வரம்புகளும் வேண்டப்படுகின்றன. அவற்றிற்கான உரிமைகளும் மாநில அரசிடம் அமையப் பெறவேண்டியிருக்கின்றன.

4. இப்படிப்பட்ட ஒரு நிலையை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள், 1969ஆம் ஆண்டில், தாம் மறைவதற்கு முன்னால் எழுதிய கட்டுரை ஒன்றில், '' மாநிலங்கள், அதிக அளவில், அதிக அதிகாரம் பெறத்தக்க விதத்தில், இந்திய அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பது பற்றி, வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் எடுத்துக் கூறிவருகிறேன் '' என்று திட்டவட்டமாகவும், தெளிவாகவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

5. இந்திய நிலப்பரப்பைக் காப்பாற்றுவதற்கு ஏற்ற வலிவான இந்தியாவும் மக்களை வாழவைப்பதற்கு ஏற்ற வளமான மாநிலங்களும் அமையவேண்டும் என்னும் கருத்தைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளார்கள். இந்திய ஒருமைப்பாட்டிற்கு உட்பட்ட மாநிலத் தன்னாட்சி அமைய வேண்டும். அதற்கான ஆக்கம் ஏற்பட வேண்டும். கூட்டாட்சி அமைப்பில் மாநிலத் தன்னாட்சிக் கோட்பாடு என்பது ஒரு அரசியல் கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, பல்வேறு அரசியல் தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

6. மைய-மாநில அரசு உறவுகள் குறித்து ஆய்வு நடத்தி, மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய அமைக்கப்பட்டுள்ள நீதிபதி ஆர். எஸ். சர்க்காரியா ஆணைக்குழுவிடம், பல்வேறு அரசியல் தரப்பினரால் மேலே குறிப்பிட்டுள்ள கோட்பாடு வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள கொள்கையின் அடிப்படையில், தமிழக அரசும் கருத்துக்களை வற்புறுத்தியுள்ளது. இந்தக் கருத்துக்களை ஏற்று, நீதிபதி ஆர். எஸ். சர்க்காரியா ஆணைக்குழு, இந்தியாவில் இணைப்பாட்சி அரசுமுறை ஏற்பட, உரிய பரிந்துரைகளைச் செய்யும்—செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்போமாக !

7. தற்பொழுது தமிழக அரசுக்கும் தமிழக மக்களுக்கும் மிக்க வேதனையும், வருத்தமும் தந்துகொண்டிருக்கிற ஒரு முக்கியமான பிரச்சினை இலங்கைவாழ் தமிழர்கள் பற்றிய பிரச்சினையாகும். இலங்கை அரசின் தூண்டுதல்பேரில், இலங்கைப் போர்ப்படையினர் சனநாயக நெறிமுறைகளையும்—பண்புகளையும்—மனிதத் தன்மையையும் அத்துமீறிய வகையில், அவிழ்த்துவிட்டிருக்கும் அடக்குமுறை வன்செயல்களின் மூலம், இலங்கை வாழ் தமிழர்கள் படும் அவதிகள் குறித்தும், உயிர்-உடல்-உடைமை ஆகியவற்றிற்கு ஏற்படும் இழப்புக்கள் குறித்தும் அன்றாடம் துக்ககரமான செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன. அவர்களைப் பற்றிய துக்கச் செய்திகளும் துயரச் செய்திகளும் இங்குள்ளோர் அனைவர் உள்ளங்களையும் வாட்டி வதைத்து, வருத்தத்தில் ஆழ்த்திக்கொண்டிருக்கின்றன. இலங்கைவாழ் தமிழர்கள் அனைவரும் வாழ்வுரிமையையும், குடியுரிமை—மொழியுரிமை—தொழிலுரிமை பிரதிநிதித்துவ உரிமை போன்ற அடிப்படை உரிமைகளையும் பெற்று, அச்சத்திற்கு இடமில்லாத அமைதி வாழ்வு பெறவேண்டிய சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்பதையும், அதற்கான எல்லாவிதமான நேரிய அரசியல் முயற்சிகள் அனைத்தையும் மேற்கொள்ள இந்தியப் பேரரசு முன்வரவேண்டும் என்பதையும் இம் மன்றம் பல தடவைகளில் வற்புறுத்தி வந்திருக்கிறது. தமிழக மக்களின் வேண்டுகோள்களை ஏற்று, இந்தியப் பிரதமர் அவர்கள் அரசியல் முறையில் தீர்வுகாண பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளார்கள் என்றாலும், இனிக் காலத்தாழ்வுக்கு இடமில்லாமல் விரைவில் பிரச்சினையைத் தீர்க்க முறைப்படி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று இந்தியப் பிரதமரைத் தமிழக அரசு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது. அண்மையில் இந்தியப் பிரதமர் இலங்கை அரசுக்குக் கூறியுள்ள அறிவுரைகளுக்கு



இலங்கை அரசு செவிமடுத்து, அவற்றிற்கு ஏற்ப செயலில் இறங்கும் என்று எதிர்பார்ப்போமாக !

8. தங்கள் உயிர்களைக் காத்துக்கொள்ள, இலங்கையிலிருந்து தமிழகத்துக்குத் தப்பி ஓடிவந்துள்ள தமிழ் அகதிகளின் எண்ணிக்கை 1,25,000ஆகப் பெருகியுள்ளது. இவர்களில் 32,000 பேர்கள், ஆங்காங்கு அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். இலங்கையில் நல்ல சூழ்நிலை ஏற்பட்டு, இவர்கள் அனைவரும் தங்கள் தாயகம் திரும்பும் வரையில் இவர்களுக்கு எல்லா அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு, இவர்கள் மரியாதையுடனும், மதிப்புடனும் நடத்தப்படத் தமிழக அரசு அயராது பாடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் அகதிகள் மற்றும் தாயகம் திரும்பியோர் ஆகியோரின் நிவாரணப் பணிகளுக்காகவும், மறுவாழ்வுப் பணிகளுக்காகவும், இதுவரை மொத்தம் சுமார் ரூ. 45 கோடி செலவிடப்பட்டுள்ளது.

9. தமிழகத்தின் கடந்த ஐந்து ஆண்டுக்கால வரலாற்றைப் புரட்டிப் பார்ப்போமேயானால், ஒவ்வோர் ஆண்டும் கடுமையான வறட்சி அல்லது பெருவெள்ளம் அல்லது கடும் மழை ஆகியவற்றால், தமிழகம் பெரிதும்

பாதிக்கப்பட்டு வந்திருப்பதை அறியலாம். 1985—86ஆம் ஆண்டு இவற்றால் தமிழகம் ஒருசேர பாதிக்கப்படுகின்ற ஒரு தனித்தன்மை நிலவியது. இந்த ஆண்டில், ஒருபுறம் பெரும் வெள்ளத்தால் உயிரிழப்பும், பொருளிழப்பும் பெருமளவுக்கு ஏற்பட்டன; மற்றொருபுறம் மழையின்மையாலும், நீர்ப் பாசனம் இன்மையாலும் கொடிய வறட்சிநிலை ஏற்பட்டது. இத்தகைய கேடு பயக்கும் பருவ நிலைகள் நிலவிய போதிலும், உணவு உற்பத்தியின் இலக்கை அடைவதில் ஓரளவுக்கு வெற்றி கண்டுள்ளோம். இதற்கான காரணம் அரசு மேற்கொண்ட தனி முயற்சிகளும், வேளாண் பெருங்குடி மக்கள் எடுத்துக்கொண்ட விடாமுயற்சிகளுமேயாகும். என்றாலும், வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளும், இழப்புக்களும் நமது வளர்ச்சிப் பணிகளைப் பெரிதும் பாதித்துள்ளன. போர்க்கால விரைவு அடிப்படையில் நிவாரண நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டன. வெள்ள நிவாரணப் பணிகளின் செலவாக, அதிக அளவாக ரூ. 66·8 கோடி மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டது. வெள்ள நிவாரணப் பணிகளுக்காக, மாநில அரசு இதுவரை சுமார் ரூ. 45 கோடி செலவழித்துள்ளது. இந்த நிதியாண்டின் முடிவுக்குள்ளாக செலவின் அளவு ரூ. 60 கோடியை எட்டிவிடும். அனுமதிக்கப்பட்டுள்ள அளவில் மீதமுள்ள தொகை, வரும் நிதியாண்டில் தொடர்ந்து செலவிடப்படும்.

**10.** தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி நிலைகளைப் பற்றியும் புதிய திட்டங்களைப் பற்றியும் குறிப்பிடுவதற்கு முன்னர், இந்தியா முழுவதிலும் தற்பொழுது நிலவும் புதிய நிலைமைகளைப் பற்றி அறிந்துகொள்வது இன்றியமையாததாகும். 1985—86ஆம் ஆண்டில், நாட்டில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி நடவடிக்கைகளுக்குப் புதிய ஊக்கம் கொடுக்கும் நோக்கத்துடன், பல கொள்கைகளை புதிய கண்ணோட்டத்தில் அணுக, மத்திய அரசு ஆர்வம் காட்டி வருகிறது. புதிய தொழில் கொள்கை, புதிய கல்விக் கொள்கை, நீண்டகால வரிவிதிப்புக் கொள்கை போன்றவை பற்றி மத்திய அரசின் அறிவிப்புக்கள், மத்திய அரசு நிறைவேற்றக் கருதியுள்ள வளர்ச்சித் திட்டங்களோடு தொடர்புடையனவாகக் கருதப்பட வேண்டும்.

**11.** மேம்பாடு அடைந்துள்ள இந்த வளர்ச்சிச் சூழ்நிலையைத் தமிழ்நாடு அரசு முழுவதுமாகப் பயன்படுத்திக்கொள்ளக் கருதியுள்ளது. அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம், தமிழ் நாட்டில் உள்ள பதிவு செய்யப்பட்ட தொழில் துறை, ஆண்டு ஒன்றுக்கு, சராசரி 8.1 விழுக்காடு வளர்ச்சியை அடைந்துள்ளது என்றும், மற்ற மாநிலங்களின் வளர்ச்சி விதத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இதுவே மிக உயர்ந்த நிலையினது என்றும் தெளிவு படுத்தப்பட்டுள்ளன. இந்த நிலை நமக்குப் பெருமையையும் பூரிப்பையும் அளிக்கக்கூடிய ஒரு நல்ல நிலையாகும். வேளாண்மை உற்பத்தியைப் பொறுத்தவரையிலும்கூட, பாதகமான பருவ நிலைகளின் காரணமாக் இடர்ப்பாடுகள் ஏற்பட்டபோதிலும், நியாயமான அளவுக்கு உற்பத்தி நிலை இருந்து வருகிறது. 1986—87-ல் உணவு தானிய உற்பத்தி 92 இலட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. சர்க்கரை, அரிசி போன்ற உணவுப் பொருள்களின் விலை சற்றுக் கூடுதலாக ஆன நிலையிலும், அவற்றைப் பொது விநியோகத்தின் மூலம் குறைந்த நியாயமான விலைக்கு வழங்கியதன் காரணமாகப் பொது மக்களின் இடர்ப்பாடு தவிர்க்கப்பட்டது. அரிசியைக் குறைந்த விலையில், பொது விநியோகத்தின் மூலம், வழங்குவதன் வாயிலாக அரசுக்கு ஆண்டு ஒன்றுக்குச் சுமார் ரூ. 100 கோடி இழப்பு ஏற்படுகிறது.

**12.** சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்க்குப் பயன் விளைவிக்கின்ற இருபது அம்சத் திட்டத்தினைத் தமிழ்நாடு வெற்றிகரமாகச் செயற்படுத்தி வருகிறது. இருபது அம்சத் திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை எய்தும் வகையில், அரசின் அனைத்துத் துறைகளும் முடுக்கிவிடப்பட்டு, சீரிய பணிகளைச் சிறப்பாக மேற்கொள்ளும்படி செய்தமையால், 1982—83, 1984—85 ஆகிய ஆண்டுகளில், அகில இந்திய அளவில், தமிழ்நாடு முதலிடத்தை அடையும் பேற்றினைப் பெற்றது. கடந்த ஆண்டுகளைப்போலவே, நடப்பு 1985—86ஆம் ஆண்டிலும் தமிழ்நாடு முதலிடத்தைப் பெறுவதற்கு ஏற்ற எல்லா நடவடிக்கைகளையும் மாநில அரசு முறைப்படி மும்முரமாக மேற்கொண்டு வருகிறது. 1986 சனவரித் திங்கள் இறுதிவரை உள்ள கால அளவில், பயறு உற்பத்தி—கொத்தடிமை ஒழிப்பு—குடிசைப் பகுதியினர் மேம்பாடு—6 முதல் 14 வயதுக்குட்பட்டோரைப் பள்ளியில் சேர்த்தல்—சிறு தொழில்களைத் தொடங்குதல் போன்றவற்றின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளைத் தமிழ்நாடு மிஞ்சி விட்டது. பாசன வளத்தைப் பெருக்குதல்—கிராமப்புற வேலைவாய்ப்பு தேசிய திட்டம்—உபரி நிலங்களைக் கையகப்படுத்தி வழங்கல்—ஏழையர்க்கு வீட்டுமனை வழங்குதல்—சிற்றூர்ப் புறங்களில் மின்சார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்—கரிம வாயு உற்பத்தி செய்தல்—மரம் நடுதல்—கருத்தடை செய்தல்—முதியோர் கல்வி வழங்குதல் போன்ற அம்சங்களின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளில், 75 விழுக்காட்டிற்கு மேல் எய்தப்பட்டு விட்டன. 1986 மார்ச் திங்கள் இறுதிக்குள் எல்லா இலக்குகளையும் எதிர்பார்க்கும் அளவுக்கு முடித்திட முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

**13.** மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் சீரிய தலைமையிலான இந்த அரசு, அனைத்துத் தரப்பினர்க்கும் ஏற்ற பல்வேறு நலப்பணிகளை மேற்கொண்டு, அவற்றைச் சிறப்பாகவும், செம்மையாகவும் நிறைவேற்றி வந்துள்ளது. இயற்கைச் சீற்றங்களால் பல இடர்ப்பாடுகள் ஏற்பட்டபோதிலும், அவற்றையெல்லாம் சமாளித்து, வளர்ச்சிப் பணிகள் ஏதொன்றையும் குறைத்துக்கொள்ளாமலும், அவற்றிற்குக் குந்தகமில்லாத வகையிலும், நலப்பணித் திட்டங்கள் அனைத்தையும் வெற்றிகரமாகச் செயற்படுத்த முடிந்தது என்பதே, நமது வலுவான நிதி நிலை நிருவாகத்தைக் காட்டுகிறது. இந்த மாநிலத்தில் குறிப்பிட்ட சில ஆண்டுகளில், ஊரகத் தன்னிறைவுத் திட்டம் என்னும் பயனுள்ள பெருந்திட்டம் ஒன்று ரூ. 216 கோடி மொத்தச் செலவில் நிறைவேற்றி வைக்கப்பட்டது. ஏழை எளிய குழந்தைகளுக்கும், பள்ளிச்சிறார்—சிறுமியர்க்கும் பயன்





தரத்தக்கத் திட்டமான முதலமைச்சர் குழந்தைகள் மதிய சத்துணவுத் திட்டம் 1982—83ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்றுத் தொடர்ந்து நல்ல நோக்கத்தில் நடைபெற்றுவருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவர். இந்தத் திட்டம் மேலும் திருத்தியமைக்கப்பட்டு, ஒருங்கிணைந்த சத்துணவு—சுகாதாரப் பாதுகாப்புத் திட்டமாகத் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக, மொத்தத்தில் 1986—87-க்குரிய வரவு—செலவுத் திட்டத்தில் ரூ. 168.92 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. எட்டாம் வகுப்பு வரையிலும் பயிலும் மாணவ—மாணவியர்க்குச் சீருடைகளும்—பாடநூல்களும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. 1986—87இல் இத் திட்டத்திற்கு ரூ. 27.39 கோடி செலவாகும். இத்தகைய பரந்த—விரிந்த செயல் நோக்கத்தைக் கொண்ட ஒவ்வொரு திட்டமும் அறிவிக்கப்பட்ட நிலையில், அவற்றின் நடைமுறை குறித்துப் பலருடைய உள்ளங்களில் பல ஐயப்பாடுகளைத் தோற்றுவித்தாலும், அவை வெற்றி பெறும் நிலையில், நல்லவர்கள் அனைவரின் பாராட்டுதல்களைப் பெறுகின்றன என்பது பெருமகிழ்ச்சியைத் தருவதாகும். இன்று இத் திட்டங்கள் தேசிய முன்னுரிமைத் திட்டங்களாக உருப்பெற்றிருப்பது, இம் மாநிலத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

**14.** ஆதிதிராவிடர், பழங்குடியினர், நரிக்குறவர், ஏழ்மைக்கோட்டிற்குக் கீழே இருக்கும் ஏனையோர் ஆகியோர்க்கு வீட்டு வசதி செய்து கொடுக்கும் திட்டம் ஒன்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டது. இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த பெரும் முதலீடு தேவைப்படுகிறது. வீட்டு வசதி செய்துகொடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அரசு நிறுவனங்கள், அவற்றைப்போன்ற மற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் நெருங்கிய கூட்டு ஒத்துழைப்பு இதற்கு மிகவும் இன்றியமையாததாகிறது. வீட்டுவசதித் திட்டங்களுக்குக் கடனுதவி அளிப்பதற்காக மத்திய அரசால் அமைக்கப்பட இருக்கும் நிறுவனம், வீட்டு வசதி—நகர்ப்பகுதி வளர்ச்சி நிறுவனம் (HUDCO), வீட்டுவசதி மேம்பாட்டு நிதியுதவி நிறுவனம் (HDFC), ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் போன்ற நிறுவனங்களின் மூலம் நிதி ஆதாரங்களைப் பெருக்க, முறையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இந்தத் திட்டத்தை நான்கு, ஐந்து வகைகளில் செயற்படுத்த திட்டமிடப்பட்டு வருகிறது. குடிசை வாழ் மக்களுக்குப் போதிய குடியிருப்பு வசதி செய்து கொடுப்பது, ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் குடியிருப்பு வசதிகளை மேம்படுத்துவது, வீடுகட்ட ஏழைகளுக்குக் கடனுதவி அளிப்பது, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வீடு கட்ட உதவுவது, தொழில் நிறுவனங்கள் மூலம் வீடு கட்டித் தர ஊக்குவிப்பது போன்ற வகைகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய வகையில் விரிவானதொரு திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது. கிராமப்புற வேலைவாய்ப்பு தேசிய திட்டம் (NREP), கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டம் (RLEGP) ஆகியவற்றின்கீழ் அரசின் நேரடி உதவியாக ரூ. 14 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதைத் தவிர முதற்கட்டமாக, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 26 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தரப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ளவாறு, நிதி நிறுவனங்கள் மூலம் தேவைப்படும் நிதிகளைத் திரட்டுவதற்கான முயற்சிகள் முறைப்படி மேற்கொள்ளப்படும்.

**15.** கிருஷ்ணா ஆற்றுக் குடிநீர்த் திட்டத்தை ஆந்திர மாநிலத்துடன் சேர்ந்து செயற்படுத்தத் தமிழ்நாடு அரசு தொடர்ந்து நிதி ஒதுக்கீடுகள் செய்து வந்துள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத்திட்டக் காலத்தில், தமிழ்நாட்டின் பங்கின் ஒரு பகுதியை நாம் முன்னதாகவே கொடுக்க முன்வந்தோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். திட்டம் நிறைவேற்றப்படுவதில் காலத்தாழ்வு ஏற்படக்கூடாது என்பதே இதன் நோக்கமாகும் என்றாலும், இத் திட்டத்திற்கு இசைவு அளிப்பதில் மத்திய அரசு காலத்தாழ்வு செய்துவருவதன் காரணமாக, இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பணிகளும் காலத்தாழ்வு பெற்றுள்ளன. இத் திட்டத்தின் செலவில் பெரும்பாலான இனங்கள் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டச் செலவில் இடம் பெறவேண்டியிருக்கின்றன. இத்திட்டத்தைத் துவக்கிவைத்த போது மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மாநிலங்களிடையே ஒற்றுமை நிலவுவதற்கான ஓர் அருமையான எடுத்துக்காட்டு இத் திட்டமாகும் என்று புகழ்ந்துரைத்ததை ஈண்டு நினைவு கூறலாம். சென்னை மாநகருக்குக் கூடுதலாக நீர் வழங்கக்கூடிய, இன்றியமையாச் சிறப்பினைக் கொண்ட, இந்த முக்கியமான திட்டத்திற்குத் தேவையான அனுமதியை இந்திய அரசு விரைவில் வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்பொழுது இந்தத் திட்டத்தின் பங்கீட்டு விகிதத்திற்கு ஏற்ப ஆந்திரப் பிரதேச அரசும், அவர்களின் சார்பான நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அப்படிச் செய்யப்படாத நிலை ஏற்படின், தமிழ்நாடு அளிக்கும் பங்குத் தொகையைக் கொண்டு மட்டும் இத் திட்டப் பணியைக் குறிப்பிட்ட கால அளவு எல்லைக்குள் நிறைவேற்ற முடியாமற் போகக் கூடும். இந்த நிலைமை விளக்கப்பட்டு, அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய அவசியம் ஆந்திரப் பிரதேச அரசிடம் வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. 1986—87ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்குப் பயன்படுத்தத் தமிழ்நாடு அரசு ரூ. 45 கோடி ஒதுக்கியுள்ளது. உரிய அளவுக்கு ஆந்திரப் பிரதேச அரசின் பங்கீட்டுத் தொகையையும் தமிழ்நாடு அரசு எதிர்பார்க்கிறது.

**16.** ஊரகக் குடிநீர் வழங்குத் திட்டங்களுக்கென நிதி ஒதுக்கீடு ஒவ்வோர் ஆண்டும் அதிகப்படுத்தப்பட்டு வருகிறது. 1986—87ஆம் ஆண்டிற்கென ரூ. 45 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சிற்றூர்களில் பழுதுபட்ட இரும்பிலான மேல்நிலைத் தொட்டிகளுக்குப் பதிலாகச் சிமெண்ட் கற்கலவையினாலான மேல்நிலைத் தொட்டிகளை அமைக்க, இந்த ஒதுக்கீட்டிலிருந்து, ரூ. 5 கோடி செலவிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கான தேவைகளை ஆய்வு செய்து, மதிப்பீடு செய்து, தக்கச் செயற்குறிப்புக்களை வழங்குமாறு, தமிழ்நாடு குடிநீர் வழங்கல்—வடிகால் வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**17.** 1986—87ஆம் ஆண்டில் மின்சக்தித் துறையின் திட்டச் செலவை நாம் ரூ. 395 கோடியாக உயர்த்தி நிர்ணயித்துள்ளோம். இந்த வகையில் ஏற்படும் செல

இனங்களுக்காகத் தமிழ்நாடு அரசு அளிக்கவேண்டியுள்ள ரூ. 300 கோடி இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப் பட்டிருக்கிறது. கூட்டுத் துறையிலோ அல்லது தனியார் துறையிலோ மின்சக்தி உற்பத்தி செய்வதற்கான செயற் குறிப்புக்கள் அரசின் ஆய்வில் உள்ளன. வடசென்னை அனல் மின் நிலையத்திற்குத் தேவையான நிதி உதவி அளிப்பது பற்றி, ஆசிய வளர்ச்சி வங்கி மதிப்பீடு செய்து வருகிறது. பழுப்பு நிலக்கரி இயற்கையிலேயே அதிகமாகக் கிடைக்கும் நெய்வேலியில், மின் உற்பத்தி அளவை அதிகமாக்கக்கூடிய திட்டங்களுக்கு இந்திய அரசின் ஒப்புதலை எதிர்பார்க்கிறோம். ஒப்புதல் கிடைக்கும் நிலையில், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், மின் உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக் கூறுகள் ஏற்படும். தமிழ்நாடு, மின்சக்தித் துறையில் தன்னிறைவு அடைய வேண்டும்—அடைய முடியும் என்ற நம்பிக்கை இருந்து வருகிறது.


**18.** தஞ்சை டெல்டாப் பகுதியில் இயற்கை வாயு கணிசமான அளவில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, அதனைத் தோண்டி எடுக்கும் முயற்சி மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இங்கு கிடைக்கும் எண்ணெய் வளம் தரமுயர்ந்ததாக இருக்கும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இது பொதுவாகத் தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு—குறிப்பாகத் தஞ்சை மாவட்டப் பகுதியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும். மத்திய அரசு, இந்த வளத்தைப் பயன்படுத்தி அதற்கு ஏற்ற தொழிற்சாலைகளை உருவாக்கவும், மின் உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்தவும் முன்வரவேண்டும் என்று வற்புறுத்துகிறோம்.

**19.** 1985—86ஆம் ஆண்டு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்க ஆண்டாகும். 1985—86ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டத்தை, நான் இந்த அவையின்முன் வைத்தபோது, திட்ட ஒதுக்கீடு பற்றியோ, மத்திய நிதியுதவியின் அளவு பற்றியோ திட்டவட்டமாகவும், தெளிவாகவும் அறிவிக்கும் நிலையில் இல்லை. ஏனெனில், திட்டக் குழுவுடன் நடத்தும் விவாதங்கள், அப்பொழுது முடிவடையாமலிருந்தன. பின்னர், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டச் செலவைவிட, கணிசமான அளவுக்குக் கூடுதலான திட்டச் செலவிற்குத் திட்டக் குழுவிடம் ஒப்புதல் பெறுவதில் தமிழ்நாடு மகிழ்ச்சிக்குரிய வகையில் வெற்றி கண்டது. மேலும், நமது வற்புறுத்தலுக்கிணங்க, திட்டப் பணிகளுக்காக மத்திய அரசின் நிதியுதவியின் பங்கும் உயர்த்தப்பட்டது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 3,150 கோடியாக இருக்க, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 5,750 கோடியாக உயர்ந்தது. திட்டத்திற்கான மத்திய அரசின் உதவியும் ரூ. 665 கோடியிலிருந்து ரூ. 1,438 கோடியாக உயர்த்தப்பட்டது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கம் 82·54 விழுக்காடும் மத்திய அரசின் நிதியுதவியைப் பொறுத்த வரையில் 116·28 விழுக்காடும் உயர்ந்துள்ளன. நாட்டிலுள்ள எல்லா மாநிலங்களோடும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மேற்குறிப்பிடப்பட்ட இரு இனங்களிலும் மிக அதிக அளவில், உயர்ச்சியைப் பெற்றுள்ள ஒரு சில மாநிலங்களில், தமிழ்நாடு முக்கியமானதோர் இடத்தைப் பெற்றிருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி ஆகும்.

**20.** மத்திய நிதியுதவியைப் பெறும் வகையில், இம் மாநிலத்திற்கு நீண்ட நெடுங்காலமாக இழைக்கப் பட்டுவந்த அநீதியைப்போக்கி, ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய மற்ற மாநிலங்களுக்கும் இம் மாநிலத்திற்கும் இடையே நிலவி வரும் ஏற்றத்தாழ்வை, நியாயத்தின் அடிப்படையில் நீக்கவேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அவ்வப்போது வற்புறுத்தி விடுத்த வேண்டுகோள்களை மத்திய அரசு ஓரளவுக்கு ஏற்றுக்கொண்டுள்ளது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். மேலும், 1985—86 ஆம் ஆண்டிலும் 1986—87ஆம் ஆண்டிலும் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்குக் கிடைக்கும் வரி வருவாயின் பங்கும் ஓரளவுக்கு உயர்ந்துள்ளது. மத்திய அரசின் வரிவசூல் நிலை சற்று உயர்ந்திருப்பதே இதற்குக் காரணம். இந்த இரண்டு சாதகமான சூழ்நிலைகளாலும், மாநில அரசின் வரிவசூல்—சிறு சேமிப்பு வசூல் ஆகிய இரு வகைகளிலும் வருவாயைப் பெருக்கிக் கொள்ள மாநில அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகளாலும், மிகைப்பற்றைத் தீர்க்க ரூ. 38·9 கோடி மத்திய அரசிடமிருந்து நடுத்தரக் காலக் கடனாகப் பெற்றமையாலும், நடப்பு ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தைப் பொறுத்து, முன்னர் எதிர்பார்க்கப்பட்ட தோராயமான ரூ. 264·20 கோடி பற்றாக்குறையைப் பெருமளவுக்குச் சரிக்கட்ட முடிந்தது. இதனால், வரும் ஆண்டில் புதிய திட்டங்கள் பலவற்றையும் மேற்கொள்ள இயலும் என்பதற்கான நம்பிக்கையும் உறுதிப்பாடும் ஏற்பட்டிருக்கின்றன. 1985—86 இல் முடிவான பற்றாக்குறை ரூ. 7·45 கோடியாக இருக்கும்.


**21.** இந்த ஆண்டு சனவரித் திங்களில் மேதகு ஆளுநர் அவர்களின் உரைமீது நடந்த விவாதத்திற்குச் சட்ட மன்றத்தில் நான் பதில் அளிக்கும்போது, 1987 சனவரித் திங்கள் முதல் நாள் முதற்கொண்டு, தமிழ்நாடு முழுவதிலும் கள்-சாராய விற்பனை அறவே நிறுத்தப்பட்டு, மதுவிலக்கு மீண்டும் கொண்டு வரப்படும் என்ற அரசின் முடிவு அறிவிக்கப்பட்டது. இவ்வாறு மதுவிலக்கை நடைமுறைக்குக் கொண்டுவருவதன் மூலம், 1986—87ஆம் நிதி ஆண்டில், ரூ. 60 கோடி அளவுக்கு அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படும். இந்த இழப்பைக் கருத்தில் கொண்டுதான் 1986—87ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டம் வகுக்கப் பட்டுள்ளது.

**22.** எனினும், 1987—88ஆம் நிதி ஆண்டில், மதுவிலக்கின் மூலம் வருவாய் இழப்பு ரூ. 250 கோடியாக இருக்கும் என்று கணக்கிட வேண்டிவரும். மதுவிலக்கை நடைமுறைக்குக் கொண்டுவருவதால் ஏற்படும் வருவாய் இழப்பில் 50 விழுக்காட்டை, ஈடு செய்யும் ஒரு திட்டத்தை மத்திய அரசு முன்பு அறிவித்தது. ஆனால், 1977—78இல் மதுவிலக்கினால் ஏற்பட்ட இழப்பைப் பொறுத்து மட்டுந்தான் மத்திய அரசு ஈட்டுத் தொகை வழங்கும் என்று சொல்லப்படுகிறது. மதுவிலக்குக் கொள்கையை நிலைநாட்டுவதன் மூலம் இப்பொழுது ஏற்படக் கூடிய வருவாய் இழப்பைப் பொறுத்தும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள அளவில் ஈட்டுத்



தொகையை வழங்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**23.** ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டில் ரூ. 960 கோடி செலவிற்கு ஒப்புதல் அளிக்கப் பட்டிருக்க, நாம் இறுதியாகச் செலவிடக்கூடிய தொகை ரூ. 1,069 கோடியாக அமையும். 1986–87ஆம் ஆண்டுத் திட்டச் செலவு ரூ. 1,153 கோடி என மத்தியத் திட்டக் குழு ஒப்புதல் அளித்திருக்க, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 1,200 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது. எனவே, ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தின் முதல் இரண்டு ஆண்டுகளில், நாம் திட்டங்களுக்காகச் செலவிடுவது ரூ. 2,269 கோடியாக அமையும். மொத்தத் திட்டச் செலவில் இது 39 விழுக்காடாகும். திட்ட இலக்குக்கு மேல் சாதனையை ஆண்டிற்கு ஆண்டு எய்திக்காட்ட முடியும் என்பதைத்தான் தமிழக அரசு தொடர்ந்து நிலைநிறுத்தி வருகிறது.




**24.** கடந்த காலத்தில் பல்வேறு துறைகளைப் பொறுத்து, தமிழ்நாடு அரசு மேற்கொண்ட முக்கிய மான பொருளாதார நடவடிக்கைகள் பற்றியும் ஒதுக் கப்பட்ட நிதி ஒதுக்கம் பற்றியும், ஏற்பட்ட சாதனைகள் பற்றியும், 1986–87ஆம் ஆண்டில் நிறைவேற்றக் கருதி யுள்ள திட்டங்கள் பற்றியும், அவற்றிற்காகச் செய்யப் பட்டுள்ள நிதி ஒதுக்கீடு பற்றியும் ஓரளவுக்கு விவரங்கள் தொகுக்கப்பட்டு, இணைப்பாக இவ்வுரையுடன் வைக்கப் பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றை யெல்லாம் படித்துப் பார்த்து, நிலைமைகளைத் தெளிவு படுத்திக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசு செயற்படுத்தக் கருதியுள்ள சில முக்கியமான புதிய திட்டங்கள் குறித்து மட்டும் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

**25.** காவலர் நலனுக்காகவும், காவற் படையை நவீனப்படுத்துவதற்காகவும், மொத்தம் ரூ. 27.67 கோடி செலவில் திட்டங்கள் தொடங்கப்பெறும். 1986–87ஆம் ஆண்டில், காவல் துறையினர் குடியிருப்பு கள் கட்டுவதற்காக ரூ. 8 கோடியும், காவற் பணியை மேம்படுத்தி வலுப்படுத்துவதற்காக ரூ. 1.7 கோடியும் அனுமதிக்கப் பட்டுள்ளன.

**26.** தரிசு நில மேம்பாடு, அழிந்துபட்ட காடுகளை மீண்டும் வளர்த்தல் ஆகியவற்றிற்கான சிறப்புத் திட்டத்தை ரூ. 76 இலட்சம் இறுதிச் செலவில் மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. அழிந்துபட்ட இயற்கையான காடுகளை மீண்டும் வளர்க்க, ஒருங்கிணைந்த அணுகு முறை இத் திட்டத்தில் பின்பற்றப்படும்.

**27.** தெரிந்தெடுக்கப்பட்ட நகராட்சிகளில், பின் தங்கிய பகுதிகளின் ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்கான சிறப்புத் திட்டத்தை ரூ. 50 இலட்சம் இறுதிச் செலவில் மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது.

**28.** சென்னை மாநகராட்சிப் பகுதி மேம்பாட்டுக் காக, ரூ. 2.81 கோடி இறுதிச் செலவில் புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றில் தானியங்கித் துப்புரவு வண்டிகள் வாங்குதல், ஆண்டர்சன் பாலத்தை அகலப்படுத்துதல், நடைபாதை வியாபாரிகளுக்கு அங்காடிகள் கட்டிக் கொடுத்தல் போன்றவை அடங்கும். இதுபோல, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளின் மேம் பாட்டிற்காக ரூ. 2.4 கோடி இறுதிச் செலவில் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இவற்றில் சாலை அமைத்தல், தார் பாவுதல், தொடக்கப் பள்ளிகளுக் காகக் கட்டடங்கள் கட்டுதல் ஆகியவை அடங்கும்.

**29.** சென்னையில், ரூ. 54 இலட்சம் இறுதிச் செலவில் மோட்டார் வாகனப் பாகங்கள் வடிவமைப்பு நிலையத்தையும், கோயம்புத்தூரில் ரூ. 60 இலட்சம் இறுதிச் செலவில் நவீனக் கருவி நிலையம்—பயிற்சி நிலையம் ஆகியவற்றையும் ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

**30.** கல்வி எப்பொழுதுமே மாநில அரசின் தலையாய முன்னுரிமையைப் பெற்று வந்துள்ளது. 1985–86 வரவு-செலவுத் திட்டத்தில், கல்வி மேம்பாட்டிற்காக ரூ. 468 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்க, 1986–87இல் ரூ. 551 கோடி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது. 1986–87ஆம் ஆண்டிலும் கடந்த ஆண்டு களைப் போலவே, கூடுதல் ஆசிரியர் பதவிகளுக்கு அரசு அனுமதி அளிக்கவுள்ளது. அரசு உயர்நிலைப் பள்ளி களுக்கும், மேல்நிலைப் பள்ளிகளுக்கும் கட்டடங்கள் கட்டுவதற்காகத் தனியாக ரூபாய் 1 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது.

**31.** தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூ. 48.43 இலட்சம் இறுதிச் செலவில் விபத்து-அவசரச் சிகிச்சைத் திட்டத்தை விரிவுபடுத்த அரசு முடிவு செய்துள்ளது. தற்போதுள்ள துணை நிலையங்களில் மேலும் நல்ல இட வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக, ரூ. 50 இலட்சம் செலவில் கட்டடங்களைக் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

**32.** 1986–87ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோர்க்கு கல்வி வசதிகளை விரிவாகச் செய்துகொடுக்கத் தனி முக்கியத் துவம் அளிக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் நடு நிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரமுயர்த்தும் திட்டம் ஒன்று ரூ. 80.62 இலட்சம் செலவில் நிறைவேற்றப்படவுள்ளது. தற்பொழுதுள்ள பள்ளிகளில் மேலும் வசதிகளைச் செய்து கொடுப்பதற் காக ரூ. 1 கோடி இறுதிச் செலவில் அறைக் கலன்களும், ஆய்வுக் கூடக் கருவிகளும் வாங்கும் திட்டம் ஒன்று செயற்படுத்தப்படும். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பள்ளி மாணவ-மாணவியர்களுக்காக ரூ. 50 இலட்சம் செலவில் தங்கும் விடுதிகள் கட்டும் திட்டம் செயற்படுத்தப்படவிருக்கிறது.

**33.** தமிழ்நாட்டில் ஏற்கெனவே சாலைகள் நன்கு அமைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. சாலை வசதிகளை மேலும் வலுப்படுத்துவதற்காக ரூ. 11.58 கோடி இறுதிச் செலவில் புதிய சாலைகளும் பாலங்களும் அமைக்கப்படவுள்ளன. 1986–87இல் இதற்காக ரூ. 3.05 கோடி செலவிடப்படும்.

**34.** 1986–87இல், கூட்டுறவுத் துணிப் பதப்படுத்தும் பிரிவு ஒன்று ரூ. 75 இலட்சம் இறுதிச் செலவில் அமைக்கப்படவிருக்கிறது.

**35.** பொதுத் துறை நிறுவனங்களின் திறனை மேம் படுத்தும் பொருட்டும், மிகுந்த பலனை விளைவிக்கும் பொருட்டும், அரசு எடுத்துக் கொண்டுள்ள பல்வேறு முயற்சிகள், மனநிறைவு அளிக்கத்தக்க வகையில் நிறை வேறி வருகின்றன.


**36.** பரவலான முறையில் தொழில்களின் வளர்ச் சியை உருவாக்கவும், வேலை வாய்ப்புக்களை ஏற்படுத் தவும் தனியார் துறை--பொதுத் துறை—கூட்டுத் துறை—கூட்டுறவுத் துறை ஆகியவற்றின் மூலம், நிதி நிறுவனங்களின் உதவியோடு எடுக்கப்பட்டுவரும் முயற்சிகள் நல்ல பலன்களைத் தந்து வருகின்றன.

**37.** தமிழ்நாட்டின் போக்குவரத்துக் கழகங்கள் நடப்பு ஆண்டில் பொதுவாக ஆதாயம் தரத்தக்க வகை யில் செயற்பட்டு வந்திருக்கின்றன. பெரும்பாலான செயல்திறன் குறியீடுகளைப் பொருத்த மட்டில் அவை அனைத்திந்திய குறியீட்டு அளவைத் தாண்டியுள்ளன.

**38.** தமிழ்நாடு மின்வாரியம் மின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் வகையிலும், உற்பத்திச் செலவைக் குறைக்கும் வகையிலும் செயல்பட தமிழக அரசு எல்லாவிதமான உதவிகளையும் ஒத்துழைப்பு களையும் செய்து வருகிறது.

**39.** இவ்வரசு அரசு ஊழியர்களுக்குப் பல முன்னோடித் திட்டங்களை அறிவித்துள்ளது. 1985—86ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்த வாறு நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் பெறப்பட்டு, அவற்றின்மீது அரசு ஆணைகள் வெளியிட்டதோடு மட்டுமல்லாமல், அந்தப் பரிந்துரைகளின் அடிப்படையிலான நன்மைகள், அரசு ஊழியர்களுக்குப் பின் தேதியிட்டு 1—10—1984 முதல் வழங்கப்பட்டன. அண்மையில் பல்வேறு அரசு ஊழியர் சங்கங்களும், ஆசிரியர்களும் கோரியதன் அடிப்படையில், நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளில் தென்படுகின்ற முரண்பாடு களைப் பரிசீலித்துத் தேவையான திருத்தங்களைப் பரிந்துரை செய்வதற்காக, அரசு, திரு. கார்த்திகேயன் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒருநபர் குழுவை அமைத்துள்ளது. இக் குழு பல்வேறு ஆசிரியர், அரசு ஊழியர் பிரதிநிதிகளின் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து வருகிறது. குழுவின் பரிந்துரை அரசுக்கு விரைவில் கிடைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அவை கிடைக்கப்பெற்றவுடன், ஆராய்ந்து அவற்றின்மீது தக்க ஆணைகள் அரசால் வெளியிடப்படும் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

**40.** பணியிலிருக்கும்போது இறக்க நேருகின்ற அரசு ஊழியர் குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்ற குடும்ப நலத் தொகை ரூ. 10,000-லிருந்து ரூ. 20,000 ஆகக் கடந்த ஆண்டு உயர்த்தப்பட்டது. அதேபோல் ஓய்வுபெறும் அரசு ஊழியர்களுக்கு





தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு வருங்கால வைப்பு நிதி—பணிக்கொடைத் திட்டத்தின்கீழ், ரூ. 5,000 வழங்கும் திட்டத்தை இவ்வரசு கொண்டு வந்தது. இவ்வாறாக, அரசு ஊழியர்களுக்கான நல்ல திட்டங்களின் பட்டியலில் இன்னொரு புதியத் திட்டத்தையும் தற்பொழுது இவ்வரசு அறிவிக்கக் கருதியுள்ளது. வீடு கட்டுவதற்காக முன்பணம் பெற்ற அரசு ஊழியர், அரசுப் பணியில் இருக்கும் போது இறக்க நேரிட்டால், அவருடைய கணக்கில் நிற்கின்ற பாக்கித் தொகையை வட்டியுடன் தள்ளுபடி செய்வதற்காக, வீடு கட்ட முன்பணம் வாங்கிய அரசு ஊழியர்களுக்கென, ஒரு தனி குடும்ப நல நிதியை ஆரம்பிக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. திட்டத்தின்கீழ் வீடு கட்ட முன்பணம் பெற்ற அரசு ஊழியர்கள் சேர்க்கப்பட்டு அவர்களில் யாராவது பணியில் இருக்கும்போதே இறக்க நேரிட்டால் பாக்கித் தொகைகள் வட்டியுடன் தள்ளுபடி செய்யவும் இத் திட்டம் வழிவகை செய்யும். வீடு கட்ட முன்பணம் பெறும் அனைவரும் இத் திட்டத் தில் சேர்க்கப்படுவார்கள். அவர்கள் மாதா மாதம் கட்டக்கூடிய தவணைத் தொகைக்கு ஏற்ப குறைந்த அளவு கட்டணத்தை இந்த நல நிதிக்குச் செலுத்த வேண்டும். முழு விவரங்கள் கொண்ட ஆணை விரைவில் வெளியிடப்படும்.

**41.** இங்கு சில திட்டங்களைப்பற்றி மட்டும் நான் குறிப்பிட்டுக் காட்டியுள்ளேன் என்றாலும், முக்கியமான துறைகள் புற்றிய விளக்கக் குறிப்புகள், மாண்புமிகு உறுப்பினர்கள் படித்துப் பயன்பெறும் வண்ணம், இவ்வுரையின் பிற்சேர்க்கையாக வைக்கப் பட்டுள்ளன.

**42.** வரி அமைப்புகளில் ஏற்படுத்த இருக்கின்ற மாற்றங்களைப்பற்றி விளக்குவதற்கு முன்னர் நான் மாநிலத்தின் மொத்த நிதி நிலைமைப்பற்றி எடுத்துக் கூற விரும்புகிறேன். 1986—87-ல் மாநில அரசின் நிதிநிலை மனநிறைவு அளிப்பதாக இருக்கும் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்க்கு தெரிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். வருவாய்க் கணக்கில் உபரி ரூ. 223.25 கோடியாக உயரும் என எதிர் பார்க்கப்படுகிறது. செலவினங்களில் இயன்ற அளவு சிக்கனக் கொள்கையைக் கடைப்பிடித்துவரும் அரசின் போக்கினால், வருவாய்க் கணக்கில் உபரி காட்ட முடிந்திருக்கிறது. இதன்மூலம் மூலதன முதலீட்டு நடவடிக்கைகள் பெருக வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதன் பலனாக மாநிலத்தின் அடிப் படை நிதி ஆதாரங்கள் மேலும் வலுப்பட வழி ஏற்பட்டிருக்கிறது. அவ்வாறே மூலதனக் கணக்கி லான செலவு ரூ. 172.44 கோடியாக உயர்ந்துள்ளது. பொதுக் கடன்—பொதுக் கணக்கு, கடன்கள் மற்றும் முன்பணங்கள் என்பவற்றின்கீழ் உள்ள பற்று வரவுகளைக் கருத்தில்கொண்ட பின்னர், 1986—87ஆம் ஆண்டிற் கான பற்றாக்குறை ரூ. 4.79 கோடியாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. துவக்கத்தில் ஏற்படக்கூடிய பற்றாக்குறையான ரூ. 7.45 கோடியையும் சேர்த்துக் கொண்டால், 1986—87 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 12.24 கோடி இறுதிப் பற்றாக்குறையாக அமையும். வரி வசூல் நடவடிக்கைகளையும், வருமானப் பெருக்க நடவடிக்கை களையும் தீவிரப்படுத்துவதன் மூலம் இந்தப் பற்றாக் குறையை ஈடு செய்வதோடுமட்டுமல்லாமல் அதற்கு மேலும் வருவாயைப் பெருக்க இயலும் என்று நான் உறுதி யாக நம்புகிறேன். பல்வேறு சலுகைகளை அளிக்கவும் வரிவிதிப்பு முறையைச் சிறிது சீரமைக்கவுமான வழிமுறைகளை மேற்கொள்ள, இத்தகைய நிதி நிலைமை நமக்கு ஊக்கம் பயப்பதாக இருக்கிறது.

**43.** நமது மாநிலத்தின் மொத்த வருவாயில் தொழில் துறையின் பங்கு கடந்த சில ஆண்டுகளாக

அதிகரித்துக்கொண்டே வந்துள்ளது. மேலும் தொழில் துறை வேலைவாய்ப்பை அதிகரிக்கும் ஓர் ஆதாரமாக இருந்து வருகிறது. தொழில்களுக்கான ஊக்கத் திட்டங்கள் நெறிப்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், இந்த வரவு-செலவுத் திட்டத்தில், சில சலுகை நடவடிக்கைகளுக்கான அறிவிப்புகள் செய்யப்பட்டுள்ளன. அளிக்கப்படும் சலுகைகள், தொழில் நடத்துவோரின் கூடுதல் வருவாய்ப் பெருக்கத்திற்கான வழிகள் என்று கொள்ளப்படாமல், பண்டங்களின் விலைகளைக் குறைப்பதற்கும்,



அல்லல்களைக் களைவதற்கும், உற்பத்தியைப் பெருக்குவதற்கும், வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் ஆன நெறிப்படுத்தும் செயல் முறைகளாகக் கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன்.

**44.** கீழ்க்கண்ட பொருள்களின் மீது இருந்து வரும் விற்பனை வரிகள் அறவே நீக்கப்படுகின்றன :—

(1) துத்தநாகம் பூசிய இரும்புவாளிகள்.

(2) வீடுகளில் பயன்படுத்தப்படும் கரி மற்றும் நிலக்கரி மரத்தவிடு, உமி போன்ற பொருட்களாலான எரிபொருட்கள் (Briquettes).

(3) நாட்டுச் சர்க்கரை (Bhoora Sugar) மற்றும் கற்கண்டு.

(4) நுரை ரப்பரால் (Foam Rubber) தயாரிக்கப்படாத பஞ்சு, இலவம்பஞ்சு மெத்தைகள், தலையணைகள் மற்றும் இணைப்பு மெத்தைகள் (Quilt beds).

(5) மெழுகுவர்த்திகள்.

(6) படச்சட்டங்கள் மற்றும் படங்கள்.

(7) வெள்ளி மெட்டி (Metty).

(8) போட்டி விளையாட்டுப் பொருள்கள்

(9) அனைத்து இசைக்கருவிகள்.

(10) விதைப்பதற்காக விற்கப்படும் சான்றளிக்கப்பட்ட பருத்திவிதைகள்.

**45.** கீழ்க்கண்ட வகைகளில், சாதாரணப் பொதுமக்களுக்கும், நுகர்வோர்க்கும் தொழில் துறையினர்க்கும் உதவிடும் தன்மையில், தற்போதுள்ள வரி வீதங்கள் குறிப்பிட்ட அளவுக்குக் குறைக்கப்படுகின்றன :—

(1) மக்களின் உயிர்காக்கும் 41 வகையான மருந்துகள் மீதிருந்துவரும் 8 சதவிகித வரி 4 சதவிகித வரியாக குறைக்கப்படுகிறது.

(2) குழந்தைகளுக்கு வழங்கும் பால் உணவுப் பொருள்கள் உட்பட அனைத்துப் பால்உணவுப் பொருள்கள் மீதான 10 சதவிகித வரி, 4 சதவிகித வரியாகக் குறைக்கப்படுகிறது.

(3) இழுவை வண்டிகள் (உந்துகலம் இழுக்கும் குடியிருப்பு வண்டி—Trailers) மீதான 15 சதவிகித வரி, 9 சதவிகிதமாகக் குறைக்கப்படுகிறது.

(4) பரிசுச் சீட்டுகள் (Lottery Tickets) மீதான 20 சதவிகித வரி 10 சதவிகித வரியாகக் குறைக்கப்படுகிறது.

(5) கோழித் தீவனத்தின் மீதான 5 சதவிகித வரி, 2 சதவிகித வரியாகக் குறைக்கப்படுகிறது.

**46.** இம் மாநிலத்திலுள்ள தொழில் துறையினர்க்கும், வணிகர்களுக்கும் உதவும் வகையில், கீழ்க்கண்டுள்ளவாறு வரி விதிப்பு முறைகளை நெறிப்படுத்தவும், மற்றும் வரி விகிதங்களைக் குறைக்கவும் கருதப்பட்டுள்ளது :—

(1) தற்பொழுது உள்ள வணிகவரிச் சட்டத்தின் முதல் அட்டவணையின் கீழ் வரும் இறுதிப் பொருள்களைத் தயாரிக்கப் பயன்படும் அனைத்து உறுப்புப் பாகங்கள், மூலப் பொருள்கள் மற்றும் செய்முறைப் பொருள்கள் (Processing Materials) (சாராயக் கலவைச் சாலைகள் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது தயாரிப்புக்கள் தவிர) ஆகியவற்றின் மீது தற்பொழுதுள்ள 10 சதவிகிதம் மற்றும் அதற்கு மேலாக உள்ள வரி விகிதங்கள் இனி 4 சதவிகித வரியாகச் சீராகத் திருத்தி அமைக்கப்படும். இச் சலுகையால் இம் மாநிலத்தில் இறுதிப் பொருள்களின் விலை பொதுவாகக் குறைந்து நுகர்வோர்க்குப் பயன் அளிக்கும்—பயன் அளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்.

(2) சிறு தொழில் முனைவோர்களின் கோரிக்கையை ஏற்று, மின் சக்தி உற்பத்தி செய்யும் பொறிகள் (Generators) மீதான 12 சதவிகித வரி இனி 8 சதவிகித வரியாகக் குறைக்கப்படுகிறது.

(3) நமது மாநிலத்திலுள்ள மின்னணுத் தொழிற்சாலைகளுக்கு ஊக்கம் அளிக்கவும், உள்ளூர் தயாரிப்பாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும் நமது மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்னணுப் பொருட்கள் மற்றும் பாகங்கள் மீதான 10 சதவிகித வரி இனி 6 சதவிகித வரியாகக் குறைக்கப்படும். நமது மாநிலத்திற்கு வெளியே தயாரிக்கப்பட்டு இங்கே வந்து விற்பனையாகும் மின்னணுச் சாதனங்கள் மீது ஒரே சீராக 10 சதவிகித வரி விதிக்கப்படும்.

**47.** வணிக வரி விதிமுறைகள் தொடர்ந்து நெறிப்படுத்தப்பட்டு வருகின்றன. சென்ற வரவு-செலவு நிதி அறிக்கையில்கூட நான் வணிகத் துறையின் பிரச்சினைகளைச் சீராக்கப் பலமுனை வரிகள் சிலவற்றை ஒருமுறை வரிகளாக மாற்றும் சில மாற்றங்களைக் குறிப்பிட்டிருந்தேன். இந்த ஆண்டும் எளிமை பயக்கும், சில நெறிமுறைப்படுத்தும், திட்டங்களை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

(1) வெல்லம், சீரகம் மற்றும் சீயக்காய் (Soap Nut) ஆகியவற்றின்மீதான 5 சதவிகித பல முனை வரி இனி 8 சதவிகித ஒரு முனை வரியாக மாற்றப்படும்.

(2) செயற்கைப்பசை (Synthetic Adhesives) மற்றும் பாரபின் மெழுகு ஆகியவற்றின் மீதான 5 சதவிகித பலமுனை வரி இனி 8 சதவிகித ஒருமுனை வரியாக மாற்றப்படும்.

(3) தாவர எண்ணெய்களைப் பொறுத்தவரையில், 3 சதவிகித பலமுனை வரி, இனி 4 சதவிகித ஒருமுனை வரியாக மாற்றப்படும். மேலும் மாநிலங்களுக்கிடையே நிகழ்கிற தாவர எண்ணெய் விற்பனையின்மீதான வரி 4 சதவிகிதத்திலிருந்து 1 சதவிகிதமாகக் குறைக்கப்படும்.

(4) இம் மாநிலத்திலேயே உற்பத்தி செய்யப்படும் நிலக்கடலைக்கு இதுவரையில் இருந்துவரும் முதல் விற்பனை வரி என்பது, இனிமுதல் கொள்முதல் மீதான வரியாக மாற்றி அமைக்கப்படும். வெளி மாநிலங்களிலிருந்து வரும் நிலக்கடலையின் மீதான வரி முதல்முனை விற்பனை வரியாக மாற்றியமைக்கப்படும்.

(5) தற்போது பருத்தி நூலின்மீது பலவிதமான வரி வீதங்கள் இருக்கின்றன. பின்னப்பட்ட உள்ளுடைக்கு (Hosiery)ப் பயன்படுத்தப்படும் நூல்மீது 2 சதவிகித வரியும், கைத்தறி ஆடைகளுக்குப் பயன்படுத்தப்படும் நூல் (Hank yarn)

மீது 3 சதவிகித வரியும், மற்ற நூல் வகைகள்மீது 4 சதவிகித வரியும் விதிக்கப்பட்டு வருகின்றன. இந்நூல் வகைகள் அனைத்தையும் சமமாகக் கருதி இனி அனைத்திற்கும் ஒரே சீராக 3 சதவிகித விற்பனை வரியாக விதிக்கக் கருதப்பட்டுள்ளது.

(6) துருப்பிடிக்கா எ·.குப் (Stainless Steel) பொருள்கள் மீது தற்போது 10 சதவிகித விற்பனை வரி இருந்து வருகிறது. தற்பொழுதுள்ள நடைமுறையில் உள்ள வரி ஏய்ப்பு வழி வகைகளை அடைக்கும் வண்ணம் இனி இவ் வரியை இரண்டாகப் பிரித்து, முதல் விற்பனையின்போது 6 சதவிகித வரியாகவும், இறுதி விற்பனையின்போது 4 சதவிகித வரியாகவும் விதிக்கக் கருதப்பட்டுள்ளது.

(7) விற்பனை வரி கட்டுவதற்காக பதிவு செய்வதற்கான குறைந்த அளவு விற்பனை வரையறை தற்பொழுது ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50,000 மதிப்புள்ள விற்பனையாகும். இனி இவ் வரையறை ஆண்டு ஒன்றுக்கு விற்பனை மதிப்பு ரூ. 75,000 என அதிகரிக்கப்படும். ஆனால் பதிவுக் கட்டணம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10 என மிகக் குறைந்த அளவுடையதாக இருப்பதால், அதனை இனி ஆண்டு ஒன்றுக்கு ரூ. 100 என்று உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. கிளைகள் அல்லது கிடங்குகளுக்கான கட்டணம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5 என்ற வீதத்திலிருந்து, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 20 என்று உயர்த்தப்படும்.

(8) விலை உயர்வுப் போக்குகளைக் கருத்தில் கொண்டும், சிறிய அளவில் விற்பனை வரி செலுத்துவோர் மற்றும் குறிப்பாகத் தொழில் முனைவோர் மூலதன முதலீட்டிற்கான நிதி ஆதாரங்களைச் சீரிய முறையில் பயன்படுத்தவும் கூடுதல் விற்பனை வரியின் சுமையிலிருந்து ரூ. 10 இலட்சத்திற்குக் குறைவான ஆண்டு விற்பனை உள்ள விற்பனை வரி செலுத்துவோர்க்கு இனி மொத்தமாக விலக்கு அளிக்கப்படும். அதாவது இதுவரையில் ரூ. 3 இலட்சமாக இருந்த வரிவிலக்கு வரையறை இனி ரூ. 10 இலட்சம் வரிவிலக்கு வரையறையாகும் என்று மாற்றி அமைக்கப்படுகிறது.


(9) மேலே எடுத்துள்ள முடிவின் மூலம் ஏற்படும் இழப்பை ஒருவகையில் ஈடுகட்ட, மிக அதிகமாக விற்பனை செய்யும் பெரும் வணிகர்கள் செலுத்தும் கூடுதல் விற்பனை வரியில் சிறிதளவு உயர்வை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. தற்பொழுது ரூ. 10 இலட்சத்துக்கு மேல் ஆண்டு விற்பனை செய்யும் வாணிகத்தின் மீது ஒரே சீராக 1.25 சதவிகித கூடுதல் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. இனி 10 இலட்சத்திலிருந்து ரூ. 40 இலட்சம் வரையில் ஆண்டு விற்பனையின் மீது 1.25 சதவிகித கூடுதல் விற்பனை வரியும், ரூ. 40 இலட்சத்திற்கு மேல் நடைபெறும் ஆண்டு விற்பனையின் மீது 1.5 சதவிகித கூடுதல் விற்பனை வரியும் விதிக்கப்படும்.

(10) ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2 இலட்சத்திற்குக் குறைவாக விற்பனை செய்பவர்களுக்குச் சுருக்கமான வரி மதிப்பீடு செய்யும் முறை இருந்து வருகிறது. இம்முறையில் பல கட்டுப்பாட்டு வரையறைகள் உள்ளன. இவற்றால் வணிகர்களுக்குப் பெருத்த இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன என்று அவர்களால் முறையிடப்பட்டது. இனி வணிகர்கள் மற்றும் விற்பனை வரி செலுத்துபவர்கள் ஆகியோர் சுருக்கமான வரி மதிப்பீட்டு முறையைப் பயன்படுத்த உதவிபுரியும் வகையில், இந்தக் கட்டுப்பாடுகள் அனைத்தும் அறவே நீக்கப்படுகின்றன. வணிகர்கள்மீது நம்பிக்கைவைத்துச் செய்துள்ள இந்த ஏற்பாட்டை, வணிகர்கள் நன்முறையில் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். இந்த நம்பிக்கை வீணாகிப்போய், மீண்டும் கட்டுப்பாடுகளை அடுத்துவரும் ஆண்டுகளில் கொண்டுவரவேண்டிய அவசியம் ஏற்படாது என்று நான் நம்புகிறேன்.

(11) இப்பொழுது உருட்டப்பட்ட இரும்பு மற்றும் எ·.கு ஆகியவை விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு, இறுதிப் பொருள்களின் தயாரிப்பின்போது பயன்படும் கழிப்பு இரும்பின்மீது 4 சதவிகித வரி விதிக்கப்பட்டு வருகிறது. இந்த முறையைச் சீர்படுத்தும் வகையில், இனிக் கழிப்பு இரும்பிற்கு விற்பனை வரியிலிருந்து அறவே விலக்களித்துவிட்டு, இறுதிப் பொருள்கள் மீது மட்டும் 4 சதவிகித வரியை விதிக்கக் கருதப்பட்டுள்ளது.

(12) ஓட்டல் விடுதிகளில் அமைந்துள்ள ஆடம்பர வசதிகளைப் பொறுத்து விதிக்கப்பட்டுள்ள வரி விகிதத்தை சீர்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

(13) 1984ஆம் ஆண்டு அக்டோபர் முதல் நாள் முதல் தமிழ்நாட்டில் வேலை ஒப்பந்தங்கள் மீது வரி விதிக்கப்பட்டது. இதன் செயற்பாட்டில் ஏற்படும் சில இடர்ப்பாடுகள் பாதிக்கப்பட்டவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மனித உழைப்பு மட்டுமே நிறைந்த வேலைகளைப் பொறுத்துச் சலுகை




காட்டவும், வரி விகிதங்களைத் தகுந்தவாறு சீர்திருத்தி அமைக்கவும் கருதப்பட்டுள்ளன.

(14) குத்தகை மீதான வரியைச் சீராகவும், செம்மைபடுத்தி அறிமுகப்படுத்தவும் அரசு விரும்பியுள்ளது. பல்வேறு குத்தகை நிறுவனங்களுடன் அரசு கலந்துரையாடல் நடத்திச் சில முடிவுகளை உருவாக்கியுள்ளது. அவற்றின் அடிப்படையில் குத்தகை மீதான வரி சீர்படுத்தப்பட்டு, நடைமுறைப் படுத்தப்படும்.

(15) உள்ளாட்சி மன்றங்களின் நிருவாகம் செம்மையாக நடைபெற அவைகளின் நிதிச் சுயச்சார்பு நிலையை மேம்படுத்த வேண்டியது இன்றியமையாததாக இருக்கிறது. கேளிக்கை வரியின் மூலம் கிடைக்கும் வருமானம், உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியமான நிதி ஆதாரங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. இந்த அமைப்புக்களுக்குக் கூடுதல் நிதி ஆதாரங்களை அளிக்கும் வகையில், அனைத்து நகராட்சிகள் மற்றும் ஊராட்சி அமைப்புகளில் தற்போது இருந்துவரும் கேளிக்கை வரி மீதான கூட்டுக் கட்டணம் மேலும் 10 சதவிகிதம் அளவில் அதிகரிக்கப்படும்.

(16) மாநிலத்தின் வெளியே கிளைமாற்றம் அல்லது தரகுமுகவர் மூலமாகக் கொண்டு செல்லப்படும் இறுதிப் பொருள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருள்கள், செய்முறையில் உள்ள பொருள்கள் மற்றும் உபயோகப் படுத்தப்படும் பொருள்கள் ஆகியவற்றின் மீது 2 சதவிகித கொள்முதல் வரியை விதிப்பதற்கான அறிவிப்பைக் குஜராத் மாநிலம் தனது வரவு-செலவு நிதி நிலை அறிக்கையில் வெளிப்படுத்தியுள்ளது. இம்மாநிலத்திலுள்ள இறுதிப் பொருள்கள் தயாரிப்பாளர்களால் பயன்படுத்தப்படும் பொருள்கள் குறித்து நாம் சலுகைகள் அறிவித்திருக்கிறோம். வெளிமாநிலங்களுக்குக் கொண்டு செல்லப்படும் பொருள்மீது விதிக்கக்கூடிய மேற்கண்ட புதிய வரியை முறைப்படி குடியரசுத் தலைவரின் அனுமதிபெற்று, 1986-87-ஆம் நிதியாண்டில் அறிமுகப்படுத்த தமிழக அரசு எண்ணியுள்ளது.

**48.** இன்று அறிவிக்கப்பட்டுள்ள சலுகைகளையும், நெறிப்படுத்தும் முறைகளையும், சீரமைப்புத் தன்மை


களையும் மதிப்பிற்குரிய உறுப்பினர்களும், பொது மக்களின் பல்வேறு தரப்பினரும் ஏற்று, மகிழ்ச்சி யுறுவார்கள் என்று நான் பெரிதும் உறுதி கொள்கிறேன். மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துச் சலுகைகள் மூலம் அரசுக்கு ரூ. 20 கோடிக்கு மேலாக வருவாய் இழப்பு ஏற்படக்கூடும். எனினும், இச் சலுகைகள் காரணமாக உற்பத்தியும், விற்பனையும் அதிகரிக்கும் என்று எதிர்பார்ப்பதாலும், சில சீரமைப்புக்கள் கொள்முதல் வரி, கூடுதல் விற்பனை வரி ஆகிய வற்றில் வருவாயைச் சிறிதளவு பெருக்கக்கூடும் என்று எதிர்பார்ப்பதாலும் ஏற்படக்கூடிய இழப்புக் களை ஈடுகட்ட முடியும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே,

**49.** விளைபொருள் உற்பத்தி—செய்பொருள் உற்பத்தி ஆகியவற்றைப் பெருக்கியும், அவற்றின் மூலம் கிடைக்கும் வரி வருமானம்—வரியில்லா வருமானம் ஆகிய வற்றை ஈட்டியும், அப்படி ஈட்டப்பட்ட வருமானங் களைச் செம்மையுறக் காப்பாற்றியும், காப்பாற்றப் பட்ட வருமானங்களை நீதி–நேர்மை–சட்டம்–திட்டம் ஒழுங்கு—தேவை ஆகியவற்றின் அடிப்படையில் வகுத் துத் தந்தும் ஆட்சிபுரிய வேண்டும் என்ற குறள்நெறிக் கருத்திற்கு இணங்க, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் சீரிய தலைமையின்கீழ் இயங்கி வருகின்ற தமிழக அரசு செயலாற்றி வருகிறது.

**50.** இந்த நிதி நிலை அறிக்கையில், தமிழக அரசின் நிதி நிலைமை, கொள்கை, குறிக்கோள், திட்டம், சாதனை போன்றவை சுட்டிக் காட்டப்பட்டிருப்பதோடு மாண்புமிகு உறுப்பினர்கள் படித்து பயன்பெறும் பொருட்டு, இதோடு இணைத்துள்ள பிற்சேர்க்கையில், சென்ற காலத்தில் நிறைவேற்றப்பட்ட பணிகள் குறித்தும், எதிர் காலத்தில் நிறைவேற்றப்பட இருக் கின்ற பணிகள் குறித்தும், விளக்கமாகவும், தெளிவாக வும் குறிப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

**51.** இந்த நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு, சீருரை ஆற்ற இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல எண்ணத்தோடும், தூய நோக்கத்தோடும், தெளிந்த சிந்தனையோடும், பண்பட்ட உள்ளத்தோடும் வழங்கும் கருத்துக்கள், நாடு மேலும் வளம் பெறவும், மக்கள் மேலும் நலம் பெறவும் பயன் படுவனவாக அமைய வேண்டும் என்று விரும்புகிறேன். இந்த அவையின் பெயரும் புகழும் தொடர்ந்து நிலை நாட்டப்பட எல்லோரும் தத்தம் உதவியையும், ஒத்துழைப்பையும் தந்தருளுமாறு எல்லோரையும் வேண்டுகிறேன். விவாதங்கள் சூடு அற்றனவாய், ஒளிமிகுந்தனவாய் அமையட்டும்.




**52.** இந்த நிதி நிலை அறிக்கையைச் சிறப்பாக உருவாக்கிட, எனக்கு செவ்விய முறையில் உதவியையும், ஒத்துழைப்பையும் புரிந்த நிதித் துறைச் செயலாளர் திரு. சி. இராமச்சந்திரன் அவர்களுக்கும், அவருடன் இணைந்து நின்று அரும்பணிகள் பலவற்றையும் ஆற்றிய நிதித் துறை–பிற துறைகள் ஆகியவற்றைச் சார்ந்த அதிகாரிகள்—அலுவலாளர்கள் ஆகியோர்க்கும், தொடர்புடைய எல்லோர்க்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**53.** 1986–87ஆம் ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையை உவந்து ஏற்குமாறு அவையினரை அன்புடன் விழைந்து கேட்டுக்கொள்கிறேன்.

## கல்வி

கல்வித் துறையில் மாநில அரசின் சாதனைகள் கற்றறிந்தவர் பலராலும் பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளன. சிறந்ததொரு கல்வித் திட்டம், வளம் செறிந்த வருங்காலத்திற்கு இன்றியமையாதது என்பதை, அரசு நன்கு உணர்ந்துள்ளது என்பது, கல்வித் துறையில் அடைந்துள்ள சாதனைகளிலிருந்து தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

**2.** தொடக்கக் கல்வியைப் பரப்பும் பணியில் மாநில அரசு, அனைவரும் வியக்கும் வகையில், செயற்பட்டு வந்துள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், அனைத்திந்திய நிலையில் ஒன்று முதல் ஐந்து வரையுள்ள வகுப்புகளில் 91 விழுக்காடு மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்க, தமிழ்நாட்டில், இவ் வகுப்புகளில் சேர்ந்துள்ள மாணவர்களின் விழுக்காடு, 98·66 ஆகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதேபோன்று, ஆறு முதல் எட்டு வரையுள்ள வகுப்புகளில், அனைத்திந்திய நிலையில் சேர்ந்துள்ள மாணவர்களின் விழுக்காடு 51 ஆக இருக்க, தமிழ்நாட்டில் 72.18 விழுக்காடு மாணவர்கள், இவ் வகுப்புகளில் சேர்ந் துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். 1985–86-ல், ஆறு முதல் பதினான்கு வரையுள்ள வயதுத் தொகுதியில், கூடுதலாக 2.25 இலட்சம் மாணவர்களைச் சேர்க்க வேண்டும் என்ற இலக்கு நிச்சயிக்கப்பட்டிருக்க, 31–12–1985-க்குள், 2.97 இலட்சம் மாணவர்கள் சேர்ந்துவிட்டனர் என்பது, பெருமைக்குரிய சாதனையாகும். துவக்கக் கல்வித் துறையில், தமிழக அரசு வெற்றிவாகைசூடி முன்னேறி வருவதற்கு முக்கியமானதொரு காரணம் முதலமைச்சரின் குழந்தைகள் மதிய சத்துணவுத் திட்டம் என்றால், அது மிகையாகாது.

**3.** ஒவ்வொரு நிலையிலும், கல்வியை மேம்படுத்து வதற்கு, அதிக வசதியைச் செய்து தர, மாநில அரசு இடைவிடாத முயற்சி செய்து வருகிறது. இதனையொட்டி, 1985–86ஆம் ஆண்டில் மட்டும் 85 புதிய உயர்நிலைப் பள்ளிகளும், 49 மேல்நிலைப் பள்ளிகளும் தொடங்க, அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**4.** அரசு உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் பல போதிய கட்டட வசதியின்றி பல்லாண்டுகளாக அவதியுற்று வருகின்றன. எனவே, உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றுக்குக் கட்டடங்கள் கட்டித் தருவதற்கு, அரசு சிறப்பிடம் அளித்து வருகிறது. 1977–78 முதல், 1985–86 வரையில், அரசு உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றிற்காகக் கட்டடங்கள் கட்டுவதற்கு, ரூ. 23 கோடிக்கும் மேல், அரசு செலவிட்டுள்ளது. 668 அரசு மேல் நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றிலும் வகுப்பறை ஒன்றோடு கூடிய ஆய்வுக்கூடம் ஒன்றைக் கட்டுவதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 13 கோடி ஆகும். சுகாதார

## ஏழைச் சிறுவர்களுக்கு இலவசப் பாடநூல்— சீருடைத் திட்டம்



வசதிகள் செய்து கொடுப்பதற்குச் செலவிடப்பட்ட தொகை ரூ. 2 கோடி ஆகும்.

5. கல்லூரிக் கல்விக்காக, அதிக வசதிகளைச் செய்து கொடுப்பதில், தமிழக அரசு தொடர்ந்து நாட்டம் செலுத்தி வந்துள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில், தற்போதுள்ள அரசுக் கல்லூரிகளில் கூடுதலாக 65 பட்டப்படிப்பு பாடமுறைகளும், 30 புதிய பட்ட மேற்படிப்பு பாடமுறைகளும், 13 மாலை நேரக் கல்லூரிப் பட்டப்படிப்பு பாடமுறைகளும் தொடங்கப்பட்டு சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கோயம்புத்தூரில் பாரதியார் பல்கலைக் கழகமும், திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக் கழகமும், தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகமும், கோடைக்கானலில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகமும், காரைக்குடியில் அழகப்பா பல்கலைக் கழகமும் தோன்றின.

6. தற்போது மாநிலத்தில், 31 பொறியியல் கல்லூரிகளும், 129 பல்தொழில் நுட்பப் பயிலகங்களும் செயற்பட்டு வருகின்றன. ஒருபக்கம் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் சேர மாணவர்கள் அதிக அளவில் முன் வருவதாலும், மற்றொரு பக்கம் அரசு அல்லது அரசு நிதி உதவி பெறும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களை ஏற்படுத்த அரசு நிதி ஆதாரங்கள் பற்றாக் குறையாயிருப்பதைக் கருத்தில் கொண்டும், அரசு நிதி உதவியில்லாமல், சொந்த நிதியைக் கொண்டு செயற்படும் பல்தொழில் நுட்பப் பயிலகங்களையும், பொறியியல் கல்லூரிகளையும் தேவைப்படும் இடங்களில் ஏற்படுத்த, அரசு தற்போது அனுமதி அளித்து வந்துள்ளது. எனினும், இந்த நிறுவனங்களை முறையாக நடத்துவதற்கானப் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் அரசு வரையறுத்துள்ளது. அவை முறைப்படி நடைபெறாவிட்டால், அவற்றிற்கான அனுமதி மறுக்கப்படும் என்றும் அவை எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் கடந்த நான்கு ஆண்டுகளில், அரசு நிதி உதவியில்லாமல் சொந்த நிதியைக் கொண்டு, 87 பல்தொழில் நுட்பப் பயிலகங்களையும், 23 பொறியியல் கல்லூரிகளையும் தொடங்க, அரசு அனுமதி அளித்துள்ளது. பொறியியல் கல்லூரிகளில் தற்போது ஏறத்தாழ 5,700 மாணவர்களும், பல்தொழில் நுட்பப் பயிலகங்களில், 22,000 மாணவர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

7. இந்தியா ஏழ்மையிலும் வறுமையிலும் உழலும் நாடு. இங்கு, எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. எனவே, முதியோர் கல்வித் திட்டத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி, மீண்டும் மீண்டும் வலியுறுத்தத் தேவையில்லை. முதியோர் கல்வித் திட்டத்தை நிறைவேற்றுவதில், தமிழக அரசு, தலைசிறந்த, சாதனை புரிந்துள்ளது. முதியோர் கல்வி மையங்களில் மகளிரைச் சேர்ப்பதில் 1983–84, 1984–85 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும், தொடர்ந்து சிறந்த முறையில் செயற்பட்டமைக்காக, மத்திய அரசு, தமிழக அரசுக்கு ரூ. 25 இலட்சம் பரிசளித்துள்ளது. தமிழ்நாட்டில் தற்போது மொத்தம் 21,856 முதியோர் கல்வி மையங்கள் செயற்பட்டு வருகின்றன. இம் மையங்களில் 6.82 இலட்சம் முதியோர் கல்வி பயில்கின்றனர். இவர்களில், 5.8 இலட்சம் பேர் மகளிர்; 3.14 இலட்சம் பேர் ஆதிதிராவிட, பழங்குடி வகுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### முதலமைச்சர் குழந்தைகள் மதிய சத்துணவுத் திட்டம்

8. முதலமைச்சர் குழந்தைகள் மதிய சத்துணவுத் திட்டத்தைச் செயலுக்குக் கொண்டு வந்ததன் மூலம், குழந்தைகளின் உடல் நலன், ஊட்டச் சத்து ஆகிய வற்றைப் பேணிக் காத்து, சிறார்களின் உடல் நிலையை மேம்படுத்துவதில், தமிழ்நாடு அரசு, மேற்கொண்டுள்ள தலையாய முயற்சி, நாடெங்கிலும் பாராட்டுதலைப் பெற்றுள்ளது. இத் திட்டத்தின் வெற்றி கண்டு, ஏனைய மாநிலங்களும் ஊக்கம் பெற்று, தமிழக அரசின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, இத்தகைய திட்டத்தை, அந்தந்த மாநிலங்களிலும் செயலுக்குக் கொண்டுவந்துள்ளன. 58,000 மையங்கள் மூலம் 2+முதல் 9+ வரையிலுள்ள வயதுத் தொகுதியிலுள்ள 66 இலட்சம் சிறார்கள் பயனடையும் வகையில், 1982ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இத் திட்டத்தினால், இன்று, 66,504 மையங்கள் மூலம், 86.88 இலட்சம் சிறார்களும், 2 இலட்சம் முதியோர் உதவித் தொகை பெறுபவர்களும் பயனடைகின்றனர். இத் திட்டத்தின் பயன், முதியோர் ஓய்வூதியம் பெறுவோர்களுக்கு, 15–1–1983 முதற்கொண்டும், முன்னாள் படைவீரர்களுக்கும், படைவீரர் இறந்துவிடின், அவர் மனைவிக்கும் 1–1–1984 முதற்கொண்டும் நீட்டிக்கப்பட்டது. இத் திட்டத்தின் பயன், 10 முதல் 15 வயது வரை உள்ள சிறார்களுக்கும், கிடைக்கும் வகையில், இத் திட்டம் 15–9–1984 முதற்கொண்டு விரிவாக்கப்பட்டது. இத் திட்டத்தினால், சுமார் 2 இலட்சம் பேர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் ஏழைப் பெண்கள்; ஆதரவற்ற மகளிர் ஆவர். முதல் ஆண்டில், ரூ. 100 கோடி செலவில் தொடங்கப்பட்ட இத் திட்டம், இப்பொழுது, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 169 கோடி செலவில், செயற்படுத்தப்பட்டு வருகிறது.

9. இத் திட்டத்தினால் பயன் பெறுபவர்களுக்கு, ஊட்டச் சத்து நிலையும், உடல் நலனும் உயர்ந்துள்ளன என்பது, இது தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்விலிருந்து, தெளிவாகத் தெரிய வருகிறது. கிராமப் பகுதிகளில் சிறார்களிடையே சாதாரணமாகக் காணப்படும் வாய்ப்புண், இரத்தமின்மை, வெண்விழிப் புள்ளி (Bitot's spots) போன்றவை குறைந்து, இந்த நோய்களினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவுக்குக் குறைந்துள்ளது. இத் திட்டம் செயலுக்கு வந்துள்ள பள்ளிகளில், மாணவர்களின் எண்ணிக்கையும் ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்த வண்ணம் உள்ளது.

### இலவசப் பாட நூல்—சீருடைத் திட்டம்

10. ஏழைச் சிறார்கள் பயனடையும் வகையில், விரிவான திட்டமொன்றைக் கொண்டு வரும் நோக்கத்துடன், அரசு, ஒன்று முதல் எட்டு வரையிலுள்ள வகுப்புகளில் படிக்கும் ஏழைச் சிறார்களுக்குப் பாடநூல்களையும், சீருடைகளையும் இலவசமாக வழங்க முடிவு




செய்துள்ளது. இத் திட்டத்தினால், ஆண்டொன்றுக்கு தோராயமாக ரூ. 27 கோடி செலவாகிறது. குழந்தைகளின் வருங்காலம் வளம் மிக்கதாக அமையும் பொருட்டு, குழந்தைகளுக்கு முழுச் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகள் அளிக்கப்படுகின்றன.

### விளையாட்டுக்கள்

**11.** விளையாட்டுப் பணிகளை மேலும் தீவிரப்படுத்துவதற்காக, இவ்வரசு, விளையாட்டு மேம்பாட்டுக் கழகம் ஒன்றை அமைத்துள்ளது. இக் கழகம், விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கமளித்து தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு அதிக அளவில் பங்கெடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொண்டு வருகிறது.

### தமிழ் வளர்ச்சி—பண்பாடு

**12.** தென் மாநிலங்களிடையே பண்பாட்டு நிகழ்ச்சிகளைப் பரிமாற்றம் செய்து வட்டாரப் பண்பாடுகளைப் பேணிக் காப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு, தென் மண்டலப் பண்பாட்டு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 5 கோடி வழங்க மத்திய அரசு முன்வந்துள்ளது. தென் மாநிலங்கள் அனைத்தும் சேர்ந்து இதற்குச் சமமான தொகையை வழங்கும். தமிழ்நாட்டுக் கலைஞர்களுக்கும் தமிழ் அறிஞர்களுக்கும் ஊக்கமளித்து உதவும் நோக்கத்துடன், அவர்களுக்குத் தாராள நிதியும், பட்டங்களும், பரிசுகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

### மக்கள் நல்வாழ்வு

**13.** கி.பி. 2000-ம் ஆண்டுக்குள் அனைவருக்கும் சுகாதார வசதியளிக்கும் பொறுப்பை அரசு ஏற்றுள்ளது. அதற்கேற்ப, தரமான சிறந்த மருத்துவ வசதி அளிப்பதன் மூலம் கிராமப்புற மக்களுக்கான மருத்துவ உதவி, சுகாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றை மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இந் நோக்கத்தைக் கருத்திற்கொண்டு, 5,000 பேர் வாழும் சமவெளிப் பகுதிகளிலும் 3,000 பேர் வாழும் மலை/பழங்குடியினர் பகுதியிலும் சுகாதாரத் துணை நிலையங்களை அரசு ஏற்படுத்தி வருகின்றது. 1985 மார்ச் வரையில், 5,860 சுகாதாரத் துணை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நடப்பாண்டில், கூடுதலாக 1,084 சுகாதாரத் துணை நிலையங்களை ஏற்படுத்தும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

**14.** தொடக்கச் சுகாதார நிலையங்கள் 436, நிலை உயர்த்தப்பட்ட தொடக்கச் சுகாதார நிலையங்கள் 30 சிறு அளவிலான சுகாதார நிலையங்கள் 260 ஆகியவற்றில் தற்போது, கிராமப்புற சுகாதாரப் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முதலாண்டில், அதாவது, 1985–86-ல், புதிய தொடக்கச் சுகாதார நிலையங்கள் 20 ஏற்படுத்த திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

### குடும்ப நலம்

**15.** குடும்ப நலத் திட்டத்தைச் செயற்படுத்துவதில், தமிழ்நாடு எப்போதும் முன்னணியில் இருந்து வருகிறது. 1984–85-ல், குடும்பநலத் திட்டத்தைச் சிறந்த முறையில் செயற்படுத்தியதைப் பாராட்டும் வகையில், மத்திய அரசு, இந்த அரசுக்கு, ரூ. 2.5 கோடி பரிசு வழங்கியுள்ளது. இத்திட்டத்தைச் செயற்படுத்துவதில், 1985–86லும் இதே வேகம் இருந்து வருகின்றது. கருத்தடை செய்வதற்கு ஊக்குவிப்போருக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 50 கொடுக்கப்படும் என்று அண்மையில் அரசு அறிவித்துள்ளது. 1985–86ஆம் ஆண்டு 4.75 இலட்சம் கருத்தடை அறுவை சிகிச்சைகள் செய்ய வேண்டுமென்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்திருக்க, 31–1–1986 வரையில், 3,77,681 கருத்தடை அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. குடும்ப நலத் திட்ட ஏனைய முறைகளைப் பிரபலப்படுத்துவதிலும் இதே கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

### குடிநீர் வழங்கல்

**16.** சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கக் கூடிய கிருஷ்ணா நதி நீர் திட்டம் தொடர்பான பணிகள் இரண்டு மாநிலங்களிலும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டின் எல்லைக்குள் அமைக்கப்படவிருக்கின்ற கால்வாயின் மொத்த நீளம் 25.275 கி.மீ. ஆகும். இதில், காடுகளல்லாத பகுதிகளில், சுமார் 24 கி.மீ. நீளக் கால்வாய் அமைக்கும் பணி நடந்தேறி வருகின்றது. இக் கால்வாய் அமையவிருக்கும் வனப் பகுதியைக் காப்பு வனப் பட்டியலிலிருந்து நீக்குவதற்கு மத்திய அரசின் அனுமதி வேண்டப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன், வனப் பகுதியில் கால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும். தமிழ்நாடு எல்லைக்குள் கால்வாய் அமைக்கும் பணி தொடர்பாக, இதுவரை ரூ. 5 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதைத் தவிர, தமிழ்நாடு அரசு, இத் திட்டத்திற்குத் தன் பங்குத் தொகையாக, ஆந்திரப் பிரதேச அரசுக்கு, இதுவரையில் ரூ. 47 கோடி வழங்கியுள்ளது.

**17.** குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள ஒவ்வொரு கிராமத்திலும், குறைந்தது ஒரு குடிநீர் ஆதாரமாவது ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு, கிராமப்புறக் குடிநீர் வழங்குத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்தில், தமிழ்நாட்டில், மொத்தம் 14,702 குடியிருப்புகளில் குடிநீர்த் தட்டுப்பாடு இருந்தது. இவற்றுள் 11,614 குடியிருப்புகளில், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுவிட்டன. இருந்தபோதிலும், அடுத்தடுத்த ஆண்டுகளில் பருவமழை பொய்த்ததன் காரணமாகப் பொதுவாக எல்லா இடங்களிலும் நிலத்தடி நீர் மட்டம் இறங்கி விட்டது. இதன் விளைவாகக் குடிநீர்ப் பிரச்சினை உள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை, 14,826ஆக உயர்ந்து விட்டது. இவ்வாறாகப் புதிதாக குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டுள்ள குடியிருப்புகளில், 4,891 குடியிருப்புகளுக்கு, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுவிட்டது. ஆக, ஏழாவது


ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்தில், 13,023 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதிகள் செய்து கொடுக்க வேண்டியுள்ளது. கிராமப் புறக் குடிநீர் வழங்குத் திட்டத்திற்காக, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், ரூ. 175 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1986-87ஆம் ஆண்டிற்கு குறைந்த அளவுத் தேவைகள் திட்டத்தின்கீழ் கிராமப்புறக் குடிநீர் வழங்கு திட்டத்திற்காக ரூ. 30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துடன், கிராமப்புறக் குடிநீர் வழங்கு விரைவுத் திட்டத்தின்கீழ், 1986–87ஆம் ஆண்டில், மேலும் ரூ. 15 கோடி செலவிடப்படும்.

**18.** கடந்த சில ஆண்டுகளில், கிராமப்புறக் குடிநீர் வழங்கு திட்டத்தின்கீழ், ஏராளமான கைப் பம்புகளும் விசைப் பம்புகளும் நிறுவப்பட்டுள்ளன. இவையாவும் சமுதாயச் சொத்துக்கள். எனவே, இவற்றைப் பேணிப் பராமரிக்க வேண்டியது மிக முக்கியம். கைப் பம்புகளையும் விசைப் பம்புகளையும் சீராகப் பராமரித்து வர வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து இவ்வரசு, பராமரிப்பு என்பதன்கீழ் ஒதுக்கப்படும் ஆண்டு மானியத் தொகையை ரூ. 20.70 இலட்சத்திலிருந்து, ரூ. 50.00 இலட்சமாக உயர்த்தியுள்ளது. குறைந்த அளவுத் தேவைகள் திட்டத்துக்கான, ரூ. 24 கோடி நிதியிலிருந்தும், இதற்காக, அரசு, ரூ. 2 கோடி வழங்க முடிவு செய்துள்ளது. எதிர்காலத்தில், குறைந்த அளவுத் தேவைகள் திட்டத்தின்கீழ்ச் செய்யப்படுகின்ற நிதி ஒதுக்கத்தில், 10 விழுக்காடு பராமரிப்புக்கென ஒதுக்கப்படும்.

**19.** உலக வங்கியின் உதவியுடன், 1984–85ஆம் ஆண்டில், ரூ. 149.42 கோடி மொத்தச் செலவில் மேற்கொள்ளப்பட்ட, குடிநீர் வழங்குதல் மற்றும் குறைந்தசெலவிலான துப்புரவுத் திட்டங்கள், செவ்வனே நடந்தேறி வருகின்றன. இத் திட்டங்கள், 4½ ஆண்டுகளில் நிறைவேற்றி முடிக்கப்படும். 1986–87 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இதற்காக, ரூ. 24 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுபோலவே, ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் உதவியுடன், கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களில் ஃபுளூரைடு கலந்த நீர்நிலைகளுடன் கூடிய குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டமும் சீராக நடந்தேறி வருகிறது. 1986–87ஆம் ஆண்டில், இத் திட்டத்திற்காக, ரூ. 4,80.83 இலட்சம் ஒதுக்கப்பட்டது. நகர்ப்பகுதி குடிநீர் வழங்கு திட்டத்தைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே செயற்படுத்தப்பட்டு வருகின்ற 42 திட்டங்களோடு, 1986–87-ல், ரூ. 10,21.25 இலட்சம் செலவில், மேலும் 15 புதிய திட்டங்களை, மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

### வேளாண்மை

**20.** இந்த ஆண்டில் இம் மாநிலத்தில் பருவ மழையின் போக்கு விநோதமாக இருந்தது. ஒருசில பகுதிகளில் கடும் மழை பெய்தது; மற்றப் பகுதிகளில் மழை மிகவும் குறைவாக இருந்தது. பருவ மழையின் இத்தகைய போக்கினால், மாநிலத்திற்கு சங்கடமான நிலை ஏற்பட்டது. தஞ்சாவூர் மாவட்டத்தில், டெல்டா பகுதியில், சம்பா நெல் பயிரைக் காப்பாற்ற, நீர் விடுமாறு கர்நாடக அரசைக் கேட்கும் நிலை ஏற்பட்டது. எனினும், இந்தப் பாதகமான சூழ்நிலையை ஈடு செய்யும் வகையில், இம் மாநிலத்தில் தீவிர கோடைக்காலப் பயிர் சாகுபடித் திட்டம் ஒன்றை, இம் மாநில அரசு மேற்கொண்டது. பாதகமான பருவநிலை இருந்த போதிலும் நெல், சிறுதானியங்கள் ஆகியவற்றின் உற்பத்தியளவு, முறையே 50 இலட்சம் மெட்ரிக் டன், 20 இலட்சம் மெட்ரிக் டன் ஆக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1986–87ஆம் ஆண்டில், உற்பத்தித் திட்டம் முனைப்பாக்கப்பட்டு,



64 இலட்சம் மெட்ரிக் டன் நெல், 24 இலட்ச மெட்ரிக் டன் சிறு தானியங்கள், 4 இலட்சம் மெட்ரிக் டன் பயறுவகைகள், 5.2 இலட்சம் பேல்கள் பருத்தி என்ற உற்பத்தி அளவு கிட்டுமென எதிர்பார்க்கப் படுகிறது.

**21.** டெல்டா பகுதியில் அரசு ஏகபோக கொள்முதல் உரிமையை மேற்கொண்டிருக்கிறது. எனவே, உற்பத்தி ஊக்கத் தொகையைக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 35 ஆக அதிகரித்துள்ளது.

**22.** தமிழ்நாட்டில், இயற்கை வளங்கள் மிகவும் குறைவு. எனவே, மண்வளம், நீர்வளம் போன்ற அடிப்படை இயற்கை வளங்களைப் பொருத்தமான அளவில் பயன்படுத்துவது மிகவும் முக்கியமாகும். நில மேம்பாடு, சிறு பாசனம், மண்வளப் பாதுகாப்புத் திட்டம், பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டம் போன்ற திட்டங்களை மேற்கொள்வதன் மூலம், மண் வளத்தையும், நீர்வளத்தையும் தக்க முறையில் பயன்படுத்த அரசு முயன்று வருகின்றது. பரம்பிக்குளம்-ஆளியாறு பாசனத் திட்டப் பகுதியில் ரூ. 30.98 கோடி செலவில், பண்ணை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கான புதிய திட்டமொன்றுக்கு, அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டத்தின்கீழ் ரூ. 14.15 கோடி செலவில், 1,754 கசிவுநீர்க் குட்டைகள், தடுப்பு அணைகள் ஆகியவை கட்டப்பட்டன. இதனால், கிராமப் பகுதிகளில், வேலைவாய்ப்புக்கள் உருவாகி, நீரை மேலும் சிக்கனமாகப் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

**23.** எண்ணெய் வித்துக்களின் மொத்த உற்பத்தியைப் பெருக்கியும் எண்ணெய் வித்துக்கள் சாகுபடியாகும் பரப்பளவை அதிகரித்தும் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தும், சமையல் எண்ணெய்ப் பற்றாக் குறையை சரி செய்தும் ஏற்றங்காணும் நோக்கத்துடன், எண்ணெய் வித்துக்கள் மேம்பாட்டுத் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. மூல விதைகள் வழங்குவதைப் பெருக்க, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக விஞ்ஞானிகளின் மேற்பார்வையின்கீழ், மூல விதைகளை உற்பத்தி செய்வது உட்பட, விதைப் பண்ணைகள் அனைத்திலும், எண்ணெய் வித்துக்களின் தரமான விதை உற்பத்தியையும் எண்ணெய் வித்துக்கள் துறை மேற்கொண்டிருக்கிறது. 1986–87-ல், 11,990 மெட்ரிக் டன் வேர்க்கடலை விதைகளையும், 120 மெட்ரிக் டன் எள்ளையும், 990 மெட்ரிக் டன் சூரியகாந்தி விதைகளையும், 63 மெட்ரிக் டன் ஆமணக்கு விதைகளையும் வழங்கக் கருதப்பட்டுள்ளது.

**24.** 1986–87-ல், தென்னை வளரும் பரப்பளவை, 1.70 இலட்சம் எக்டேராக அதிகரித்து 172 கோடி நெற்றுக்களை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. 1986–87-ல், 17 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தியை அடையும் வகையில் எண்ணெய் வித்துக்களின்கீழ், 15.12 இலட்சம் எக்டேர் பரப்பளவில், இவை பயிரிடப்படும். 1986–87-ல், எண்ணெய் வித்துக்களுக்கான மொத்த நிதி ஒதுக்கம், தோராயமாக ரூ. 15.39 கோடியாகும்.

### கால்நடை


**25.** கால்நடை வளர்ப்பு, கிராமப்புற பொருளாதாரத்தின் முக்கியமான அங்கமாகும். பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்களில் இது முக்கியமான பங்கு வகிக்கிறது. கிராமங்களை அடிப்படையாகக் கொண்ட இந்தியப் பொருளாதாரத்தில் கால்நடை வளர்ப்பின் முக்கியத்துவத்தை இது உணர்த்துகிறது. எனவே, மாநிலத்தில் கால்நடைகளின் தரத்தை மேம்படுத்த மாநில அரசு பல திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

**26.** தமிழ்நாட்டில், 11 தீவிரக் கால்நடை வளர்ப்புத் திட்டங்களும், 1,220 துணை நிலையங்களைக் கொண்ட 62 மைய கிராமங்களும் செயற்பட்டு வருகின்றன. இவற்றுள், 1985–86-ல் 50 துணை நிலையங்களைக் கொண்ட ஒரு தீவிரக் கால்நடை வளர்ப்புத் திட்டம் உடுமலைப்பேட்டையில் தொடங்கப்பட்டது. 1985–86-ல் (31–12–1985 வரையில்) 3.56 இலட்சம் கால்நடைகளுக்குச் செயற்கை முறையில் கருத்தரிப்புச் செய்யப்பட்டது. தீவிரக் கால்நடை வளர்ப்புப் பகுதியில், 3.25 இலட்சம் செயற்கைக் கருத்தரிப்புகள் சரிபார்க்கப்பட்டன. கால்நடைகளுக்கு இத் திட்டத்தின் மூலம் 77,630 கன்றுகள் பிறந்த விவரமும் நேரில் சரிபார்க்கப்பட்டது.

**27.** 1986–87ஆம் ஆண்டில் செயற்கைக் கருத்தரிப்பு முறையை மேலும் 250 மையங்களுக்கு விரிவுபடுத்த, அரசு முடிவு செய்துள்ளது.

### பாசனம்

**28.** காவிரி நீர் பங்கீட்டுப் பிரச்சினைக்கு, விரைவில் தீர்வு காண, மாநில அரசு, தீவிர அக்கறை கொண்டுள்ளது. தமிழக முதல்வரும், கருநாடக மாநில முதல்வரும் 1984 சனவரி திங்களிலும், 1985 நவம்பர் திங்களிலும் இப் பிரச்சினைபற்றிக் கலந்துரையாடினர். விரைவிலேயே இருதரப்புப் பேச்சு வார்த்தைகள் மீண்டும் தொடரப்பெறவேண்டும். இப் பிரச்சினையில் இருதரப்பாரும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு தீர்வை விரைவிலேயே காண வேண்டுமென்ற முறையில்தான் தமிழக அரசு முயன்று வருகிறது.



**29.** உலக வங்கியின் உதவியுடன் பெரியாறு–வைகை பாசன ஏற்பாட்டை நவீனப்படுத்தும் பெருந்திட்டம் ஒன்றை அரசு மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் முதல் கட்டமாக, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில், 10,305 எக்டேர் பரப்புக்குப் பாசன வசதியை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டது. முதல் கட்டப் பணிகளுக்காக, ரூ. 44.50 கோடி வழங்கப்பட்டுள்ளது. உலக வங்கியின் 23 மில்லியன் டாலர் நிதி உதவியுடன், 1977ஆம் ஆண்டு ஜுலைத் திங்களிலிருந்து இத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முதற்கட்டப் பணிகள், 1984 டிசம்பரில் முடிக்கப்பட்டன. உதவித் தொகையான 23 மில்லியன் டாலர்களும் உலக வங்கியிடமிருந்து ஏற்கெனவே முழுமையாக கிடைத்துவிட்டது.

**30.** இத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்காக, ரூ. 56.86 கோடி செலவிட, அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் கூடுதலாக 7,521 எக்டேர் பரப்பளவுக்குப் பாசன வசதி அளிப்பதே இரண்டாம் கட்டப் பணியின் நோக்கமாகும். இந்த இரண்டாம் கட்டப் பணிக்காக உலக வங்கி, 35 மில்லியன் டாலர் அளிக்கிறது. இரண்டாம் கட்டப் பணிகள், 1988 ஏப்ரல் திங்களுக்குள்ளாக முடிக்கப்படவேண்டும். 1985–86ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூ. 1,439 இலட்சத்தில், 1986ஆம் ஆண்டு சனவரி திங்கள் 31ஆம் நாள் வரையில், ரூ. 1059.77 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**31.** தமிழ்நாட்டில் இயற்கைப் பாசன ஆதாரங்கள் குறைவாகவே உள்ளன. இந்த ஆதாரங்கள் ஏற்கெனவே முடிந்த அளவுக்குப் பயன்படுத்தப்பட்டுவிட்டன. எனவே, எஞ்சியுள்ள பாசன ஆதாரங்களைப் பயன்படுத்த இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய அவசியத்தை அரசு நன்கு உணர்ந்துள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களின்கீழ், 66,000 எக்டேர் நிலத்துக்குப் பாசன வசதியை உருவாக்கத் திட்டமிடப்பட்டிருக்க, 72,720 எக்டேர் நிலப்பரப்புக்குப் பாசன வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. குறைவான பாசன ஆதாரங்களே எஞ்சியிருப்பதால், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், கூடுதலாக 40,000 எக்டேர் நிலத்திற்குப் பாசன வசதிகளை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், இதற்காக ரூ. 154 கோடி செலவாகும்.

**32.** சிறுபாசனத் திட்டத்தின்கீழ், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், 10,900 எக்டேர் நிலத்திற்குப் பாசன வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், ரூ. 13.83 கோடி செலவில், 10,982 எக்டேர் நிலத்திற்குப் பாசன வசதியை ஏற்படுத்த, இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**33.** ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ், ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் நிதியுதவியுடன், தமிழ்நாட்டில், பாசன ஏற்பாட்டின்கீழ் வராத 150 ஏரிகளை, நவீனப்படுத்தும் திட்டம் ஒன்றையும், இவ்வரசு மேற்கொண்டுள்ளது. தண்ணீர்ப் பங்கீடு, உரிய அளவில் இருக்கும் வகையில், பாசன ஆதாரங்களைப் பெருக்குவதே, இத் திட்டத்தின் நோக்கமாகும். தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல்—கட்டுப்பாட்டு அமைப்பை மேலும் சீரமைத்தல் ஆகியவற்றிற்காக ஏரிக் கரைகள், மதகுகள், உபரி நீர் ஏற்பாடு ஆகியவற்றை வலுப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்காக,

1986–87 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூ. 504.7 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**34.** பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக, 1985–86ஆம் ஆண்டுக்கு ஏற்பளிக்கப்பட்ட திருத்தச் செலவு மதிப்பீடு, ரூ. 39.33 கோடியாகும். இதனால் நடப்பாண்டில், கூடுதலாக 20,000 எக்டேர் நிலம் பாசனம் பெறும் என்றும், புன்செய் தானிய உற்பத்தி 49,080 மெட்ரிக் டன்னும், நன்செய் தானிய உற்பத்தி 260 மெட்ரிக் டன்னும் கூடுதலாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றன. பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்காக, 1986–87ஆம் ஆண்டில், ரூ. 39.92 கோடி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில், கூடுதலாக, 17,060 எக்டேர் நிலப் பரப்புக்குப் பாசன வசதிகள் உருவாக்கப்படும். இதனால், புன்செய் தானிய உற்பத்தி, 37,090 மெட்ரிக் டன்னும், நன்செய் தானிய உற்பத்தி 4,052 மெட்ரிக் டன்னும், கூடுதலாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்

**35.** மத்திய அரசு, 1–4–1985 முதல் விரிவான பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்படி, வரையறுக்கப்பட்ட



பகுதிகளில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள், வணிக வங்கிகள், நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள், வட்டார கிராமப்புற வங்கி ஆகியவற்றின் மூலம் நெல், கோதுமை, சிறுதானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பயறு வகைகள் ஆகியவற்றுக்காக வழங்கப்பட்ட பயிர்க் கடனின் 150 விழுக்காடு கட்டாயமாகக் காப்புறுதி செய்யப்பட வேண்டும். இத்திட்டத்தின்கீழ்ச் சேர்த்துக்கொள்ளப்பட்ட சிறு, சொற்ப நில உழவர்கள் தாம் செலுத்திய பிரிமியத் தொகையில் 50 விழுக்காடு என்ற விகிதத்தில் உதவித் தொகை பெறத் தகுதியானவர். இத் திட்டத்தின்கீழ் நெல்-1 1985 பயிர் பருவத்தில் 140 வளர்ச்சி வட்டாரங்களைச் சேர்ந்த 45,000 உழவர்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக தங்கள் பயிர்களைக் காப்புறுதி செய்துள்ளனர்.

### கூட்டுறவு

**36.** கூட்டுறவுச் சங்கங்கள், உழவர்களுக்குத் தொடர்ந்து வேளாண்மை இடுபொருட்கள் வழங்கி வருகின்றன. நடப்பாண்டில், 1985 டிசம்பர் இறுதிவரையில் ரூ. 56.02 கோடி மதிப்புள்ள இரசாயன உரங்கள் உழவர்களுக்கு வினியோகிக்கப்பட்டுள்ளன. 1986–87ஆம் ஆண்டில் ரூ. 82 கோடி மதிப்புள்ள இரசாயன உரங்கள் வினியோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. காய்கறி உற்பத்தியாளர்களுக்கு ஆதாயமான விலையும், நுகர்வோருக்கு நியாயமான விலையில் தரமான காய்கறிகளும் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காகவும், முதலமைச்சர் குழந்தைகள் மதிய சத்துணவுத் திட்டத்தைச் செவ்விய முறையில் செயற்படுத்துவதற்காகவும், காய்கறி உற்பத்தியாளர்களுக்கென்றே, வளர்ச்சி வட்டாரத்திற்கு ஒன்று என்ற வீதத்தில் மொத்தம் 516 காய்கறி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### காட்டு வளமும் தோட்ட வளமும்

**37.** சுவீடன் அனைத்து நாட்டு மேம்பாட்டு அமைப்பின் உதவி பெறும் சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் முதல் நிலை, 31–3–1987 வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது. 1986–87ஆம் ஆண்டில் பொது மக்களின் ஒத்துழைப்புடன் 21,268 எக்டேர் பரப்பளவிலும் 610 கி.மீ. அளவிலும் மரங்கள் வளர்க்கத் திட்டமிடப்பட்டு செயற்பட்டு வருகின்றது.

**38.** சமூகக் காடு வளர்ப்புத் திட்டம், காப்பு வனங்களுக்கு வெளியே செயற்படுத்தப்படுகிறது. குறிப்பாக, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கிராமப்புற வேலைவாய்ப்பு தேசிய திட்டம், கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்புறுதித் திட்டம் ஆகியவற்றின் மூலமாகச் சமுதாய நிலங்களில், மரங்களை வளர்க்கும் திட்டம், அதிக அளவில் எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது. 24 கோடி மரக்கன்றுகளை நடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில், தேசிய தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கிராமப்புற வேலைவாய்ப்பு தேசிய திட்டம், கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டம் ஆகியவற்றுக்கான நிதிகளிலிருந்து 15 கோடி மரக்கன்றுகள் நடப்படும். எஞ்சிய 9 கோடி மரக்கன்றுகள், சுவீடன் அனைத்து நாட்டு மேம்பாட்டு அமைப்பின் உதவியுடன் செயற்படுத்தப்படும் சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழும் ஏனைய திட்டங்களின்கீழும் நடப்படும்.

**39.** தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் செவ்விய முறையில் செயற்பட்டு வருகின்றது என்பதும், அது இதுவரையில் தனக்கு ஏற்பட்ட இழப்பு முழுவதையும், ஈடு செய்து, இப்போது ஆதாயத்தில் இயங்கி வருகின்றது என்பதும் மகிழ்ச்சிக்குரியது. இக் கழகம், 1985–86ஆம் ஆண்டில், 42,800 டாலர் மதிப்புள்ள, அதாவது ரூ. 5.35 இலட்சம் மதிப்புள்ள, தேயிலையை ஏற்றுமதி செய்துள்ளது.

### உணவு

**40.** நமது மாநிலத்தில் இந்த ஆண்டில் நிலவிய கடுமையான பருவ நிலைமை காரணமாக உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டது. கொள்முதல் அளவை அதிகரிக்க காவிரி டெல்டா பகுதிகளில், ஏகபோக கொள்முதலை, அரசு, 1–11–1985ஆம் நாளிலிருந்து கொண்டுவந்தது. இருப்பினும், இப் பகுதிகளில் விவசாயிகளுக்கு மேலும் ஊக்கத் தொகை வழங்க வேண்டுமென்ற நோக்கத்தில், உற்பத்தி ஊக்கத் தொகை குவின்டால் ஒன்றுக்கு ரூ. 20-லிருந்து ரூ. 35 ஆக உயர்த்தப்பட்டது. குறுவை பருவத்தில், அரசு 2.9 இலட்சம் டன் அரிசியைக் கொள்முதல் செய்தது. சம்பா பருவத்திற்கும் இதே நடைமுறையைப் பின்பற்ற வேண்டியிருந்தது. இத்துடன், கொள்முதலை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மத்திய தொகுப்பிலிருந்து மாதந்தோறும் ஒதுக்கப்படும் அளவை அதிகரிக்க வேண்டுமென, மாநில அரசு, மத்திய அரசிடம் கேட்டது. மத்திய தொகுப்பிலிருந்து மத்திய அரசு ஓரளவுக்கு ஒதுக்கீட்டின் அளவை இப்போது அதிகரித்துத் தந்துள்ளது.

**41.** மத்திய அரசு அளிக்கக்கூடிய தனிக் கூடுதல் ஒதுக்கீடு, 1986 சனவரிக்கும் நீட்டிக்கப்பட்டது.

வழக்கமாக வழங்கப்படும் 40,000 டன் அரிசிக்குமேல் கூடுதலாக 25,000 டன் அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

**42.** நெல் உற்பத்தியில் குறைவு ஏற்பட்டதனால், திங்கள் ஒன்றுக்கு ஒரு அட்டைதாரருக்கு அதிக அளவாக வழங்கப்பட்டு வந்த 20 கிலோ அரிசியை, அரசு, 12 கிலோவாகக் குறைத்துள்ளது. ஆனால், ஒரு சிறுவருக்கு அல்லது வயது வந்த ஒருவருக்கு வழங்கப்பட்டு வந்த அளவு மாற்றப்படவில்லை. இந்த திருத்த அளவு வீதங்கள் 1–11–1985 முதல் செயலுக்குக் கொண்டு வரப்பட்டன. 15–9–1984ஆம் நாளுக்கு முன்னர் கிராமப் பகுதிகளில் அட்டைதாரர் 6 கிலோ அரிசியை பெறத் தகுதியுடையவராவார். இந்த அளவோடு ஒப்பிட்டுப் பார்த்தால், தற்போதைய அளவு தாராளமானதாக இருக்கிறது.

**43.** தமிழ்நாட்டில், நீண்டகாலமாக, வலுவான பொது விநியோகமுறை உள்ளது. இது 20,723 நியாயவிலைக் கடைகள் மூலம் செயற்படுத்தப் படுகிறது. இவற்றில் 15,648 கடைகளைக் கூட்டுறவுச் சங்கங்களும், 5,011 கடைகளைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், 64 நியாயவிலைக் கடைகளைத் தனியார் நிர்வாகங்கள், மலைத் தோட்ட நிர்வாகங்கள் போன்ற ஏனைய அமைப்புகளும் நடத்துகின்றன. ஒரு கடைக்கான சராசரி குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 575 என்று கணக்கிடப் பட்டுள்ளது. பல நியாய விலைக் கடைகள் ஆதாய மற்ற நிலையில் செயற்படுகின்றன. ஆகையால், நியாயவிலைக் கடைகளை நடத்த ஒவ்வோர் ஆண்டும் அரசு உதவித் தொகையாக ரூ. 3 கோடி செலவிடுகிறது. 1985ஆம் ஆண்டில், 11.05 இலட்சம் டன் அரிசி, குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டது. இத்துடன், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ் 2.19 இலட்சம் டன் அரிசி வழங்கப் பட்டது.

**44.** பொதுவான ரக அரிசியின் விலை 1981 பிப்ரவரியில் நிர்ணயிக்கப்பட்டது. அதன் பின்னர், மத்திய அரசு நெல் கொள்முதல் விலையையும் அரிசி விற்பனை விலையையும் 5 முறை உயர்த்தியுள்ளது. இருப்பினும், பொதுவான ரக அரிசியைப் பொறுத்த மட்டில், கிலோ ஒன்றுக்கு ரூ. 1.75 என்ற மிகக் குறைவான விலையையே மாநில அரசு பின்பற்றி வருகிறது. பொது விநியோக முறையில், குறைவான விலையில் அரிசி விற்பனை செய்யப்படுவதால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு, வழங்கப்படும் உதவித் தொகை வகையில் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 100 கோடி செலவுப் பொறுப்பு ஏற்பட்டுள்ளது.

## பொது விநியோகம்

**45.** இம் மாநிலத்தில், விலை நிலைமையைக் கண்காணிப்பதற்கு, அரசு, தீவிர முயற்சிகளை எடுத்து வந்துள்ளது. மத்திய அரசின் வரிவிதிப்பு நிதிக் கொள்கைகளும் நாட்டின் மொத்த உற்பத்தி அளவும் விலை நிலவரத்தைப் பாதிப்பதால் இதில் மாநில அரசின் பங்கு வெகுவாகக் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. எனினும், மாநில அரசைப் பொறுத்தவரையில், பொது விநியோக முறை மூலம் விற்பனையைச் சரிவர முறைப்படுத்துவதைக் கண்காணித்து, விலையைக் கட்டுப்பாட்டில் வைத்துவர முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. மோசமான பருவநிலை இருந்தபோதிலும், பொது விநியோக முறை மூலம் விற்பனை செய்ததால், அரிசியின் விலையேற்றம் வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டது. இவ்வாறாக, 1985 மே திங்களுக்கும் 1985 செப்டம்பர் திங்களுக்குமிடையே அரிசி விலை அதிகரித்தபோதிலும், சென்ற சில மாதங்களில் அரிசிவிலை கட்டுப்படுத்தப்பட்டு வந்துள்ளது. நடப்பு அறுவடைப் பருவத்தில், விலை, மேலும் சரியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கோதுமை, கோதுமைப் பொருட்கள், சமையல் எண்ணெய், தேயிலை ஆகியவற்றின் விலைகளும் குறைந்திருக்கின்றன. பயறு வகைகள், காய்கறிகளின் விலை, குறிப்பிட்ட காலத்தில் ஏற்பட்ட விலை ஏற்ற இறக்கத்தைத் தவிர, மற்றப்படி ஒரே சீராக இருந்து வருகின்றது. விலைகளின் ஏற்றத்தைக் கட்டுப்படுத்த, இந்த அரசு போதிய அளவு கண்காணிப்புப் பணியை முறையாக மேற்கொண்டு வருகிறது.

## மீனளம்

**46.** வீடுகள் தேவைப்படும் மீனவர்களுக்கு அவற்றைக் கட்டித் தருவதற்கு இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் இந்த அரசு எடுத்து வருகிறது. இது வரை, 11,404 வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது. 9,738 வீடுகள் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1986–87 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இதற்காக ரூ. 50 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.



## தொழில்கள்

**47.** தமிழ்நாட்டில், மத்திய அரசு, அதிக அளவு முதலீடு செய்ய வேண்டுமென்ற கருத்தை மாநில அரசு அடிக்கடி வலியுறுத்தி வருகின்றது. காந்த நாடாக்களை ரூ. 10 கோடி முதலீட்டில் தயாரிப்பதற்காக இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனத்திற்கு, மத்திய அரசு, அண்மையில் இசைவுக் கடிதத்தை வழங்கியுள்ளது. கனரக வாகனத் தொழிற்சாலை, சேலம் உருக்காலை, சென்னை உரத் தொழிற்சாலை போன்ற ஏனைய மத்திய அரசுத் துறைத் திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன. மத்திய அரசுத் துறைத் திட்டங்களின் விரிவுத் திட்டத்திற்கு, நாம் நிலங்களை இலவசமாகக் கொடுத்துள்ளோம். தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்திலுள்ள சுழல் உலை ஆலை, ரூ.765 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளது. இதன் வணிக உற்பத்தி விரைவில் தொடங்கப்படும். முழுக்க முழுக்க ஏற்றுமதி நோக்கில், கருங்கல்லைச் செதுக்கி மெருகேற்றும் தொழிற்சாலையை, ரூ. 640 இலட்சம் செலவில் மணலியில் அமைப்பது சம்பந்தப் பட்ட பணிகள் முடிவடைந்துவிட்டன. இத் தொழிற்சாலை, தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் ஒரு பிரிவாகும். இது விரைவிலேயே வணிக ரீதியான உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. தமிழ்நாட்டிலுள்ள தொழில் நிதி நிறுவனங்கள், ஆதாயம் ஈட்டத் தொடங்கியுள்ளன. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் 1984–85 வரை ரூ. 121 இலட்சம் திரண்ட ஆதாயத்தை ஈட்டியுள்ளது. 1984–85 ல் தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறு

வனம் (SIPCOT) ரூ. 116 இலட்சம் நிகர ஆதாயம் ஈட்டியுள்ளது. படித்து வேலையற்றிருப்பவர்களுக்குச் சுய வேலை வாய்ப்பு அளிக்கும் பிரதமரின் திட்டத்தின்கீழ், நாம் இலக்கைத் தாண்டி விட்டோம். இத் திட்டத்தின்கீழ், 1984—85-ல், 22,500 பேருக்குச் சுய வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

### வேலை வாய்ப்புப் பணி


**48.** நாளுக்கு நாள் பெருகி வரும் தொழில் வளர்ச்சியின் காரணமாக, தனித் திறம் பெற்ற பணியாளர்களுக்கான தேவை அதிகரித்து வருகிறது. தற்போது, நமது மாநிலத்தில், 40 தொழில் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன. இவற்றில், 5 நிறுவனங்கள் மகளிருக்கானவை. இந் நிறுவனங்களில், மொத்தம் 15,120 மாணவ, மாணவியர் பயிலுகின்றனர். இருந்தாலும், பெருகி வரும் பணியாளர் தேவையைச் சமாளிக்க 1986—87-ல், மேலும் இரண்டு தொழில் பயிற்சி நிறுவனங்களைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது.

### கதர்-கிராமத் தொழில்கள்

**49.** கிராமப் புறங்களில் தன்னிறைவை ஏற்படுத்துவதற்கு, அரசு, அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. தொழில் உற்பத்தியைப் பொறுத்த வரையில், கதர்-கிராமத் தொழில்கள் வாரியம், மக்கள் அன்றாடம் பயன்படுத்துகின்ற பொருட்களை உற்பத்தி செய்வதில் முக்கியப் பங்கு ஆற்றுகிறது. கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பற்றவர்களுக்கும் உரிய வேலைவாய்ப்புக் கிடைக்காதவர்களுக்கும், பெருமளவில் வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவதில் இவ் வாரியம் முக்கியப் பங்காற்றி வருகிறது. இவ் வாரியம் தன் பொறுப்பின்கீழ் உள்ள பிரிவுகள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் மூலம் கதர்த் தொழிலையும் கிராமத் தொழில்களையும் வளர்த்து, அதன்மூலம், கிராமப்புறங்களில் உள்ள நலிந்த பிரிவினருக்கு, அந்தந்தக் கிராமங்களிலேயே, கிடைக்கின்ற கச்சாப் பொருட்களைக் கொண்டு, சிறிய மூலதன முதலீட்டுடன் வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருகிறது.

**50.** இவ் வாரியம், 1984—85ஆம் ஆண்டில், ரூ. 108.82 கோடி மதிப்புள்ள பொருட்களை உற்பத்தி செய்தது. 1985—86ஆம் ஆண்டில் இது ரூ. 119 கோடியாக உயர்ந்துள்ளது. 1986—87ஆம் ஆண்டில் ரூ. 130 கோடி மதிப்புள்ள பொருட்கள், கதர்-கிராமத் தொழில் வாரியத்தால் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**51.** 1984—85ஆம் ஆண்டில், ரூ. 105 கோடி மதிப்புள்ள கதர், கிராமத் தொழில் உற்பத்திப் பொருட்கள் உற்பத்தியாகியுள்ளன. 1985-86-ல் ரூ. 125 கோடி மதிப்புள்ள பொருட்கள் விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1986—87-ல் ரூ. 137 கோடி மதிப்புள்ள கதர்-கிராமத் தொழில் உற்பத்திப் பொருட்கள் விற்பனையாகும் என மதிப்பிடப் பட்டுள்ளது. இதுவரை, இவ் வாரியம் 6.03 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்துள்ளது. 1985—86-ல் மேலும் 63,000 பேர் இவ் வாரியத்தின் மூலம் வேலைவாய்ப்புப் பெறுவர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1986—87ஆம் ஆண்டு முடிய 7.33 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரத் திட்டமிடப்பட்டுள்ளது.



### கைத்தறி

**52.** நெடுங்காலமாகவே, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில், கைத்தறித் தொழில், மிக முக்கியமான பங்காற்றி வந்துள்ளது. இத் தொழில், ஏராளமான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து வருகிறது. எனவே, இத் தொழிலில், மாநில அரசு, மிகுந்த அக்கறை காட்டி வருகிறது. இம் மாநிலத்தில், மொத்தம் 5.56 இலட்சம் தறிகள் உள்ளன. இவற்றுள் 3.82 இலட்சம் தறிகள், ஏற்கெனவே 1,600 தொடக்க நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் கொண்டு வரப்பட்டு விட்டன. கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் வருகின்ற நெசவாளர்களின் நூல் தேவையை, மாநிலத்திலுள்ள 17 கூட்டுறவு நூற்பாலைகள் நிறைவு செய்து வருகின்றன. 1986—87-ல் கைத்தறித் துறையின்கீழ்த் தள்ளுபடிக்காகவும் உதவித் தொகைக்காவும் அரசு ரூ. 16.00 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த உறுப்பினர்களுக்காக, அரசு, சேமிப்பு-பாதுகாப்புத் திட்டம் ஒன்றை நிறைவேற்றி வருகிறது. இத் திட்டத்தின்கீழ் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட நெசவாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

### மின்சக்தி


**53.** நமது மாநிலம், சீரான பொருளாதார வளர்ச்சி அடையவேண்டுமானால், மின்சாரப் பற்றாக்குறையின் பிடியில் சிக்காமல் இருக்க வேண்டியது அவசியம். இதனைக் கருத்திற்கொண்டு, ஏழாவது திட்டத்தில் மொத்தத் திட்ட நிதி ஒதுக்கமான ரூ. 5,750 கோடியில், மின்சக்தித் துறைக்கு ரூ. 2,000 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது. 1985—86-ல் மின்சக்தித் துறைக்கு ரூ. 300 கோடி ஒதுக்கப்பட்டது. இது 1986—87-ல் ரூ. 395 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

**54.** நிறைவேற்றப்பட்டுவரும் திட்டங்களான சேர்வலாறு புனல்மின் திட்டம் (20 மெ. வா.), காடம்பாறை நீரேற்றுத் திட்டம் (400 மெ. வா.), கீழ்மேட்டூர் புனல்மின் திட்டம் (120 மெ.வா.), குந்தா மின் உற்பத்தி நிலையம்-V (20 மெ. வா.), மேட்டூர் அனல்மின் திட்டம் நிலை-I (420 மெ. வா.) ஆகியவை ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதிக்குள் தொடங்கப்படும். நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட்ட புதிய திட்டங்களில், மேட்டூர் அனல்மின் திட்டம் நிலை II-ன் ஒரு பிரிவு (420 மெ. வாட்டில் 210 மெ.வா.), தூத்துக்குடி விரிவுத் திட்டத்தின் ஒரு பிரிவு (420 மெ. வாட்டில் 210 மெ. வா.), நுண்ணிய புனல்மின் திட்டங்கள் மூன்று (16 மெ. வா.) ஆகியவை ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொடங்கப்படும். மாநில அரசுத் துறையின்கீழ் மொத்தம் 1,416 மெ.வா. உற்பத்தி செய்யப்படும். மேலும், ஏழாவது திட்டத்தில் வடசென்னை அனல்மின் திட்டத்தைச் (630 மெ.வா.) செயற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. எனினும், இதன்

பயன்கள் எட்டாவது திட்டக் காலத்தில்தான் கிடைக்கும். இத்துடன், கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் இரண்டாவது பிரிவு, நெய்வேலி இரண்டாவது அனல்மின் நிலையம் (இது கட்டப்பட்டு வருகிறது), ஆந்திர மாநிலத்திலுள்ள ராமகுண்டம் உயர் அனல்மின் நிலையம் ஆகியவற்றிலிருந்து மின்சக்தியைப் பெறும். மாநில-மத்திய அரசுத் துறைத் திட்டங்களிலிருந்து தமிழ் நாட்டின் பயனுக்குக் கிடைக்கும் மொத்த நிறுவு திறன் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்தில், 3,344 மெ. வாட்டாக இருந்தது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில், இது, 5,184 மெ. வாட்டாக உயரும்.

**55.** நடப்பாண்டில், இம் மாநிலத்தில் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தென்மேற்குப் பருவ மழையும், வடகிழக்குப் பருவமழையும் பொய்த்ததால், மாநிலத்தின் மின்சக்தி உற்பத்தியின் அளவு குறைந்தது. இந்த ஆண்டில் 1985 ஜூலையிலிருந்து 1986 சனவரி இறுதி வரையிலான மின் உற்பத்தி, 10 ஆண்டு சராசரியுடன் ஒப்பிடுகையில், 1,035 மி. யூனிட் குறைந்தது.

**56.** எண்ணூர், தூத்துக்குடி அனல்மின்நிலையங்களைப் புதுப்பித்து நவீனப்படுத்த, வாரியம் தீவிர நடவடிக்கை எடுத்ததனால், இவற்றின் செயல்திறன் இந்த ஆண்டு வெகுவாக மேம்பாடு அடைந்துள்ளது. தூத்துக்குடி அனல்மின் நிலையம், 1985–86-ல், 65 விழுக்காடு PLF-ஐ அடைந்தது. இந் நிலையம், 1983–84-ல், 51.5 விழுக்காட்டையும் 1984–85-ல் 62 விழுக்காட்டையும் ஒப்பிடுகையில், ஆண்டு முழுவதற்கும் 67 விழுக்காடு PLF-ஐ அடையும். எண்ணூர் அனல்மின் நிலையத்தைப் பொறுத்தவரை, ரூ. 100.10 கோடி செலவில் விரிவான புதுப்பித்தல் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் பயன்கள் ஏற்கெனவே கிடைக்கத் தொடங்கியுள்ளன. தொடங்கப்பட்டதிலிருந்து பல பிரச்சினைகளை எதிர்நோக்கிய இந் நிலையம், கடந்த ஆண்டு வரை, 36 விழுக்காடு PLF-ஐ மட்டுமே எய்தியுள்ளது. 1985–86-ல், அடைந்த PLF 50 விழுக்காடு ஆகும். ஆண்டு முழுவதற்குமான PLF 51 விழுக்காடு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



**57.** அனல் மின் நிலையங்கள் சிறந்த சாதனைகளை ஆற்றியதோடு, கல்பாக்கம் அணு மின் நிலையத்தில், 1985ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20ஆம் நாளன்று தொடங்கி வைக்கப்பட்ட இரண்டாவது பிரிவிலிருந்து கூடுதலாக (235 மெ. வா.) மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கவில்லையானால், இம் மாநிலத்தில் மின் பற்றாக்குறை இன்னும் அதிகமாக இருந்திருக்கும். தற்போது உயர் அழுத்த மின் சக்தி தேவைப்படும் 1,000 தொழிற்சாலைகளுக்கு 40 விழுக்காடு மின் வெட்டு உள்ளது. விவசாயிகளுக்கு இரு முறைமாற்று திட்டத்தின்கீழ்ப் பகலில் 6 மணி நேரமும், இரவில் 8 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்படுகிறது. நெய்வேலியிலுள்ள இரண்டாவது அனல் மின் நிலையத்தின் முதல் பிரிவு 1986 ஏப்ரலில், செயல்படத் தொடங்கியவுடன், மின்சார நிலைமை-சீரடையக்கூடும்.

**58.** இயக்கச் செலவுகளைக் குறைக்க மின் வாரியமும், அரசும் கவனம் செலுத்தி வருகின்றன. இயக்கச் செலவைக் குறைக்கப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எண்ணூர்-தூத்துக்குடி அனல் மின் நிலையங்கள், மின் உற்பத்திக்காகப் பயன் படுத்தும் எண்ணெய் அளவு, குறைந்துள்ளது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தைப் பொறுத்தமட்டில், மின் உற்பத்திக்காகப் பயன்படுத்தக் கூடிய எண்ணெய் அளவு 1983–84-ல், ஒரு பிரிவிற்கு 57 மில்லியன் லிட்டர் என்றிருந்தது. 1984–85-ல் ஒரு பிரிவிற்கு 48 மில்லியன் லிட்டர் ஆகக் குறைந்தது. 1985–86இல் இதுவரை ஒரு பிரிவிற்கு 12.06 மில்லியன் லிட்டர் மட்டுமே ஆகியுள்ளது. எண்ணூர் அனல் மின் நிலையத்தில்கூட பயன்படுத்தப்படும் எண்ணெய் அளவு, ஒரு பிரிவிற்கு 7.8 மில்லியன் லிட்டர் குறைந்துள்ளது.

**59.** அண்மையில் தொழிலாளர் சங்கங்களுடன் செய்து கொண்ட ஊதியத் திருத்த ஒப்பந்தத்தில், முதல் முறையாக ஊதியத் திருத்தத்துடன் தொழிலாளர்களுக்கான பணிச் சுமை குறித்தும் விவாதிக்கப்பட்டு, அதிகப் பணி அளவு கோட்பாடு கொண்டு வரப்பட்டுள்ளது.

**60.** செலவைக் குறைக்க நடவடிக்கைகள் மேற்கொண்ட போதிலும், நிலக்கரி, எண்ணெய் ஆகியவற்றின் விலையும், சரக்குக் கட்டணமும், மின்சக்தி வாங்குவதற்கான செலவும், அடிக்கடி உயர்வதனால், மின் வாரியத்தின் நிதி நிலை கடும் சுமைக்குள்ளாகியுள்ளது. 1986ஆம் ஆண்டு சனவரி திங்கள் 9ஆம் நாள் முதல், நிலக்கரியின் விலை டன் ஒன்றுக்கு ரூ. 28 அதிகரித்ததால், 1985–86ஆம் ஆண்டில் ரூ. 2.47 கோடியும், 1986–87-ல் ரூ. 10.71 கோடியும் கூடுதல் செலவு ஏற்படும்.

## போக்குவரத்து

**61.** திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டு, 1–4–1985-லிருந்து தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழகம் என்ற பெயரில் புதிய போக்குவரத்துக் கழகம் ஒன்று தொடங்கப்பட்டது. அண்ணா மாவட்டத்தைச் சேர்ந்த பொது மக்களின் போக்குவரத்து வசதிக்காக திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு, மற்றொரு புதிய போக்குவரத்துக் கழகம் தொடங்கப்படவிருக்கிறது. மதுரையை ஆண்ட புகழ்வாய்ந்த இராணி மங்கம்மாளின் பெயர் அதற்குச் சூட்டப்படும்.

## தொழிலாளர் நலன்

**62.** தொழிலாளர்களுடன் நல்லுறவு தொடர்ந்து நிலவச் செய்வதில் மாநில அரசு முக்கிய பங்காற்றி வருகிறது. அரசு தலையிட்டதின்பேரில், தமிழ் நாட்டிலுள்ள பஞ்சாலைத் தொழிலாளர்கள் மேற்கொள்ளவிருந்த வேலை நிறுத்தம் தவிர்க்கப்பட்டது. 20 அம்சத் திட்டத்தின்கீழ், தமிழ் நாட்டில், இதுவரை

ரூ. 44.45 இலட்சம் மொத்தச் செலவில் 32,575 கொத்தடிமைகளுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டது. 1985—86-ல் 1,100 கொத்தடிமைகளுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க, இம் மாநில அரசு, 1,109 கொத்தடிமைகளுக்கு மறுவாழ்வு அளித்துள்ளது.


ஊரக வளர்ச்சி

**63.** ஊரகப் பகுதிகளில் நிலவும் வறுமையை அகற்றுவது இவ்வரசின் முக்கியமானதொரு நோக்கமாகும். இதனைக் கருத்திற் கொண்டு மத்திய அரசும் பல திட்டங்களைத் தீட்டியுள்ளது. தமிழ் நாட்டில் வறுமை ஒழிப்புத் திட்டம் முனைப்புடன் செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ரூ. 1,46.61 கோடி செலவிடப்பட்டது. கிராமப்புறத்து மக்கள் ஆதாயந்தரும் தொழில்களில் ஈடுபட்டுத் தங்களின் பொருளாதார நிலையை உயர்த்திக்கொள்வதற்காகச் சுமார் 13,96,016 பேருக்கு உதவி அளிக்கப்பட்டது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும், இத் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படும். 1985—86ஆம் ஆண்டில் சுமார் 2 இலட்சம் குடும்பங்களுக்கு உதவி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1986—87ஆம் ஆண்டில் இத் திட்டத்திற்காக மொத்தம் ரூ. 29.22 கோடி ஒதுக்கப்படும்.

**64.** கிராமப்புற வேலைவாய்ப்பு தேசியத் திட்டம், மத்திய அரசும் மாநில அரசும் சம அளவில் செலவுப் பொறுப்பேற்கும் மற்றொரு திட்டமாகும். இத் திட்டத்தின்கீழ்க் கிராமப்புறங்களில் அதிக வேலைவாய்ப்பில்லாத காலங்களில், அங்குள்ள மக்களுக்கு ஆதாயகரமான வேலைவாய்ப்பு அளிக்கப்படும். இதைத் தவிர, இத் திட்டத்தின்கீழ்ச் சாலைகள், பள்ளிக் கட்டடங்கள், சமுதாய நலக் கூடங்கள் போன்ற நிலையான சமுதாய சொத்துக்களை உருவாக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஆறாவது திட்டக் காலத்தில், 1980—81 முதல் 1984—85 வரை, ரூ. 1,64.18 கோடி செலவிடப்பட்டு, 17,98.05 இலட்சம் உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டன. இத் திட்டம், ஏழாவது திட்டக் காலத்திலும் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. 287 இலட்சம் உழைப்பு நாட்களை உருவாக்க 1985—86ஆம் ஆண்டுக்கு, மொத்தம், ரூ. 47.72 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1986 பிப்ரவரி இறுதி வரையிலான கால அளவில், 216.75 இலட்சம் உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 1986—87-ல், இத் திட்டத்திற்கு, ரூ. 40.88 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்படும்.

**65.** சிறு, சொற்ப நில உழவர்களுக்கு உதவும் பெருந் திட்டம் ஒன்றையும் மாநில அரசு செயற்படுத்தி வருகிறது. இத் திட்டத்தின்கீழ்ச் சிறு உழவர்களுக்கும், சொற்ப நில உழவர்களுக்கும் சிறுபாசனம், கிணறுகள், விசையேற்றங்கள், நில மேம்பாடு, வேளாண்மை இடுபொருட்கள் ஆகியவற்றிற்காக உதவித் தொகை வழங்கப்படுகிறது. மத்திய அரசும், மாநில அரசும் இத் திட்டத்திற்குச் சம அளவில் நிதி உதவி அளிக்கின்றன. இத் திட்டம், 1983—84-ல் தொடங்கப்பட்டது. அந்த ஆண்டில் இத் திட்டத்தின்கீழ் 28,303 சிறு, சொற்ப நில உழவர்களுக்கு உதவுவதற்காக ரூ. 972.41 இலட்சம் செலவிடப்பட்டது. 1984—85ஆம் ஆண்டில் ரூ. 14,19.36 இலட்சம் செலவிடப்பட்டது. இத் திட்டத்தால் 55,960 சிறு, சொற்ப நில உழவர்கள் பயன்பெற்றனர். 1985—86-ல் (1986 பிப்ரவரி வரை) ரூ. 571.95 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது. 28,457 சிறு, சொற்ப நில உழவர்கள் பயனடைந்துள்ளனர்.

**66.** கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தருவதற்காகச் செயற்படுத்தப்படும் மற்றொரு பெருந் திட்டம், கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டமாகும். இது ஒரு மத்திய அரசு



பொறுப்பேற்கும் திட்டமாகும். இத் திட்டத்தின்கீழ், நிலமற்ற குடும்பத்தில் ஒருவருக்காவது வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் ஆகியோருக்காகத் தொகுப்பு வீடுகள் கட்டித்தருவது இத் திட்டத்தின் மற்றொரு முக்கியமான அம்சமாகும். 1985—86-ல், ரூ. 10.44 கோடி செலவில், 11,000 வீடுகள் கட்டுவதற்கான திட்டம் ஒன்றை அரசு மேற்கொண்டது. இந்த வீடுகள், பின்னர் இலவசமாக இவர்களுக்கு வழங்கப்படும். 1983—84, 1984—85 ஆண்டுகளில், இம் மாநிலத்திற்கு முறையே ரூ. 8.90 கோடி, ரூ. 44.50 கோடி ஒதுக்கப்பட்டன. 1985—86-ல் மத்திய அரசு, ரூ. 44.44 கோடி ரொக்கமாகவும், ரூ. 6·72 கோடி மதிப்புள்ள கோதுமையையும் வழங்கியுள்ளது. 1985—86-ல் 304.90 இலட்சம் உழைப்பு நாட்களை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1986—87-ல், இத் திட்டத்திற்காக ரூ. 34·35 கோடி ரொக்கமும் 79,000 மெட்ரிக் டன் உணவு தானியமும் செலவிடப்படும்.

காவல் துறை

**67.** சட்டம்-ஒழுங்கைச் சரிவரப் பராமரிப்பதற்காக காவல் படையை நவீனப்படுத்தி, வலுப்படுத்த மாநில அரசு இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்து வருகிறது. 1985—86ஆம் ஆண்டில் ரூ. 3.56 கோடி மொத்தச் செலவில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் மேலும் இரு அணிகள் ஏற்படுத்த அரசு அனுமதித்துள்ளது.

நீதிமன்றங்கள்

**68.** வழக்குகளை விரைவில் முடிப்பதற்காக நாகப்பட்டினத்திலும் இராமநாதபுரத்திலும் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

வருவாய்த் துறை

**69.** மாவட்டத்தின் நிர்வாகத்தை நெறிப்படுத்தித் திறமையை அதிகரிப்பதற்காக, அரசு, 1985-ல், காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம், அண்ணா மாவட்டம் என்று மூன்று மாவட்டங்களையும், பரமக்குடி, பழனி, கோடைக்கானல் ஆகிய மூன்று வருவாய்க் கோட்டங்களையும், வாடிப்பட்டி வட்டம் என்றொரு புதிய வட்டத்தையும் நடைமுறைக்குக் கொண்டுவந்தது. தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி வருவாய்க் கோட்டமும், செங்கற்பட்டு மாவட்டத்தில் செய்யூர் வட்டமும் விரைவிலேயே தொடங்கப்படும். ஆளுநர் அவர்கள் சட்ட மன்றத்தின் கூட்டு அவையில் ஆற்றிய உரையில் குறிப்பிட்டதைப் போலவே, திருநெல்வேலி மாவட்டத்தையும், வடஆர்க்காடு மாவட்டத்தையும், 1986—87-ல் இரண்டாகப் பிரிக்கக் கருதப்பட்டுள்ளது.

புதிதாக ஒரு மாவட்டம் அமைக்க, அரசுக்குத் தோராயமாக, தொடர் இனச் செலவாக ரூ. 3.5 கோடியும், தொடரா இனச் செலவாக ரூ. 11 கோடியும் ஆகும். இருந்தபோதிலும், கட்டடங்களுக்கான விரிவான மதிப்பீடுகளும், பணியாளர்களுக்கான குடியிருப்புகள் பற்றிய செயற்குறிப்புகளும் இன்னும் இறுதி செய்யப்படவில்லையாதலால், வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், அடையாள நிதி ஒதுக்கம் மட்டுமே செய்யப்பட்டுள்ளது. 1986–87ஆம் ஆண்டில், இதற்குத் தேவையான கூடுதல் நிதிகள் வழங்கப்படும்.

### நிறுவன நிதி

**70.** முன்னுரிமைத் துறைகளுக்கு வழங்கப்படும் முன்பணங்கள், வேறுபாட்டு வட்டி வீதங்கள் அடிப்படையில் வழங்கப்படும் முன்பணங்கள், நலிந்த பிரிவினருக்கு வழங்கப்படும் முன்பணங்கள் ஆகியவற்றிற்காக இந்திய ரிசர்வ் வங்கி நிர்ணயித்துள்ள



வரையறைகளை தமிழ்நாடு விஞ்சியுள்ளது. 1985 நவம்பர் வரை நலிந்த பிரிவைச் சேர்ந்த 6.35 இலட்சம் பேருக்கு ரூ. 1,63.71 கோடி அளவுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

### அறக்கட்டளைகள்

**71.** ஆலயங்களின் பராமரிப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன், இவ்வரசு, கோவில்களையும் குளங்களையும் பழுது பார்த்துச் சீரமைத்துத் திருப்பணி செய்வதற்கென, 1986–87ஆம் ஆண்டில் ரூ. 15 இலட்சம் மானியம் வழங்க முடிவு செய்துள்ளது.

### ஆதி திராவிடர் நலம்

**72.** ஆதி திராவிடர் முன்னேற்றத்திற்காக அரசு ஏற்கெனவே பல சமூக நல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஆதி திராவிடரின் பொருளாதார வளர்ச்சியையும், ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டு, ஆதி திராவிடர் சிறப்பு அம்சத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 1986–87ஆம் ஆண்டில் இச் சிறப்பு அம்சத் திட்டத்தின்கீழ், ரூ. 1,25.55 கோடி செலவிடப்படும். ஆதி திராவிடர்களின் கல்வி மேம்பாட்டிற்குச் சிறப்பு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. தற்போது உள்ள கல்வி வசதிகளை மேம்படுத்த, பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதைத் தவிர, ஆதி திராவிடர் மாணவர் இல்லங்களுக்காகப் பல கட்டடங்களும் கட்டப்பட்டு வருகின்றன. 135 கட்டடங்களைக் கட்ட இதுவரையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 110 கட்டடங்கள் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டு விட்டன. எஞ்சிய கட்டடங்கள் விரைந்து கட்டப்பட்டு வருகின்றன. இதேபோன்று, மாணவியர்க்கான இல்லக் கட்டடங்களும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ்க் கட்டப்பட்டு வருகின்றன. 101 மாணவியர் இல்லங்கள் கட்ட, அனுமதி அளிக்கப்பட்டிருக்க, 61 கட்டடங்கள் ஏற்கெனவே கட்டிமுடிக்கப்பட்டு விட்டன.

**73.** பொருளாதார வளர்ச்சியைப் பொறுத்தவரையில், 2 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள், 1986–87-ல் உதவி பெறும். இந்திய அரசிடமிருந்து ரூ. 14 கோடி சிறப்பு உதவியாக எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொகை சுயவேலைவாய்ப்புத் திட்டங்களின்கீழ், மேற்கொண்டும் வேலைவாய்ப்புகளை உருவாக்கப் பயன்படுத்தப்படும். இத் திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் உதவி, பொருளாதார நிலையில் நலிந்துள்ள ஆதி திராவிடர் குடும்பங்கள் ஏழ்மைக் கோட்டைக் கடந்து செல்ல உதவியாக விளங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலம்

**74.** பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு நல்ல கல்வி வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக அரசு, பள்ளிகளையும், மாணவர் இல்லங்களையும் தொடங்கியுள்ளது. இப் பள்ளிகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மொத்தம் 52,500 மாணவர்கள் பயிலுகின்றனர். மொத்தமுள்ள 543 மாணவர் இல்லங்களில், சுமார் 31,000 மாணவர்கள் தங்கியுள்ளனர். பெருகிவரும் மாணவர் இல்லத் தேவையை நிறைவு செய்யும்பொருட்டு, ஒவ்வோராண்டும் புதிய மாணவர் இல்லங்கள் தொடங்கப்பட்டு வருகின்றன.

### வீட்டு வசதி-நகர்ப் பகுதி வளர்ச்சி

**75.** இம் மாநிலத்தில் வீட்டு வசதிகளைப் பெருக்குவதிலும், வீட்டுவசதி-நகர்ப்பகுதி வளர்ச்சிக்கான அடிப்படை வசதிகளை உருவாக்குவதிலும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பாராட்டத்தகு சாதனை புரிந்துள்ளது. குறைந்த வருமானத் தொகுதியினருக்கான வீடுகள் கட்டும் திட்டங்களை வீட்டுவசதி வாரியம் மேற்கொண்டு நிறைவேற்றுவதற்கு ஏதுவாக, அரசு ரூ. 1 கோடி நிதி ஒதுக்கம் செய்துள்ளது. குடிசை மாற்றுத் திட்டங்களுக்கும், குடிசைப் பகுதி மேம்பாட்டுக்கும், அரசு, தலையாய முன்னுரிமை அளித்துள்ளது. குடிசை மாற்று வாரியம், 1986–87-ல் குடிசை மாற்றுப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக ரூ. 1.75 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும், குடிசை மாற்று திட்டங்களை மேற்கொள்வதற்காக 1986–87-ல் வீட்டு வசதி வாரியத்திற்கு ரூ. 67.5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**1986 மார்ச் 17ஆம் நாளன்று மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 1986-87ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவையின் முன்வைத்து ஆற்றிய உரை.**

# கவிராஜ பண்டிதர்
# செகவீர பாண்டியனார்



கன்னித் தமிழ் வல்லார், கவிராச பண்டிதர் செகவீர பாண்டியனார் நூற்றாண்டு விழா, **10.3.86** அன்று சென்னை மாநகரில் சிறப்பாக நடைபெற்றது. முழுநாள் விழாவாக வெலிங்டன் அம்மையார் கல்வியியற் கல்லூரியில் நடைபெற்ற இவ்விழாவில், அன்று காலை நிகழ்ச்சிக்கு வந்திருந்தோரைத் தமிழ் வளர்ச்சி இயக்குநர் திரு 'சிலம்பொலி' சு. செல்லப்பன் வரவேற்றார். தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறை செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் விழாத் தலைமை தாங்கினார்.

கவிராச பண்டிதர் செகவீர பாண்டியனாரின் நூல்கள் பற்றிய கருத்தரங்கம் ஒன்று நடைபெற்றது.

'குமரேச வெண்பா' பற்றி டாக்டர் இரா. குமரவேலனும், 'பாஞ்சாலங்குறிச்சி வீர சரிதம்' பற்றி டாக்டர் இ. சுந்தரமூர்த்தியும், 'கம்பன் கலை நிலை' பற்றி டாக்டர் அன்பரசியும், 'இந்தியத் தாய்நிலை' பற்றி டாக்டர் க.ப. அறவாணனும் உரையாற்றினார்கள்.

மாலை நேர நிகழ்ச்சிக்கு மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் தலைமை தாங்கினார்.


### நூல் வெளியீடு

டாக்டர் அன்பரசி எழுதிய செகவீர பாண்டியனாரின் 'கம்பன் கலைநிலை' ஆய்வு நூலை, மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி.அவர்கள் வெளியிட்டார். அந் நூலின் முதல் படியைச் சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு க. சுப்பு அவர்கள் பெற்றுக் கொண்டார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விழா நிறைவுரையாற்றினார்.

''கவிராச பண்டிதர் செகவீர பாண்டியனார் எழுதிய திருக்குறள் குமரேச வெண்பா, வீர பாண்டியம் போன்ற அரிய தமிழ் இலக்கியங்களை அனைவரும் படித்துணரும் நிலை வர வேண்டும். அதற்கான பெரும் பொறுப்பைக் கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் மேற்கொள்ள வேண்டும். **5 ஆயிரத்து 990** பக்கங்கள்

**கவிராச பண்டிதர் சிறந்த மேடைப்பேச்சாளரும் ஆவார். நகைச் சுவையும் சிலேடையுமாக நன்றாய் ரசித்துப் பேசுவார். நடுநடுவே— ''அர்த்தமாகுதா?'' என்று கூட்டத்தில் இருப்பவர்களைக் கேட்டுக் கொண்டே, அவர், குழந்தைக்கும் புரிகிற எளிமையோடு பெரியவர்களுக்கும் புரிவதற்கு அருமையான கருத்தை விளக்கும் அழகே அலாதியானது.**



குடும்பத்துடன் கவிராச பண்டிதர்

கொண்ட திருக்குறள் குமரேச வெண்பாவில், ஒவ்வொரு குறளுக்கும் பொருத்தமான கதை சொல்லப்பட்டிருக்கிறது.

''இந்த இனிய தமிழ் இலக்கியத்தை எழுதி முடிக்க அவருக்குப் பதினான்காண்டுகள் ஆகியிருக்கின்றன என்றால், எவ்வளவு அரிய கருத்துக்கள் அதிலே திரட்டித் தரப்பட்டுள்ளன என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்'' - என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்.

விழா முடிவில், தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் திரு த. பெரியாண்டவன் நன்றி கூறினார்.

**கவிராசர் வரலாறு**

நூற்றாண்டு விழா நாயகரான கவிராச பண்டிதர் செகவீரபாண்டியனார் - திருச்செந்தூர் அந்தாதி, மாசிலாமணி மாலை, ஆணியறுபது, தர்ம தீபிகை, வீரபாண்டியம், உலக உள்ளங்கள், கம்பர் கவித்திறம், அகத்திய முனிவர், கவிகளின் காட்சி, தமிழர் வீரம், பாஞ்சாலங்குறிச்சி வீரர் சரித்திரம் முதலாம் பகுதி - இரண்டாம் பகுதி, கல்வி நிலை போன்ற பல பக்தி நூல்களும், அற நூல்களும், காப்பியங்களும், தேசப்பற்று மிகச் செய்யும் நூல்களும், மொழி பெயர்ப்பு-உரை நடை - திறனாய்வு - வரலாறு தொடர்பான நூல்களும் எழுதிய தன்னிகரற்ற தமிழ்ப்புலமை மிக்கவராவார். ஆங்கிலம், வடமொழி, தெலுங்கு ஆகிய மொழிகளும் இவருக்குத் தெரியும்.

இவரெழுதிய நூலொன்று ஆங்கிலத்தில் 'Light of virtue' என்ற பெயரில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூல்கள் அனைத்தும் கவிராச பண்டிதரின் பெரும் புலமைக்குச் சான்றாக விளங்குகின்றன. திருவள்ளுவர் நிலையத்தின் மூலம் அவரே அனைத்தையும் அச்சிட்டு வெளியிட்டார்.

இவர் அப்படிப் பதிப்பித்த நூல்களில் ''திருக்குறட் குமரேச வெண்பா'' தான் அளவால் மிகப் பெரிய நூலாகும்.

இவரெழுதிய இன்னும் சில நூல்கள் கையெழுத்துப் படியாகவே உள்ளன. விரைவில் அவை அச்சாகி வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கவிராச பண்டிதரின் நூல்கள் பற்றிய அறிவிப்பில் 'அரிய பெரிய நூல்கள்' என்ற வாசகம் இருக்கும். 'அப்படிப்போடுவது தற்பெருமை ஆகாதா?' என ஒரு முறை அவரிடமே கேட்கப்பட்டது. அதற்கு அவரளித்த பதில் வருமாறு:

''என்னுடைய நூல்கள் அருமையும் பெருமையும் வாய்ந்தவை என்பதை உணர்ந்துகொண்டிருந்தும் சொல்லத் தைரியமில்லாத—கோழைகளாகத் தமிழ்ப்பெருமக்கள் இருப்பதனால் நானே 'அரிய பெரிய நூல்கள்' என்று வற்புறுத்த வேண்டிய அவசியம் அல்லது அவலம் ஏற்பட்டு விட்டது.''

10.3.1886-ல், ஆவுடையம்மாள் - பெருமாள்சாமி தம்பதிகளுக்குப் பிறந்தவர் கவிராச பண்டிதர் செகவீரர். திருநெல்வேலி மாவட்டத்தில், மணியாச்சிக்கு வடகிழக்கே ஒரு கல் தூரத்தில் உள்ள ஒட்டநத்தம் இவரது சொந்த ஊர்.

வீரபாண்டிய கட்ட பொம்மன் மரபிலே தோன்றிய பெருமை இவருடையது.

**படிப்பும், முடிப்பும்**

பாண்டியனார் தம் ஐந்தாம் வயதில் பள்ளி புகுந்தார். திண்ணைப் பள்ளிக் கூடப் படிப்பு. தாளோ புத்தகமோ ஏதும் இல்லை. எல்லாவற்றையும் பனை ஓலையில் எழுதிப் படிக்கின்ற நிலையிலேயே இவரது தொடக்கக் கல்வி அமைந்தது. இவர் இளமையிலேயே கண்ணும் கருத்துமாய்ப் பயின்று வந்தார். ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, உலக நீதி போன்ற நீதி நூல்கள் பாடமாய் அமைந்தன. தாயின் நல்ல வழி காட்டுதலாலும், அரவணைப்பினாலும் தீய பழக்கங்கள் ஏதுமின்றி இளமையிலேயே நல்லொழுக்கச் சீலராய்த் திகழ்ந்தார்.

ஆயினும் ஐந்தாம் வகுப்போடு பள்ளிப் படிப்பு முற்றுப் பெற்று விட்டது. கல்விக் கட்டுப்பாடுகள் கழிந்த பின்னர் கம்பும் சிலம்பும், மல்லும் வில்லும் எனப் பொழுதைக் கழித்தார். மூன்றாண்டுக் காலம் கடைகளிலே வேலை பார்த்தார்.

மறுபடியும் அவருக்குக் கல்வியின்மேல் நாட்டம் ஏற்பட்டது. எனவே, தாம் செய்து வந்த மளிகைக் கடை வேலையை நிறுத்திவிட்டு மீண்டும் தாமே கல்வி கற்க முயன்றார். இந்த வகையில் தாயுமான சுவாமிகள் பாடல்கள் முதலாகப் பற்பல நூல்களை அவரே கற்கத் தொடங்கினார். பிறகு தம் ஊருக்கு வந்திருந்த சிவானந்த சுவாமிகள் என்னும் முனிவரிடமும், இலக்கண முத்தையா என்னும் பெரியாரிடமும் தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றார்.

கவிராச பண்டிதர் தமிழ் மொழியில் புலமை பெற்று விளங்கியதோடு அமைந்தாரில்லை. ஆங்கிலம், வடமொழி, தெலுங்கு ஆகிய மொழிகளிலும் நன்கு தேர்ச்சி பெற்றுப் புலமைத் திறத்தோடு விளங்கினார்.

உடல் தூய்மையோடு ஒழுங்கு, பணிவு முதலியவற்றையும்

பாண்டியனார் தம் மாணாக்கருக்குக் கற்பித்தார். இளையவரேயன்றி முதியோர் சிலரும் வெளியூர் மக்கள் சிலரும் இவரிடம் பாடம் கேட்டுச் சிறப்படைந்தனர்.

பாண்டியனாருக்கு 27 ஆம் வயதில் திருமணமானது. இல்லறத்தை நல்லறமாய் நடத்தி வந்த இவருக்கு மூன்று ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் பிறந்தனர். அவர்கள் அனைவருமே அவரது தமிழ்ப் பணிக்கு உறுதுணையிருந்தார்கள்.

செகவீர பாண்டியனாரின் இலக்கியத் தொண்டு எண்ணி எண்ணிப் பாராட்டத்தக்கது. ஆசிரியராய் இருந்து இளைஞர்களுக்கும், பெரியவர்களுக்கும் தமிழறிவு ஊட்டிய தகைமையாளர் அவர். சொற்பொழிவுகள் ஆற்றுவதன் வாயிலாகவும் தமிழ்த் தொண்டு புரியும் பணியை மேற்கொண்டு வந்தார். இவ்வகையில் பாலகாண்டம் முதல் பட்டாபிடேகம் வரை அனைவரும் வியக்கும் வண்ணம் இவர் ஆற்றிய இராமாயணச் சொற்பொழிவு இவருடைய முதல் சொற்பொழிவாய் அமைந்து பெருமை சேர்த்தது.

தொடர் சொற்பொழிவு, தனி சொற்பொழிவு, வானொலிச் சொற்பொழிவு, அயல் மாநிலச் சொற்பொழிவு, வெளி நாட்டுச் சொற்பொழிவு என்னும் நிலைகளில் இவர் தம் இலக்கியத் தொண்டு பரந்து விரிந்தது. இராமாயணம், கந்தபுராணம் போன்ற தொடர் சொற்பொழிவுகளும், தமிழர் வீரம், மன நலமும் மனிதனும், திருவாசகத்தில் ஒரு வாசகம் போன்ற பொருள்களில் அமைந்த தனிச் சொற்பொழிவுகளும் இவருக்குப் பெருமை சேர்த்தன.

கவி நிலை, தொழில் பாட்டு, புராண நூல்களில் திருக்குறள். மனை மாட்சி, காந்தி வழி - புலனடக்கம், கவிதை விளக்கம், வில்லியாழ்வாரின் சந்தக் கவித்திறம் என்பன போன்ற தலைப்புகளில் இவர் ஆற்றிய வானொலிச் சொற்பொழிவுகள் குறிப்பிடத்தக்கவை.

தாமே பயின்றும், தக்கவர்களிடம் கற்றும், புலமைத் திறன் எய்திய கவிராச பண்டிதர் பாண்டியனார் தமிழுக்குச் செய்த தொண்டுகளில் தலையாயது அவர் படைத்த படைப்புகளே என்பது உண்மை-வெறும் புகழ்ச்சியில்லை.

நூல் வெளியீட்டால், இருந்த பொருளையும் இழந்து நின்றார் கவிராசர். இந் நேரத்தில் எவ்வகையிலும் அவருக்குத் துணையாயிருந்த மனைவியாரும் மறைந்தார். புலமையாளரிடமே உரிமை கொள்ளும் வறுமையோடு மதுரையில், மேல மாசி வீதியும் திண்டுக்கல் சாலையும் சந்திக்கும் முனையிலிருந்த மேற்குப் பார்த்த மிகப் பழைய பெரிய வீட்டிலேயே சோர்ந்திருந்தார்.

அப்போது இதற்கு முன் கண்டறியாத ஒருவர் வந்து அவருக்கு உதவி செய்ததும் பாண்டியனாருக்கு வியப்பு ஏற்பட்டது. அவரே சிவசுப்ரமணியபிள்ளை என்று அறிந்து நெஞ்சம் நெகிழ்ந்தார்.

**பாண்டியனார் பண்புகள்**

1936ல், மனைவியை இழந்து தனியே வாழ்ந்த பாண்டியனாரிடம் சிலர் மறுமணத்திலுள்ள அறங்களை எடுத்துக்கூறி திருமணத்திற்குஉடன்படுமாறு வேண்டினர். அவர் மறுத்துவிட்டார்.

இவர் எப்போதும் கைத்தடியுடனேயே காட்சியளிப்பார்.

செகவீர பாண்டியனாரைப் பாராட்டாத சான்றோர்களே இல்லை எனலாம். தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாத ஐயர், மறைமலையடிகள், ந. மு. வேங்கடசாமி நாட்டார் போன்ற சான்றோர்களும், பேராசிரியர்கள் பலரும், அரசியல் தலைவர்கள் பலரும், அமைச்சர்கள் பலரும் இவரை— இவர் தம் தமிழ்த் தொண்டினைப் பெரிதும் பாராட்டிப் போற்றியுள்ளனர்.

இவர் நூல்களைச் சென்னை, மைசூர் பல்கலைக் கழகங்கள் பாட நூலாகவும் ஏற்றுள்ளன. தமிழ் வளர்ச்சிக் கழகம் இவர்தம் அரும் தொண்டைப் பாராட்டிப் பரிசு அளித்துள்ளது. மதுரை, கரந்தைத் தமிழ்ச் சங்கங்கள் இவர்தம் தொண்டினைச் சிறப்பித்துள்ளன. இவர்தம் பணிக்கு உயர்வு அளிக்கும் வண்ணம் தமிழக அரசு 1966-இல் இவரை மதுரைப் பல்கலைக் கழகக் குழுவில் ஒருவராக நியமித்துச் சிறப்பளித்தது.

82 ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்த இவர் ஏறக்குறைய 60 ஆண்டுகள் முழுமையாகத் தமிழ்ப் பணி செய்வதிலேயே கழித்திருக்கிறார். இவர் புகழுக்கு ஆதாரம் தன்னம்பிக்கை, உழைப்பும் தன்மானமும் இவரது உடன் பிறப்புகளாகும்.


தமிழ்ப் பெரியார்களைப் போற்றிப் பாராட்டி அவர்தம் தொண்டினை உலகறியச் செய்யும் உயர் நோக்கத்தைக் கொண்டிருக்கும் தமிழக அரசு, அந்த வரிசையிலே அருந்தமிழ்ப்புலவர் கவிராச பண்டிதர் செகவீர பாண்டியனாரின் நூற்றாண்டு விழாவையும் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்தது.

— நமது செய்தியாளர்

கவிராச பண்டிதருக்கு விழா நடத்தி, அவரது புத்தகங்களை வெளியிட நிதி உதவும் நோக்கோடு சிலர் அவரிடம் சென்று சம்மதம் கேட்டார்கள். கவிராசர் சொன்ன பதில் என்ன தெரியுமா?

"நீங்களெல்லாம் நமக்கு மிகவும் வேண்டியவர்கள். அதனால் என்னை அதிகமாக அவமானப்படுத்திவிட மாட்டீர்கள் என்று நான் ஓரளவு நம்பலாம். எனது வெளியீடுகளின் அருமை பெருமைகளைத் தமிழ் மக்கள் அறிந்து விலைகொடுத்து வாங்கி ஆதரித்தால் போதும். என் வெளியீடுகளில் இருநூறு செட் விற்க ஏற்பாடு செய்தால் ஒரு விழா நடத்துவதைவிட அதிகமாக நான் பெருமைப்பட முடியும்!"

—விழாவுக்குச் சம்மதம் கேட்கப் போனவர்கள், வியந்து வாயடைத்துப் போனார்கள்.






தமிழ்நாட்டுக்குச் சுற்றுலா வந்த அமெரிக்கச் சிறுவர், சிறுமியர்கள் சென்னைத் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களை, 20.3.86 அன்று சந்தித்தனர் அப்போது அவர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கினார் முதல்வர்.

# படமும் செய்தியும்






தமிழ்நாடு மாநில சுற்றுப்புறச் சூழல் நலக்குழுவின் கூட்டம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் தலைமையில் 12.3.1986 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

சோவியத் நாட்டு கலாச்சார அமைச்சரும் பொலிட்பிரோ உறுப்பினருமான டெமிசீவ் அவர்களை சென்னையிலுள்ள சோவியத் தூதரகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சார்பில் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் 15.3.1986 அன்று சந்தித்து உரையாடினார். அப்போது தஞ்சாவூர்த் தட்டைப் பரிசாக அளித்தார் மாண்புமிகு அமைச்சர்.





# மனம் கவர் மலர்க் கண்காட்சி

மலர்கள் மணத்தை மட்டுமல்ல, மனத்துக்கு மகிழ்ச்சியையும் தரு கிறது.

மலர்கள் கண்ணுக்குக் குளு மையை மட்டுமல்ல, காட்சிக்கு விருந்தாகவும் அமைகிறது.

அத்தகைய கண்கவர் கண் காட்சியைக் காணும் வாய்ப்பு அண்மையில் கிட்டியது.

சென்னை விவசாய தோட்டக் கலைச் சங்கத்தின் சார்பில் 135-வது மலர்க் கண்காட்சி மார்ச் திங்கள் 7,8,9 ஆகிய மூன்று நாட்கள் நடந்தது.

மலர்க் கண்காட்சியைத் தொடங்கி வைத்து, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

''தோட்டக் கலையையும், விவ சாயத்தையும் இணைத்துச் சங்க மாக அமைத்துள்ளனர். இந்தச் சங்கம் இந்தியாவிலேயே மிக அதிக காலம் நடைபெறும் சங்க மாகும். நம்முடைய நாட்டில் பல் வேறு வகையான சீதோஷ்ண நிலையாக இருந்தாலும், எல்லா வகைப் பூக்களையும் ஓரிடத்தில் வைத்துப் பாதுகாக்க முடியும். விஞ்ஞான ரீதியில் இந்தப் பூக்களை எப்படி வளர்ப் பது என்பதற்கு ஒரு கலையே இருக்கிறது.''

தமிழ்நாடு போலீஸ் டைரக்டர் ஜெனரல் திரு வி.ஆர். லட்சுமி நாராயணன் அவர்கள் விழா விற்குத் தலைமை வகித்தார். மலர்க் கண்காட்சி அமைப்பாளர் திரு வி.கிருஷ்ணமூர்த்தி, தோட் டக் கலைச் சிறப்புச் செயலர் திரு.வி.வாசுதேவன், திரு.வி.ஜி. பன்னீர்தாஸ், திரு. வி. ஜி. சந்தோஷம், திரு. ஜி.உமாபதி ஆகி யோர் விழாவில் கலந்து கொண் டனர். தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு.டி.வி.அந்தோணி இ.ஆ.ப. அவர்களும் மலர்க்கண் காட்சியைப் பார்வையிட்டார்.


மலர்க் கண்காட்சி நிறைவு விழாவுக்கு மாண்புமிகு கூட்டுற வுத்துறை அமைச்சர் திருகே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்கள் தலைமை வகித்தார். அவர் பேசுகையில் குறிப்பிட் டார்:

''இந்தக் கண்காட்சியைப் பார்த்தபோது கண்ணுக்குக் குளிர்ச்சியும், எண்ணங்களுக்கு எழுச்சியும் ஏற்பட்டது. இங்கு பச்சைப் பசேலெனச் செடிகள், தோட்டங்கள் காட்சி தருகின் றன. இங்கு இருப்பது ஊட்டி, கொடைக்கானலில் இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்து கிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர் களின் துணைவியார் திருமதி ஆதிலட்சுமி ராமச்சந்திரன் அவர்கள் மலர்க் கண்காட்சியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

அழகிய மலர்த் தோட்டங் களைப் பார்க்க ஆவலாகச் செல் கிறோம்.

கண்ணைப் பறிக்கும் அந்த அழகிய செடி இருவண்ணங்களில் காட்சியளிக்கிறதே! அமராந்தஸ் அதன் பெயர் என்று அறிந்து,



அதை மீண்டும் மீண்டும் திரும்பிப் பார்த்துக் கொண்டே போகிறோம்.

விதவிதமான மலர்கள் பூத்துக் குலுங்கும் காட்சி மகிழ்ச்சியைத் தருகிறது.

ஓரிடத்தில் ரோஜாக்களின் கூட்டம். ரோஜாவில்தான் எத்தனை வகைகள்; எத்தனை வண்ணங்கள்! அந்த இரத்தச் சிவப்பு ரோஜா... அப்பப்பா! இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம்.

'வாழையடி வாழை' என்கிறோம். ஆனால் இங்கே வாழையடி அன்னாசியும், காபியும் இருக்கக் கண்டு வியக்கிறோம். ஆம். ஒரே இடத்தில் வாழை, அன்னாசி, காபி, கரி பலா, பாக்கு ஆகியவை ஒன்றாக வளர்கின்ற பாங்கினைப் பார்க்கிறோம்.

அதோ! அது என்ன புதுவகைப் பூ! சுவிட்சர்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்த மலர்ச் செடியின் பெயர் பேபி கராணியம். இதன் தனிச் சிறப்பு மலர்கள் கொத்துக் கொத்தாய்ப் பூக்கின்றன. இதேபோல சுவிட்சர்லாந்திலிருந்து தருவிக்கப்பட்ட அழகிய குரோட்டன் செடிகள் இவ்வாண்டு மலர்க்கண்காட்சியில் அறிமுகம் செய்யப்பட்டன. அது மட்டுமல்ல, மண்ணில்லாமல், நீரிலேயே வளரும் செடிவகையும் அறிமுகமாகும் புதுவகையாகும்.

இந்த மலர்க்கண்காட்சியில்-நிரந்தரமாக உள்ள மலர்க் காட்டில் நெட்டை குட்டை மரங்களும், பன்னிறச் செடிகொடிகளும், பசுமையான புல் தரைகளும் கண் கொள்ளாக் காட்சியாக விளங்குகின்றன.

இந்தக் கண்காட்சியைக் கடந்த ஆண்டில் 25,000 பேர் பார்த்து ரசித்தார்கள். இந்த ஆண்டு இதன் எண்ணிக்கை இரு மடங்காக உயர்ந்துள்ளது, மலர்களின் பால் மக்களுக்குள்ள ஈடுபாட்டை உணர்த்துகிறது.

விவசாயத் தோட்டக் கலைச் சங்கத்தில் 3000 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். கண்காட்சியில்







அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் பங்கு கொள்கின்றன.

உங்கள் வீட்டில் தோட்டம் போட இடம் இருக்கிறதா? செடி கொடிகளை எப்படிப் போடலாம் என்று யோசிக்கிறீர்களா? அந்தக் கவலையே வேண்டாம். விவசாயத் தோட்டக் கலைச் சங்கத்திடம் தொடர்பு கொண்டால் போதும், அவர்களே உங்கள் இல்லந்தேடி வந்து இனிய மலர்ச் செடிகளை வளர்க்க, காய்கறித் தோட்டங்கள் போட தக்க ஆலோசனைகளையும், செய்முறைகளையும் விளக்கிக் கூறுவார்கள். இதற்கெல்லாம் குறைந்த கட்டணமே வசூலிக்கிறார்கள்.

விவசாயத் தோட்டக் கலைச் சங்கம் மக்கள் மனத்தைக் கவரும் வகையில், பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தவிருக்கிறது.

* ஜப்பானிய முறையில், இச்சங்கத்தின் வளாகத்தில், ஒரு திடலை அமைத்து, 'போன்சாய்' தாவரங்கள் வளர்த்தல்.

* சென்னை நகரில் அமைந்துள்ள சாலையோரத் திடல்களை, மாநகராட்சித் துணையோடு பராமரித்தல்.

* அடுக்குமாடிக் குடியிருப்புகள் பெருகிவரும் இந்நாளில் அம்மக்களின் ஆசையை நிவர்த்திசெய்யும் வகையில், அவர்களின் வசதிக்கென மாடித்தோட்டம், தொங்கும் தோட்டம் போன்றவற்றை ஏற்படுத்தித் தர வசதிகள் செய்தல், இவையன்றி, வீட்டிற்குள்ளே வளர்க்கப்படும் நிழல் தேவை தாவரங்களையும், அழகுத் தாவரங்களையும் அமைத்துத் தரவும், ஆலோசனைகள் வழங்குதல்.

* தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு டி.வி.அந்தோணி இ.ஆ.ப. அவர்களின் ஆலோசனையின்படி போகன்வில்லா போன்ற தண்ணீர் அதிகம் தேவைப்படாத தாவர வகைகளை அதிகப்படுத்துதல், அதன் மூலம் சென்னையை மேலும் பசுமையாக்கும் முயற்சியை உறுதுணையாக இருத்தல்.

மலர்க்கண்காட்சியைப் பார்த்துவிட்டு மலர்ந்த முகத்துடன் வெளியே வருகிறோம்.

தோட்டம் ஒன்று - மலர்கள் பலவகை. இது ஒருமைப்பாட்டை உணர்த்தவில்லையா?

நமது செய்தியாளர்

## உறைந்திருக்கும் பனிக்கட்டியிலும் நுழைந்திருக்கும் பாக்டீரியா



குடிநீரை உபயோகிக்கும்போது அது கலங்கி இருக்கிறதா அல்லது தூய்மை கெட்டு இருக்கிறதா அல்லது தெளிவாக இருக்கிறதா என்று பார்த்துத்தான் நம்மில் பலர் அதனைப் பருகுகின்றோம். ஏதாவது சந்தேகம் இருந்தால், அந்த நீரைக் காய்ச்சியோ, வடிகட்டியோ பயன்படுத்துகின்றோம்.

ஆனால் இத்தகைய முன்னெச்சரிக்கையை, பானங்களில் ஐஸ் கட்டிகளைப் போட்டுப் பருகும்போது பொதுவாக நாம் அனுசரிப்பதில்லை. ஐஸ் கட்டிகள் எல்லாமே தூய்மையானவை என்று சொல்ல முடியாது. எந்த நீர் பனிக்கட்டியாக உறைந்துள்ளதோ அந்த நீரைப் பொறுத்தே அதன் பண்பும் அமைகின்றது.

பாக்டீரியா போன்ற நுண்கிருமிகள் சிலவகைகள் எந்தவித சீதோஷ்ண நிலைகளிலும் வாழும் திறன் கொண்டவை. உறைந்திருக்கும் பனிக் கட்டியிலும் சில நுண்கிருமிகள் வாழ்கின்றன. இதனை உட்கொள்ளும் நபர்களிடம், பாக்டீரியாவினால் ஏற்படும் தொத்து நோய்கள் பரவ சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

இதனால் இப்போது, மூன்றாவது உலக நாடுகளில் இத்தகைய நோய் பரவுதலைத் தடுக்க, ஐஸ் கட்டிகளில் ஏற்படும் தூய்மைக்கேடுகளைப் பற்றி குறிப்பாக ஆராய்ந்து வருகிறார்கள்.


—நன்றி: 'வானொலி'

# ஆசியாவில் மிகப்பெரிய வானியல் ஆராய்ச்சி நிலையம்

வானியல் ஆராய்ச்சி, இந்தியாவில் முதன்முதலாகத் தமிழகத்தில் தான் ஆரம்பிக்கப்பட்டது!

1972ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனியின் அலுவலராக இருந்த வில்லியம் பெட்ரியினால் தனிப்பட்ட முயற்சியாக ஆரம்பிக்கப்பட்ட வானியல் ஆராய்ச்சி பின்பு கிழக்கிந்தியக் கம்பெனியினால் தொடரப்பட்டது. கப்பற்படைப் போக்குவரத்து மற்றும் ஏனைய கப்பல்களுக்கு உதவியாக ஆரம்பித்த ஆராய்ச்சி, கோள்கள்பற்றியஆராய்ச்சிக்காக விரிவுபடுத்தப்பட்டது.

1831 முதல் 1843ஆம் ஆண்டு வரை காமஸ் கிளேன்வில் டைலர்



என்னும் ஆராய்ச்சியாளர் 11,015 நட்சத்திரங்களைக் கண்டறிந்து பட்டியல் தயாரித்துச் சாதனை புரிந்தார்.

19ஆம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் ஐரோப்பாவில் சூரிய மண்டலபௌதிகம்போன்றவானியல் ஆராய்ச்சிகள் புதிதாக மேற்கொள்ளப்பட்டன. ஐரோப்பா பகுதி குளிர் பிரதேசமாக உள்ளமையால் சூரிய மண்டல ஆய்வுக்கு ஏற்பட்ட இடர்ப்பாடு கருதி வெப்பமண்டலப் பிரதேசமான இந்தியாவில் சூரியமண்டல ஆய்வு நடத்துவதற்காக 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கொடைக்கானலில் ஒரு வானியல் ஆய்வு நிலையம் நிறுவப்பட்டது. 1901ஆம் ஆண்டு எவர்ஜெட் என்னும் ஆராய்ச்சியாளர் சூரியனின் மீதுள்ள சூரியப் புள்ளிகளின் இயக்கம் பற்றிய ஆய்வின் போது தான் கொடைக்கானல் நிலையம் உலகப்புகழ் பெற்றது.


இரவில் நட்சத்திர மண்டல ஆய்வுக்குக் கொடைக்கானல் நிலையம் அவ்வளவாகப் பயன்படவில்லை. எனவே பெங்களூரில் உள்ள இந்திய வானியல் பௌதிக ஆராய்ச்சி நிறுவனம் புதிய இடம் ஒன்றைத் தேர்ந்தெடுக்க முடிவு செய்தது. இதற்காக வடக்கே திருப்பதியில் தொடங்கிதெற்கேகன்னியாகுமரி வரை பல இடங்களில் முதலில் தேர்வு செய்யப்பட்டது.

வானத்தில் தூசியே இருக்கக் கூடாது என்பது ஒரு தகுதி. வானத்தில் மேகக்கூட்டம் மிகக் குறைந்த அளவே இருக்க வேண்டும் என்பது இன்னொரு தகுதி. ஆண்டின் 365 நாட்களும் வானம் தெளிவாகத் தெரியக்கூடிய இடமென்பது இன்னொரு தகுதி. இவை அனைத்தும் ஒருங்கிணைந்த இடமாகக் காவலூர் அமைந்திருக்கிறது. 4 ஆண்டு ஆய்வுக்குப் பின்பு காவலூரைத் தேர்ந்தெடுத்து இங்கே 1963ல் ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது.

**ஆசியாவிலேயே பெரியது**

1963 முதல் 1968 வரை 5 ஆண்டுகள் தொலைநோக்கிகள் பொருத்தப்பட்டன. காவலூரில் வானியல் ஆராய்ச்சிகள் தொலைநோக்கியால் கண்டறிவதோடு படங்களும் பிடிக்கப்படுகின்றன. 38 சென்டிமீட்டர் விட்டமுள்ள தொலைநோக்கி மூலம் ஆராய்ச்சி செய்யப்பட்ட பின்பு 1972-ல் 102 சென்டிமீட்டர் விட்டமுள்ள பெரிய தொலைநோக்கி ஒன்று நிறுவப்பட்டது. தற்போது நிறுவப்பட்டுள்ள பெரிய தொலைநோக்கியின் விட்டம் 234 சென்டிமீட்டர். அதாவது 94 அங்குலமாகும்.

காவலூரில் மொத்தம் 4 தொலைநோக்கிகள் உள்ளன.



இவற்றின் விட்டம் முறையே 15, 30, 40, 94 அங்குலங்களாகும். 94 அங்குல தொலைநோக்கி 120 டன் எடை உள்ளது. சாதாரணமாக நாம் காணும் பொருளைவிட 20 மடங்கு பெரியதான நட்சத்திரங்களும் கிரகங்களும் தெரியும். 94 அங்குலத் தொலைநோக்கியை நிறுவ ரூ.6 கோடியே 50 லட்சம் செலவாகும். இது இன்னமும் முழுமையாக நிறைவடையவில்லை. ஒரு சில மாதங்களில் முழுமையாகநிறைவடைந்த பின்புதான் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும். அதுவரை 40 அங்குலத் தொலைநோக்கி மூலம் தான் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

94 அங்குலத் தொலைநோக்கியின் இன்னொரு சிறப்பம்சம் இதனை வடிவமைத்து உற்பத்தி செய்யப்பட்டதெல்லாம் வெளிநாட்டு உதவியில்லாமல் இந்தியர்களாலேயே தயாரிக்கப்பட்டதாகும். இத் தொலைநோக்கியோடு கம்ப்யூட்டர் இணைக்கப்பட்டிருப்பதால் ஒரு குறிப்பிட்ட நட்சத்திரத்தைப் பார்க்கவேண்டுமெனக் கம்ப்யூட்டரில் தகவல் கொடுத்தால் தொலைநோக்கி தானாகவே நாற்புறமும் சுழன்று நட்சத்திரத்தைக் கண்டு பிடித்துக் காட்டிக் கொடுத்து விடும்.

காவலூர் வானியல் ஆய்வு நிலையத்தில் ஹேலி வால் நட்சத்திரம் 29.8.85 அன்று படம் பிடிக்கப்பட்டது. அப்போது பூமியிலிருந்து 43 கோடி கிலோ மீட்டர் தொலைவில் அது இருந்தது. பின்பு 27.12.85ல் படம் பிடிக்கப்பட்டபோது 9 கோடியே 27 லட்சம் கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது. 11.4.86 அன்று படம் பிடிக்கும்போது 6 கோடியே 28 லட்சம் கிலோ மீட்டர் தொலைவில் ஹேலி வால்நட்சத்திரம் இருக்கும் என மதிப்பிடப்படுகிறது.

காவலூர் வானியல் ஆராய்ச்சி மையத்திற்கு மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி வருகை தந்தபோது வானியல் விஞ்ஞானி டாக்டர் வைணுபாப்புவின் பெயரைச் சூட்டினார். டாக்டர் வைணுபாப்பு மாணவராக இருந்தபோதே ஒரு வால் நட்சத்திரத்தைக் கண்டறிந்தபோது உலக வானியல் அறிஞர்கள் அவரைப்பாராட்டி, அந்த வால் நட்சத்திரத்திற்கு 'பாப்பு வால் நட்சத்திரம்' எனப்பெயர் சூட்டினார்கள்.

டாக்டர் வைணுபாப்பு வெளிநாட்டில் படித்து அங்கேயே தங்கி விடாமல் இந்தியாவிற்குத் திரும்பி வானியல் ஆராய்ச்சியில் பல சாதனைகளைப் படைத்துள்ளார். வைணுபாப்புவால் நிறுவப்பட்ட பெங்களூர் இந்திய வானியல் பௌதிக ஆராய்ச்சி நிறுவனமும் நைனிடாலில் உள்ள உ.பி. மாநில வானியல் ஆய்வு சாலையும் பெரும் புகழ்பெற்றவைகளாகும்.

தொகுப்பு :

**எஸ்.எம். கலைமணி,**

**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**

**வட ஆர்க்காடு மாவட்டம்**

1985 நவம்பர் திங்களில் தோன்றத் தொடங்கிய ஹேலி வால் நட்சத்திரத்தை தற்போது தமிழ்நாடு உட்பட இந்தியா முழுதும் அதிகாலை $4\frac{1}{2}$ மணியிலிருந்து 6 மணி வரை வெறுங் கண்ணால் பார்க்க முடியும்.

மார்ச் 25க்குப் பிறகு அது நள்ளிரவு 1 மணிக்கே தெரியத் தொடங்கி - அதிகாலை 5 மணி வரை தெளிவாகத் தெரியும்.

வானத்தின் தென்கிழக்குத் திசையில் 45 டிகிரி கோணத்தில் தற்போது காட்சி அளித்து வரும் இது, ஏப்ரல் 15ஆம் நாளுக்குப் பிறகு வானத்தின் மேற்குப் பகுதிக்குச் சென்று விடும். அப்போது இரவு 7 மணிக்குத் தெரியத் தொடங்கி $8\frac{1}{2}$ மணிக்கு மறைந்து விடும். ஏப்ரல் 25 வரை இதனை நன்றாகப் பார்க்க முடியும். மே மாத இறுதி வரை லேசாகத் தெரியும். அதன் பிறகு மறைந்து விடும். பின்னர் கி.பி. 2061வது ஆண்டில் தான் காண முடியும்.



# ஹேலி வால் நட்சத்திரம்

டாக்டர் வை. செல்வமுத்து
கணிதத் துறைத் தலைவர்,
நந்தனம் அரசினர் கல்லூரி.

"பிச்சைக்காரர்கள் சாகும் போது, வால்நட்சத்திரங்கள் தோன்றுவதில்லை. மன்னர்களின் மரணத்தை வானமே ஒளிவீசிக் காட்டுகிறது'' என்றார் சேக்ஸ்பியர். ஆதித்த கரிகாலனின் மறைவின்போது, தூமகேது தோன்றியதாக, 'பொன்னியின் செல்வனில்' 'கல்கி' குறிப்பிட்டார். வால் நட்சத்திரத்தால் வரும் கேடுகளிலிருந்து காப்பாற்றிக்கொள்ள, ஜப்பானிய மன்னர்கள் விசேட பூசைகளைச் செய்தனர். வால் நட்சத்திரம் மறையும் வரை உயிர்வதையைத் தடை செய்தனர்.

'வான மண்டலத்துத் தீமைகளை அப்புறப்படுத்த, கடவுள்கள் பயன்படுத்திய துடைப்பங்களே வால் நட்சத்திரங்கள். அவர்கள் தள்ளிய தீமைகள் பூமியில் விழுந்து போர்-வெள்ளம்- கொள்ளை நோய் போன்ற கொடுமைகளை ஏற்படுத்தின' எனச் சீனர்கள் நம்பினர். ''வால் நட்சத்திரங்கள் எரியும் தீப்பந்துகள். அவற்றால் போர்-பஞ்சம்-புயல் போன்ற கேடுகள் வரும்'' என்றார் கிரேக்க மேதை அரிஸ்டாட்டில். ஆயிரக்கணக்கான ஆண்டுகள், மக்களிடையே இத்தகைய அச்சத்தையும் பீதியையும் வால்நட்சத்திரங்கள் ஏற்படுத்துவதற்குக் காரணம்: அவை வானத்தில் எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் திடீரென்று தோன்றின. மற்ற நட்சத்திரங்களுக்கு இல்லாத - உருவிய வாள் போன்ற நீண்ட வால்களைப் பெற்றிருந்தன. எரி நட்சத்திரங்களைப் போன்று, கண நேரத்தில் தோன்றி மறையவில்லை - மாறாக மாதக் கணக்கில் காட்சியளித்தன. முக்கியமாக அவற்றின் பாதைகள், மற்ற விண்மீன்கள் - கோள்களின் இயக்கம் போல் எந்த விதிக்கும் கட்டுப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே அவற்றைக் காணும்போது, அச்சம் தலை தூக்கியது. அவற்றால் வரும் கேடுகள் பற்றிப் புதிய புதிய கட்டுக்கதைகள் உலா வரத் தொடங்கின.

**ஹேலி வால் நட்சத்திரம் 1910 மே 13-ஆம் நாள் கொடைக்கானல், வானியல் ஆராய்ச்சி நிலையத்தில் எடுத்த புகைப்படம்.**




சீன வரலாற்றில், கி.மு. 613-லேயே வால் நட்சத்திரங்களைப் பற்றிய குறிப்பு உள்ளது. அவற்றைத் 'தெய்வீகத் துடைப்பம்' எனச் சீனர்கள் குறிப்பிட்டனர். 'நீண்ட முடியுள்ள நட்சத்திரங்கள்' எனக் கிரேக்கர்கள் கூறினர். அரிஸ்டாட்டில் (கி.மு. 384—322) ''பூமியிலிருந்து கிளம்பும் வாயுக்கள், காற்று மண்டலத்தைத் தாண்டி மேலே சென்றதும், தீப்பந்தமாக மாறி, சில மாதங்கள் எரிந்து மறைகின்றன'' என்றார். அரிஸ்டாட்டிலுக்கு இருந்த மதிப்பின் காரணமாக சுமார் 2,000 ஆண்டுகள், அவரது கருத்தை எதிர்த்துப் பேச யாருக்கும் துணிவில்லை. ஒவ்வொரு முறை வால் நட்சத்திரம் தோன்றும்போதும் அதனைப் பதிவு செய்து கொள்வதும், பின்னால் நடைபெறும் உற்பாதங்களுடன் தொடர்பு படுத்திப் பேசுவதோடும் வால் நட்சத்திர ஆராய்ச்சியாளர் தமது ஆய்வினை முடித்துக் கொண்டனர்.

கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் தான், வால் நட்சத்திரங்கள் பற்றிய முறையான அறிவியல் ஆய்வு தொடங்கியது. 1531-39-ல் தோன்றிய பல வால் நட்சத்திரங்களைக் கவனித்த இத்தாலிய விஞ்ஞானி கிரோலாமோ பிராக்காஸ்டோரோ என்பவர்,

அவற்றின் வால்கள் எப்போதும் சூரியனுக்கு எதிர் திசையில் செல்வதைக் கண்டுபிடித்தார். 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆட்டோவான் கோரிக் என்பவர், ''வால் நட்சத்திரங்கள் சூரிய குடும்பத்தைச் சார்ந்தவை. கோள்களைப் போல், வால் நட்சத்திரங்களும் சூரியனைச் சுற்றி நீள்வட்டப்பாதை (Ecliptical) யில் செல்லும். எனவே குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு ஒருமுறை அவை மீண்டும் தோன்றும்'' என்றார். ஆட்டோவானின் அற்புதக் கற்பனை என்று உலகம் தள்ளி விட்டது. ஆட்டோவானின் கருத்தில் நம்பிக்கை கொண்டவர்களுள் ஒருவர்தான்- தற்போது உலகமெல்லாம் பேசப்படும் எட்மண்ட் ஹேலி என்ற பிரிட்டிஷ் விஞ்ஞானி.

1656-ல் இங்கிலாந்தில் வசதியான குடும்பத்தில் பிறந்த எட்மண்ட் ஹேலி, 1682-ல் தோன்றிய பிரகாசமான வால் நட்சத்திரத்தைக் கண்டார். அதன் பாதை அமைப்பு - வேகம் ஆகியவற்றை ஆராய முற்பட்டார். வால்நட்சத்திரங்களைப் பற்றிய புள்ளி விவரங்களை எல்லாம் சேகரித்தார். பல ஆண்டுகள் ஆய்வு செய்து கிடைத்த தகவல்களை ஒப்பிட்ட போது, 1456, 1531, 1607, 1682 ஆகிய ஆண்டுகளில் தோன்றிய வால் நட்சத்திரங்கள், ஏன் ஒரே வால் நட்சத்திரமாக இருக்கக் கூடாது என்ற கேள்வி அவர் மனத்தில் எழுந்தது. தயங்கினார் - தளராது ஆராய்ந்தார். தொடர்ந்து 1705-ல் வெளியிட்ட கட்டுரையில், ''1682-ல் தோன்றிய வால் நட்சத்திரமே 76 ஆண்டுகளுக்குப்பின் 1758-ல் மீண்டும் தோன்றும்'' என ஆருடம் கூறினார். உலகமெல்லாம் ஒரே பரபரப்பு. ஆனால் ஹேலியின் அறிவிப்பின் உண்மை அறிய ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் காத்திருக்க வேண்டுமே! தமது ஆருடம் சரியா என்று அறிய ஹேலியே 102 வயது வரை வாழ வேண்டும். ஹேலி 1742-ல் தனது 82-வது வயதில் மறைந்தார். உலகமும் அனைத்தையும் மறந்து, வேறு திசைகளில் கவனத்தைத் திருப்பி விட்டது. 1758- வந்தது. யாரும் ஆர்வம் காட்டவில்லை. நவம்பர் மாதத்தில், ஜோகன் ஜார்க் பாலிஸ்ட் என்ற ஜெர்மனி விவசாயி ''ஒரு வால் நட்சத்திரத்தைப் பார்த்தேன்'' என்றபோது, உலகம் திடீரென விழித்துக்கொண்டது. அடுத்த மார்ச் மாதம், வெள்ளிப்பந்து போல் - ஒளி வீசும் வாலுடன் வால் நட்சத்திரம் பவனி வந்தபோது, ஹேலியின் ஆராய்ச்சி உண்மையாயிற்று. பெயரில்லாமல் சூரியனைச் சுற்றி வந்த அந்த வால் நட்சத்திரத்திற்கு ஹேலி வால் நட்சத்திரம் என்றபெயர் கிடைத்தது. பூமியைப் போல், வால் நட்சத்திரமும், சூரியனை ஒரு குறிப்பிட்ட வேகத்தில் சுற்றி வருகின்ற பொருள் தான் என்ற உண்மை வெளியானது. மூட நம்பிக்கைகள் முடம்பட்டன.

பாறைத் தூசுகளுடன், மெதென், அமோனியா, கார்பன்-டை - ஆக்ஸைடு போன்ற வாயுக்கள் கலந்த அழுக்குப்பனிப் பந்துகளே வால் நட்சத்திரங்கள். பூமியைப் போன்று, அவை நமது சூரிய குடும்பத்தைச் சார்ந்தவை. வால் நட்சத்திரம் சூரியனுக்கு அருகே வரும்போது சூரிய வெப்பத்தால் பனி உருகித் தூசுகள் வெளிக் கிளம்புகின்றன. இதனால் வால் நட்சத்திரம் ஒரு நட்சத்திரத்தைப் போல் பிரகாசிக்கத் தொடங்குகிறது. இதனை உட்கரு அல்லது கோமா (Coma) என அழைப்பர். சூரியனை நெருங்க நெருங்க வெப்ப மிகுதியால், மென்மேலும் தூசுகளும் வாயுக்களும் வெளிப்பட்டு, சூரியனின் கதிர்வீச்சால், அவை வால் நட்சத்திரத்தின் பின்புறம் தள்ளப்படுகின்றன. வால் நட்சத்திரத்திற்கு வால் முளைக்கும் விதம் இதுதான். வால், சூரியனுக்கு எதிர் திசையில் செல்வதும் இதே காரணம் தான். சில வால் நட்சத்திரங்களுக்குப் பல வால்கள் முளைப்பதுமுண்டு.



## மார்க் டுவெயினும் ஹேலியும்

1895 நவம்பரில் ஹேலி நட்சத்திரம் காணப்பட்டபோது, தனது கிண்டலான—கேலியான எழுத்துக்களால் பெரும் புகழ் அடைந்த அமெரிக்க எழுத்தாளர் மார்க் டுவெயின் பிறந்தார். 1910-ல் மீண்டும் ஹேலி நட்சத்திரம் வந்தபோது, அவர் மரணப் படுக்கையில் இருந்தார். ''உங்களுக்கு ஒன்றும் நேராது'' என நண்பர்கள் உற்சாகப்படுத்தினர். மார்க் டுவெயின், தமக்கே உரிய பாணியில், ''நான் வால் நட்சத்திரத்துடன் வந்தேன். அதனோடு தான் போவேன்'' என்றார். அவர் வாக்குப் பொய்க்கவில்லை.


வால் நட்சத்திரத்திற்கும், சூரியனுக்கும் இடையேயுள்ள தூரம் குறையக்குறைய வாலின் நீளம் அதிகமாகும். சூரியனிலிருந்து விலகிச் செல்லத் தொடங்கியதும், வாலின் நீளம் குறைந்து கொண்டே வந்து, வெறும் நட்சத்திரம் போல் தோன்றி, கடைசியில் பழைய பனிப்பந்தாகி மறைகிறது. வால் நட்சத்திரத்தில் வாலாகக் காட்சியளிக்கும் துகள்கள் அனைத்தும், மீண்டும் உட்கருவுடன் சேர்வதில்லை. இதனால் ஒவ்வொரு முறை சூரியனைக் கடக்கும்போதும், வால் நட்சத்திரத்தின் எடை சிறிது குறைகிறது. இம்மாதிரி எடை குறைந்து கொண்டே வந்த பியாலா என்ற வால் நட்சத்திரம் (6 வருடம் 9மாதத்திற்கு ஒரு முறை காட்சி அளிக்கும்) 1852-ல் இரண்டாக உடைந்து காணப்பட்டது. 1866 முதல் காணவில்லை. (மரணமடைந்தது எனலாம்!).

சக்தி மிக்க தொலை நோக்கிகளால், ஆயிரக்கணக்கான வால் நட்சத்திரங்களின் பாதைகளை விஞ்ஞானிகள் கணித்து விட்டனர். 3½ வருடத்திற்கு ஒரு முறை காட்சி தரும் என்கே வால் நட்சத்திரம் முதல், 2040 ஆண்டுகளுக்கு ஒரு முறை காட்சி தரும் டோனாட்டி போன்ற பல வால் நட்சத்திரங்களை விஞ்ஞானிகள் அறிவர்.

தற்போது வானில் உலாவரும் ஹேலிவால்நட்சத்திரத்தின் குறுக்களவு சுமார் 8 மைல்கள் தான். வாலின் நீளமோ 5 கோடி மைல்கள் ஆகும். (இதை வைத்துத் தான் அனுமாரின் வாலுக்கு நீளம் சேர்த்தனரோ!) கி.மு. 87-ல் இது காட்சியளித்ததாக, கிரேக்க வரலாற்றில் முதன் முதலாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கணக்கின்படி 1985-ல் தோன்றுவது 28 - வது முறையாகும். இம்முறை, பூமியின் நடுவரைக்குத் தென் பகுதியிள் உள்ளவர்களுக்கு, நன்றாகக் காண வாய்ப்பு உண்டு. காவலூர் தொலை நோக்கி நிலையத்தார் அளிக்கும் தகவலின் படி, மார்ச்சு மாதம் முழுவதும் வானத்தின் தென் கிழக்குப் பகுதியில், அதிகாலை 4.30 மணி முதல் 5 மணி வரை காணலாம். வருகிற ஏப்ரல் 9-ல் (அன்று அமாவாசை) நன்கு பிரகாசமாகத் தென்படும்.

இம்முறை சோவியத் ரஷ்யா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளின் செயற்கைக் கோள்கள், ஹேலி வால் நட்சத்திரத்திற்கு அருகே சென்று புகைப்படங்கள் எடுக்கின்றன. இதனால் வால் நட்சத்திரங்களின் உட்கரு பற்றிய புதிய விவரங்கள் கிடைக்கும்.

# நித்தமும் வளரும் கைத்தறித் தொழில்



நீண்ட காலமாக இயங்கிவரும் கிராமியத் தொழில்களில் ஒன்றான கைத்தறித் தொழில், விவசாயத்திற்கு அடுத்தபடியாக வேலைவாய்ப்பினை மக்களுக்குப் பெருமளவில் அளித்து வருகிறது. தமிழ்நாட்டில் 5.56 இலட்சம் கைத்தறிகள் இயங்கிவருகின்றன. இதன் மூலம் 13.34 இலட்சம் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கிறது. 1984-85-ஆம் ஆண்டு முடிய 68 சதவிகித நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்பின் கீழ்க்கொண்டு வரப்பட்டுள்ளனர். **தேசிய இலக்கான 60 சதவிகிதத்தைத் தாண்டி தமிழ் நாட்டைப் பொறுத்த வரை 68% கைத்தறிகள் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.**

**கைத்தறிகளைக் கூட்டுறவு அமைப்பின் கீழ்க் கொண்டுவந்து சலுகைகள் வழங்கல் -**

கைத்தறி நெசவாளர்களைச் சுரண்டாமல் பாதுகாக்கத் தக்க நிருவாக அமைப்பை உருவாக்க வேண்டிய அவசியத்தைக் கைத்தறித் துறைக்கான வளர்ச்சித் திட்டங்கள் வலியுறுத்துகின்றன. கடந்த பத்தாண்டுகளிலும் அதற்கு மேற்பட்ட கால அளவிலும் நாம் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் கூட்டுறவு அமைப்பின் கீழ் கைத்தறிகளை அதிக அளவுக்குக் கொண்டு வருவது தான் அதற்கான தீர்வு என்பதை நாம் உணர்ந்துள்ளோம்.

31.12.1985ல் தமிழ்நாட்டில் 1600 கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் 3.70 இலட்சம் தறிகளுடன் இயங்கி வருகின்றன. 1985-86ல் மொத்தம் 20,000 கைத்தறி நெசவாளர்களை, நெசவாளர் கூட்டுறவு வங்கிகளின் மூலம் கூட்டுறவு அமைப்பின் கீழ்க்கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதன அமைப்பை வலுப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக 1985-86ல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசின் பங்கு மூலதன உதவி என்னும் திட்டத்திற்காக ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1984-85ல் கூட்டுறவுத் துறையின் கீழ் கைத்தறித் துணியின் உற்பத்தி 159.31 மில்லியன் மீட்டர்களாக இருந்தது. 1985-86ல் உற்பத்தியை 175 மில்லியன் மீட்டர்களுக்கு உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 31.12.85 முடிய 129.30 மில்லியன் மீட்டர் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

**இரெ. ஆறுமுகம், இ.ஆ.ப.,**
**இயக்குநர்,**
**கைத்தறி மற்றும் துணி நூல்துறை**

தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினராக அனுமதிக்கப்படும் ஒவ்வொரு நெசவாளருக்கும் பங்கு மூலதனத் தொகை செலுத்துவதற்காகப் பருத்தித் தறி ஒன்றுக்கு ரூ.200, பட்டு மற்றும் கம்பளித் தறி ஒன்றுக்கு ரூ. 250, பாலியஸ்டர் தறி ஒன்றுக்கு ரூ. 500 என்ற உச்ச வரம்பிற்கு உட்பட்டுக் கடன் உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

**கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சலுகை அடிப்படையில் நிதி உதவி**

கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதனத்தினை அதிகரிக்கும் பொருட்டுத் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி நிறுவனம் (NABARD) மறு நிதி உதவி அளித்து வருகிறது. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந் நிறுவனம் வங்கி விகிதத்தைவிட $2\frac{1}{2}$% குறைந்தவட்டி விகிதத்தில் கடன் உதவி அளித்து வருகிறது. இச்சலுகையின் மூலம் தலைமை (கோ-ஆப்டெக்ஸ்) மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் $7\frac{1}{2}$% வட்டியில் நடைமுறை மூலதனம் பெற்று வருகின்றன.

இத்திட்டம் 1985-86ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நிறைவேற்

றப்பட்டு 1985-86ஆம் ஆண்டுக்கு 139.24 கோடி ரூபாய் கோ-ஆப் டெக்ஸ் மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதனமாக வழங்க அனுமதித்துள்ளது.

## மூலப் பொருள் வழங்குதல்

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகள் 4.33 இலட்சம் கதிர்கள் திறனைக் கொண்டு, ஆண்டிற்கு சுமார் 1.44 இலட்சம் பேல்களைப் பலதரப்பட்ட வகைகளில் உற்பத்தி செய்கின்றன. கூட்டுறவு நூற்பாலைகளில் அவ்வாறு தயாராகும் நூல்கள் கோ-ஆப்டெக்ஸிற்கு விற்கப்பட்டு, அவை தமிழ்நாட்டில் முக்கிய நெசவாளர்கள் மையங்களில் அமைந்துள்ள கோ-ஆப்டெக்ஸின் விற்பனை நிலையங்கள் மூலம் ஆரம்பக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இவை தவிர, தமிழ்நாட்டில் புதிய கூட்டுறவு நூற்பாலைகள் ரூ.51 கோடி மூலதனச் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. ஊத்தங்கரை, அறந்தாங்கி, தேனி, எட்டையபுரம் கமுதி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவு நூற்பு ஆலைகள் உற்பத்தியை ஆரம்பித்து விட்டன. இவற்றுள், எட்டையபுரம் கூட்டுறவு நூற்பாலை செயற்கை இழை நூல் போன்ற ரகங்களை உற்பத்தி செய்வதற்கான நூல்களை உற்பத்தி செய்து வருகின்றது. கமுதியில் அமைந்துள்ள கூட்டுறவு நூற்பாலை, ஆதி திராவிடர்கள் நலனுக்காக வென்றே அமைக்கப்பட்ட ஒன்றாகும். கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநரைத் தலைவராகக் கொண்ட நூல் விலை நிர்ணயக் குழு, நூற்பாலைகள் கோ-ஆப் டெக்ஸிற்கு வழங்கும் நூல்களின் விற்பனை விகிதங்களை வரையறுக்கிறது. ஒவ்வொரு விற்பனை நிலையத்திற்கும் தேவைப்படும் நூலின் அளவுகளுக்கேற்பக் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், அவற்றிற்குப் பலதரப்பட்ட எண்ணிக்கையில் நூல் ஒதுக்கீடு செய்து வருகிறார். தனிப்பட்ட நூற்பாலைகள், இந்த ஒதுக்கீடுகளை கோ-ஆப்டெக்சின் பல்வேறு விற்பனை நிலையங்களுக்கும் வழங்குகின்றன. இதனால் அனைத்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல் தாராளமாகக் கிடைப்பதுடன், சங்கங்களில் உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பினையும் நல்கி வருகிறது.

## கைத்தறி வளர்ச்சித் திட்டங்களுக்கான உதவிகள்.

இந்திய அரசின் நிதியுதவியினைக் கொண்டு தமிழ்நாடு அரசு கூட்டுறவு கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டங்களைக் காஞ்சிபுரம், ஈரோடு, சேலம், மதுரை ஆகிய இடங்களில் நிறுவியுள்ளது. மேலும், இரண்டு கூட்டுறவுக் கைத்தறி ஏற்றுமதித் திட்டங்களை, கரூர், குறிஞ்சிப்பாடி ஆகிய இடங்களில் நிறுவியுள்ளது. இத்திட்டங்களின் மூலம், இதுவரையில் 18,350 கைத்தறிகள் கொண்டு வரப்பட்டுள்ளன. இத்திட்டங்களின் மூலம் 1985-86ஆம் ஆண்டில் 31.12.85 வரை ரூ.512 இலட்சம் மதிப்புள்ள 63.01 இலட்சம் மீட்டர் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு, 593.40 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேற்படி திட்டங்கள் நலிந்த மற்றும் செயலிழந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைத் தங்கள் பொறுப்பில் எடுத்துக் கொண்டு, அச்சங்கங்களில் உள்ள நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பினை நல்கி வருகின்றன.



## தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப் டெக்ஸ்)

கோ-ஆப்டெக்ஸ் என்று எல்லோராலும் அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், தமிழ்நாட்டில் உள்ள 1600 பிரதம நெசவாளர்கள் சங்கங்களின் தலைமைச் சங்கம் ஆகும். இது நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியில் பொதுவாக 50·/. ஐ கொள்முதல் செய்து நாடெங்கிலும் உள்ள அதன் 613 கிளை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்து வருகின்றது. இச்சங்கம் கடந்த 1984-85ஆம் ஆண்டில் ரூ. 66.14 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்து ரூ. 89.90 கோடி மதிப்புக்கு விற்பனை செய்துள்ளது. மத்திய அரசின், மலிவு ரகத் துணிகளை அளிக்கும் ஜனதா ரகத் திட்டத்தினை இச்சங்கம் நிறைவேற்றி வருகிறது. இதன் மூலம் மக்களுக்கு மலிவு விலையில் ஜனதா ரக வேஷ்டிகள் மற்றும் சேலைகள், லுங்கிகள் போன்றவை கிடைக்கின்றன. தவிர அரசுப் பணியாளர்களுக்கும், உள்ளாட்சித்துறை ஊழியர்களுக்கும் கைத்தறித் துணிகளைக் கடனில் விற்பனை செய்யும் திட்டத்தினையும் கோ-ஆப்டெக்ஸ் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது.

## கைத்தறித் துணி விற்பனையில் தள்ளுபடி

கைத்தறித் துணியின் விற்பனையினைப் பெருக்குவதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளில் நுகர்வோருக்கும் கைத்தறித் துணி வாங்குவதன் மீது தள்ளுபடி அளிப்பதும் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் ஏற்படும் மானியத் தொகையினை மைய அரசும், மாநில அரசும் 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளுதல் என்ற அடிப்படையில் 1985-86ஆம் ஆண்டிற்கு 45 நாட்களுக்கு 20 சதவிகிதச் சிறப்புத் தள்ளுபடி அளிப்பதற்கு முன் வந்துள்ளது. மேற்படித் திட்டத்தின் கீழ் 1984-85ஆம் ஆண்டில் அரசு ரூ. 16 கோடி அளவிற்கு அனுமதி வழங்கியுள்ளது. மேலும், இத்திட்டத்திற்கு 1985-86ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்

திட்டத்தில் ரூ. 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் நிதியுதவி கோரியுள்ளதன்பேரில் ரூ.2.60 கோடி அரசு வழங்கி உள்ளது. எனவே, இதுவரை ரூ.12.60 கோடி நிதி, இத்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்டுள்ளது. மேற்கொண்டு இவ்வாண்டு ரூ.10 கோடி நிதியுதவி அளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டுறவுத் துறையில் அதிக அளவில் தேங்கிக் கிடக்கும் துணிகளை விற்பனை செய்ய இது உதவியாக இருக்கும்.



**நெசவாளர் வீட்டுவசதித் திட்டம்**

1962ஆம் ஆண்டிற்குப் பின்னர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நெசவாளர் வீட்டு வசதித் திட்டம், மீண்டும் கொண்டுவரப்பட்டு 1979-80ஆம் ஆண்டிலிருந்து புதிய மாற்றி அமைக்கப்பட்ட நெசவாளர் திட்டம் செயல்படுத்தப்பட்டுவருகிறது. மாற்றியமைக்கப்பட்ட இத் திட்டத்தின் கீழ் ஒரு வீடு கட்டுவதற்கு ரூ.12,000 செலவாகிறது. இதில் அரசு மானியமாக ரூ.1,000 அளிக்கப்பட்டு வருகிறது. வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் ரூ.9,700 அளவிற்குக் கடன்உதவி செய்கிறது. மீதித் தொகையான 1300 ரூபாயை, பயனடையும் நெசவாளர் செலுத்த வேண்டும். கூட்டுறவுத் துறையின்கீழ் கைத்தறி நெசவாளர்களின் பயனுக்காக 3219 வீடுகள் கட்டுவதற்கு எடுத்துக்கொண்டதில் 31.12.85 முடிய 3027 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. மேலும் 192 வீடுகள் பல்வேறு நிலையில் கட்டப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கு 85-86ஆம் நிதி ஆண்டில் ரூ.10 இலட்சம் மானியமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்**

கூட்டுறவு அமைப்பின் கீழ் வராத கைத்தறி, விசைத்தறித் தொழில்களுக்கும், அதன் துணைத் தொழில்களுக்கும் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் மூலம் கடன் உதவிஅளிக்கப்பட்டு வருகிறது. இக்கழகம் 2028 தனியார் கைத்தறி நெசவாளர்களுக்களுக்கு நடைமுறை மூலதனத்தினைக் கடனாக ரூ. 196.55 இலட்சம் அளித்துள்ளது.

**தமிழ்நாடு சரிகை நிறுவனம், காஞ்சிபுரம்**

காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்நாடு சரிகை நிறுவனம் பிரதம பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான சரிகையை உற்பத்தி செய்து வழங்கி வருகிறது. இந்நிறுவனம் அதன் சரிகை உற்பத்தியை மாதம் ஒன்றுக்கு 500 மார்க்குகளிலிருந்து சுமார் 1000 ஆக உயர்த்தியுள்ளது.

கைத்தறித் துணிகளின் விற்பனையை ஊக்குவிக்கும் பொருட்டு ஈரோட்டில் தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த ஆலை மாதம் ஒன்றிற்கு சுமார் 10 லட்சம் மீட்டர் கைத்தறித் துணிகளுக்கு வெளுக்கப்படுதல், பிரிண்ட் செய்தல், சாயம் போடுதல், பளபளப்பாக்குதல் முதலிய பதனிடும் வசதிகள் செய்து கொடுக்கும் திறனுடையது. இவ்வாலையில் கூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்களுக்குத் தேவையான நூலும் சாயமிடப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், அரசுப் பணியாளர்கள், உள்ளாட்சி நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்குக் கைத்தறித் துணிகளை வாங்குவதற்கான கடன் வசதித் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இந்திய அரசும் தம் பணியாளர்களுக்கும் இத்திட்டத்தினைக் கொண்டு வர, மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ஏற்றுமதிக்கென்று ஒரு தனிஅமைப்பினை கோ-ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல் என்ற பெயரில் ஏற்படுத்தி விற்பனையைப் படிப்படியாக அதிகரித்து வருகிறது. 1985-86ஆம் ஆண்டில் குறைந்தளவு இரண்டு கோடி ரூபாய் அளவிற்குத் துணியினை ஏற்றுமதி செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புத் துறைக்கும், துணை இராணுவப் பிரிவுகளுக்கும் தேவைப்படும் ஒரு பகுதித் துணிகளை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்குப் பாதுகாப்புத் துறையினரை மாநில அரசு அணுகியுள்ளது. முதல் அமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்படுத்தும் பள்ளிக்கூட மாணவ, மாணவிகளுக்குக் கைத்தறிச் சீருடையினை இலவசமாக வழங்க ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நமது மாநிலத்தில் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள நெசவாளர்களின் நலனுக்காகக் ''கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் பாதுகாப்பு மற்றும் சேமிப்புத் திட்டம்'' என்ற நலத் திட்டம் செயல்படுத்தப்பட்டுவருகின்றது. இத்திட்டத்தின்கீழ் கட்டுக் காப்புறுதித் திட்டத்தின் மூலம் மொத்தமாக அனைத்து நெசவாளர்களையும் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை சுமார் 1,02,300 கைத்தறி நெசவாளர்கள் கொண்டு வரப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நெசவாளியும் தன்னுடையகூலியில்ஒருரூபாய்க்கு 6 காசு தருகின்றனர். அரசு ஒரு ரூபாய்க்கு 3 காசு வீதம் மானியம் அளிக்கிறது. இதன் மூலம் சேரும் தொகைக்கு ஆண்டொன்றுக்கு 7 சதவிகிதம் வட்டி அளிக்கிறது. இத்திட்டத்தின்கீழ் ஒரு நெசவாளி இறக்க நேரிட்டால் அந்த நெசவாளியின் சேமிப்பில் உள்ள தொகையும் அரசு மானியமும் அதற்குண்டான வட்டியுடன் ரூ.3000, ஆயுள் காப்புறுதிக் கழகத்தின் மூலம் அவரது வாரிசுதாரருக்கு வழங்கப்பட்டு வருகிறது

மொத்தத்தில் தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் நித்தமும் வளர்ச்சிபெற்று வருகிறது என்று சொல்வது சாலப் பொருந்தும்.

# நெல்லை மாவட்டத் தொழில் மையம்

மாவட்டத்தில் தொழில் வளம் பெருகவேண்டும். சிறுதொழில்கள் கிராமத் தொழில்கள் பெருமளவில் வளர்த்து பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வேலையில்லாத் திண்டாட்டம் குறைய வேண்டும், உற்பத்தி பெருக வேண்டும் என்கிற மையக் கருத்துடன், மாவட்டத் தொழில் மையம் உருவாக்கப்பட்டு திருநெல்வேலி மாவட்டத்தில் 1-7-78 முதல் செயல்பட்டு வருகிறது.

தொழில் தொடங்க தேவைப்படும் பூர்வாங்கத் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கி, தொழில் தொடங்கி நடத்த, நிலம், கட்டடம், இயந்திரம் ஆகியவற்றிற்கு ஆகும் நிதி வசதிக்கான ஏற்பாடுகளுக்கு உதவி, உரிமங்கள் ஒப்புதல் பெற்றுத்தரல், சிறுதொழில் பதிவு, மானியங்கள், வட்டியில்லா விற்பனை வரிக்கடன், வியாபாரச் சந்தைக்கு உதவுதல் போன்றதொழில்முகவர்களுக்குத் தேவையுறும் அனைத்துப் பணிகளுக்கும் உதவுதல் போன்ற செயல் திட்டங்கள் தொழில் மையத்தில் உள்ளன.

தொழில் மையத்தில் பல்வேறு தொழில்களுக்கென 1000-க்கு மேற்பட்ட தொழில் திட்டங்கள் உள்ளன. புதிதாகத் தொழில் தொடங்க வருகிறவர்கள் உணவு, இரசாயனம், பொறியியல்போன்ற தொழில்களில் தங்கள் விருப்பத்திற்கும், தொழில் நுட்பத் தகுதிக்கும், அனுபவத்திற்கும் ஏற்றவாறு தொழில்களைத் தேர்வு செய்து தொழில் நுட்ப ஆலோசனை பெறலாம். 15,681 பார்வையாளர்களுக்குத் தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.



**மு. இராசகோபாலன்**
பொது மேலாளர்,
மாவட்டத் தொழில் மையம்,
திருநெல்வேலி.


புதிதாகத் தொழில் முகவர்களைக் கண்டறிய, தொழில் ஊக்குவிப்பு முகாம்களை இம்மையம் நடத்துகிறது. மாவட்டத்தில் உள்ள 31 வட்டார வளர்ச்சிப் பகுதிகளிலும் 93 ஊக்குவிப்பு முகாம்கள் நடத்தி 5632 தொழில் முனைவோர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

**சிறு தொழில் பதிவுச் சான்றிதழ்**

தொழில் முகவர்கள் தொழில் திட்டம் தேர்வு செய்த பின்னர், செயல்திட்டத்தில் முதல் கட்டமாகத் தற்காலிகச் சிறுதொழில் பதிவுசெய்த சான்றிதழ் வழங்கப்படுகிறது. இது ஓர் ஆண்டுக் காலத்திற்குச் செல்லுபடியாகும். தேவையினைப் பொறுத்து ஓராண்டிற்கு மேலும் புதுப்பிக்கப்படுகிறது. இவ்விரண்டாண்டுக் காலகட்டத்தில் தொழில் தொடங்கி உற்பத்தி ஆரம்பித்த பின்னர் தொழில் மையம் நிரந்தரப் பதிவுச் சான்றிதழ் வழங்குகிறது. தற்காலிகச் சிறுதொழில் பதிவுச் சான்றிதழ் பெற்றதிலிருந்து உற்பத்தி தொடங்கி நிரந்தரச் சான்றிதழ் பெறும் காலம் வரையிலும் தொழில் முகவர்களின் பல்வேறு செயல் திட்டங்களுக்குத் தொழில் மையம் வழி நடத்துனராக, ஆலோசகராக இருந்து பணியாற்றுகிறது.

30-11-85 முடிய தொழில் முனைவோருக்கு 11087 தற்காலிகச் சான்றிதழ்களும், 2757 நிரந்தரச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன. இதன் வழி 23701 பேர்களுக்கு வேலை வாய்ப்புப் பயன் கிட்டியுள்ளது.






4758 கைவினைத் தொழில்கள் பதிவு செய்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

**உரிமங்கள் பெறுதல்**

தொழில்கள் தொடங்கி நடத்த பொதுச்சுகாதாரத்துறை தொழில்சாலைகளின் ஆய்வாளர் துறை, நகர் மற்றும் ஊர்அமைப்புத் துறை, ஊராட்சி ஒன்றியத்தின் உரிமமோ அல்லது நகராட்சிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டால், நகராட்சி ஒன்றியத்தின் உரிமமோ பெறப்படல் வேண்டும். இவ்வகை உரிமங்கள் பெற தொழில் மையம் தக்கவாறு உதவுகிறது. மின்சார இணைப்பு விரைவில் கிடைப்பதற்கும் உதவுகிறது. 405 உரிமங்கள் மற்றும் மின் இணைப்புகளுக்கும் உதவப்பட்டுள்ளது.

நிதி வசதி: தொழில் மையம் விதைப்பணங்கடன் வழங்குகிறது. இதுகாறும் 265 தொழில்களுக்கு ரூ. 29.42 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. தொழில்களுக்குத் தேவையான நிதிவசதியில் நிலம், கட்டடம், இயந்திரம் பெறத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தை அணுகப் பரிந்துரை செய்யப்படுகிறது. இயந்திரம் மட்டும் தவணை முறைத் திட்டத்தில் பெற தேசிய சிறு தொழில் கழகம் உதவுகிறது. நடைமுறைமூலதனத்திற்கு வங்கிகளை அணுகலாம். அதற்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.

தொழில் மையத்தில் நிதிவசதிப் பணிகளுக்கென மேலாளர் ஒருவர் பணியாற்றுகிறார். இது வரை 3173 நபர்களுக்கு ரூபாய் 367.81 இலட்சம் நிதி வசதி பெற்றுத் தரப்பட்டுள்ளது. தவணை முறைத் திட்டத்தில் இயந்திரம் பெற 66 தொழில் நிலையங்களுக்கு 38.67 இலட்சம் உதவப்பட்டுள்ளது.

7 தொழிற்கூடங்களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

1-1-80-க்குப் பின்னர் உற்பத்தியைத் தொடங்கிய தொழில் நிலையங்களுக்கு மின்சார மானியம் வழங்கப்படுகிறது. 113 தொழில்களுக்கு மின்சார மானியம் வழங்கப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்டத்தில் நாங்குநேரி, ராதாபுரம், விளாத்திகுளம் வட்டங்களில் தொடங்கப்படும் தொழில்களுக்கு 15 சதவிகிதம் முதலீட்டு மானியம் வழங்கப்படுகிறது. 50 தொழில்கள் புதிதாகத் தொடங்கப்பட்டு ரூ. 8.63 இலட்சம் மானியம் சிட்கோ நிறுவனம் மூலமாக வழங்கப்பட்டுள்ளது.

**சுய வேலை வாய்ப்புத் திட்டம்**

இந்தியப் பிரதமர் அவர்களின் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்குச் சுயமாகத் தொழில்களில் ஈடுபட்டு வேலை இல்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இத்திட்டத்தின் சிறப்பம்சம், எந்தவித ஜாமீனும் இன்றி ரூ.25,000 வரை கடனாக வழங்கப்படுவதும், அதில் 25 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுவதும் ஆகும்.

இத்திட்டத்தில் பயன் பெற ஒருவர் எஸ். எஸ். எல். சி. தேர்வு பெற்றிருக்க வேண்டும். வேலையில்லாதவராகவும் 18 வயது முடிவுற்றவராகவும் 35 வயது முடிவுறாதவராகவும் இருக்க வேண்டும். 1983-84ஆம் ஆண்டில் 740 பேர்களுக்கு ரூபாய் 1.10 கோடியும், 1984-85ஆம் ஆண்டில் 917 இளைஞர்களுக்கு ரூ. 1.47 கோடியும் கடனாகத் தொகை பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. 1985, 86ஆம் ஆண்டு 1,000 பேர் பயன்பெறத் திட்டம் உள்ளது. 30-11-85 முடிய 390 பேர்களுக்கு ரூபாய் 78.05 இலட்சம் வங்கிகளுக்குக் கடன் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. டிசம்பர் 85 முடிய 499 பேர்களுக்கு ரூபாய் 1 கோடி வரை பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆக, இரண்டு ஆண்டில், படித்த இளைஞர்கள் பல்வேறு புதிய தொழில்களைத் தொடங்கி உள்ளார்கள்.

இளைஞர்களுக்குத் தொழில்களில் ஏற்பட்டுள்ள புதிய ஆர்வம் தொழில் தொடங்குபவர்களுக்கு அரசின் பலவகைச் சலுகைகள், வசதிகள் மற்றும் தொழில் மையத்தின் ஊக்கப் பணிகள் மாவட்டத்தின் தொழில் வளர்ச்சிக்கு உகந்ததாக அமைந்து மாவட்டப் பொருளாதார வளம் உற்பத்தி பெருகி, வேலையில்லாத் திண்டாட்டம் குறையும் என்பது திண்ணம்.

# புதிய நெல்ரகம் ஏஎஸ்டி 16

ஆடுதுறை 31 மற்றும் கோ.39 (அமராவதி) ஆகிய இரு ரகங்களையும் கரு ஒட்டு சேர்த்து அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சிப் பண்ணையில் உருவாக்கப்பட்ட ஏஎஸ் 19789 என்ற வளர்ப்பு. ஏஎஸ்டி 16 என்றபுதிய ரகமாக இவ்வாண்டு (1986) தமிழக உழவர் பெருமக்களுக்கு அரிய பரிசாக வெளியிடப்பட்டுள்ளது.

இப் புதிய இரகத்தின் செடிகள் வளர்ந்து சாயாதவை. (90-95 செ.மீ.) வயது 110-115 நாட்கள். இந்த ரகம் அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சி நிலையத்தில் எக்டேருக்குச் சராசரி 5.6 டன் தானிய விளைச்சலை அளித்துள்ளது. இவ்விளைச்சல் டிகேஎம் 9 இரகத்தை விட 13.9 சதவீதம் அதிகமாகும். மேலும் தமிழகத்திலுள்ள ஆராய்ச்சி நிலையங்கள், பல்லட ஆய்வுப் பாத்திகள், அனுசரணை ஆராய்ச்சித் திடல்கள், மற்றும் அகில இந்திய ஒருங்கிணைந்த நெல் அபிவிருத்தித் திட்டத்தின் ஆய்வுகள், அனைத்து நாட்டு நெல் விளைச்சல் ஆய்வுப் பாத்திகள் அனைத்திலும் ஆடுதுறை 36, ஐஆர் 50, ஐ.ஆர்.36 ஆகிய ரகங்களை விட 4.6-24.6 சதவிகிதம் வரை அதிக விளைச்சலை அளித்துள்ளது. இதன் அதிக அளவு தானிய விளைச்சல் திறன் எக்டேருக்கு 9.8 டன் ஆகும்.

ஏஎஸ்டி 16 எக்டேருக்குச் சராசரியாக 8 டன் வைக்கோல் தரவல்லது. இந்த விளைச்சல் டிகேஎம்.9, ஆடுதுறை 31, ஆடுதுறை 36, ஐ.ஆர்.50, கோ.37 (வைகை), மற்றும் ஐஇடி.1444 (இராசி) ஆகிய இரகங்களை விட 4.6-60.1 சதவிகிதம் அதிகமாகும்.

இப்புதிய ரகம் எக்டேருக்கு 120 கிலோ வரை தழைச்சத்தை ஏற்கும் திறன் படைத்தது. அரவையின்போது அரிசி காணும் திறன் 71 சதவீதமாகும். ஏஎஸ்டி 16 அரிசியிலுள்ள 10.25 சதவிகிதம் புரதச்சத்து, டிகேஎம்.9 (6.9%) மற்றும் ஆடுதுறை 36 (8.53%) ஆகியவற்றிலுள்ளதைவிட அதிகமாகும். சோறு மற்றும் பலகாரங்கள் செய்ய மிகவும் ஏற்றது.

இந்த ரகத்தில் 35 நாட்கள் வயதுடைய நாற்றுகளை நட்ட போதும் விளைச்சல் பாதிக்கப்படுவதில்லை. தமிழகம் முழுவதும் சொர்ணவாரி/கார்/குறுவை பட்டத்தில் (ஏப்ரல்-ஜூலை மாதங்களில் நாற்றுவிட) டிகேஎம் 9, ஆடுதுறை 31, ஆடுதுறை 36, வைகை, இராசி, ஐ.ஆர்.50 ஆகிய ரகங்களுக்கு மாற்று ரகமாகப பயிரிட ஏற்றது. மேலும் பிந்திய தாளடி-பிந்திய பிசானத்தில் (நவம்பரில் நாற்றுவிட) மற்றும் நவரை (டிசம்பர் ஜனவரியில் நாற்றுவிட) பருவத்தில் சாகுபடி செய்யவும் உகந்தது.

ஏஎஸ்டி.16 நெல் ரகத்தில் அதிக விளைச்சல் பெறக் கீழ்க் கண்ட சாகுபடிக் குறிப்புகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.



**பயிரிட ஏற்ற இடங்கள்**

தமிழகமெங்கும், ஆடுதுறை 31, ஆடுதுறை 36, டிகேஎம்.9, வைகை, இராசி, ஐ.ஆர்.59 ரகங்களுக்கு மாற்று ரகமாகப் பயிரிட ஏற்றது.

**பருவம்**

1. சொர்ணவாரி-கார்-குறுவை பட்டம் (ஏப்ரல்-ஜூலை மாதங்களில் நாற்றுவிட)

2. பிந்திய தாளடி-பிந்தியபிசானம் பட்டம் (நவம்பரில் நாற்றுவிட)

3. நவரைப் பட்டம் (டிசம்பர்-ஜனவரியில் நாற்றுவிட)

விதையளவு (ஏக்கருக்கு) 24கிலோ.

நாற்றங்கால் பரப்பு: 8 செண்ட் (செண்டுக்கு 3 கிலோ விதை).

நாற்றங்கால் தயாரிப்பு: 8செண்ட் நாற்றங்காலில் 400கிலோ தொழு உரம் இட்டு, பின்பு நீர் பாய்ச்சி நன்கு உழவும் அல்லது 160 கிலோ பசுந்தழை உரத்தை மக்கச் செய்து உழவு செய்த வயலில் கடைசி உழவில் செண்டிற்கு 2 கிலோ டை அம்மோனியம் பாஸ்பேட் உரமிட்டு நன்கு பரம்படித்து நீரைச் சீராக வைக்கவும்.

நாற்றின் வயது 25-35 நாட்கள்.

நடவு இடைவெளி: 15X10செமீ (சதுரமீட்டருக்கு 66 குத்துக்கள்).

நடவு: குத்திற்கு 2-3 நாற்றுக்களை மேலாக (2 செ.மீ.ஆழத்தில் இருக்குமாறு நடவு செய்யவும்),

**நடவு வயலில் உரம் (கிலோ-ஏக்கர்)**

அடியுரமாக ஏக்கருக்குத் தழைச்சத்து 20 கிலோ, மணிச்சத்து 20 கிலோ, மற்றும் சாம்பல் சத்து 20 கிலோ இடவேண்டும்.

மேலுரமாக ஏக்கருக்குத் தழைச்சத்து 20 கிலோவை நட்ட 15ஆம் நாள் 10 கிலோ, 35ஆம் நாள் 10 கிலோவும் இடவேண்டும்.

களை நீக்கம்: நட்ட 5-வது நாளுக்குள் 800முதல் 1000 மில்லி பூட்டோகுளோர் எனும் களைக்கொல்லி மருந்தை 20 கிலோ மணலுடன் நன்கு கலந்து வயலில் 2.5 செ.மீ. ஆழ நீரை நிறுத்தி, சீராக இடவும். களைக் கொல்லி இட்ட பின்பு நீரை

வடிக்கக்கூடாது. இரண்டாவது களை தேவைப்பட்டால் எடுக்கலாம்.

நீர் பராமரிப்பு: 2.5 செ.மீ. அளவுக்கு அதிகமில்லாமல் நீர் இருக்க வேண்டும். தூர்கட்டும் பருவம், பால்பிடித்து மணிகள் முற்றும் பருவம் ஆகியவற்றில் மெழுகுப் பத அளவு ஈரம் இருக்க வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு: பூச்சி நோய்களைச் சிறப்பாகக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடிக்கவும்.

பருவத்தில் விதைத்தல் ,ஒரு பகுதியில் ஒரே சமயத்தில் விதைத்தல், விதை நேர்த்தி, நாற்றங்காலில் பாதுகாப்பு, நடவு வயலில் பயிருக்கு ஏற்படும் பொருளாதாரச் சேதத்தைக் கருத்தில் கொண்டு தேவையான பொழுது, உகந்த பூச்சி பூசனக் கொல்லி மருந்துகளைச் சிபாரிசுப்படி உரிய அளவில் உபயோகித்தல் போன்றவை இதில் அடங்கும்.

அறுவடை: பயிர் பூத்த25-40 நாட்களில் கதிரின் அடிப்பாகத்தில் உள்ள 4-5 மணிகள் பசுமையாக இருக்கும்போதே அறுவடை செய்யவும்.

சேமிப்பு: கதிர் அடித்தவுடன் நெல்லை உடனே காய வைக்கவும். சேமிப்பதற்கு முன் மீண்டும் இரண்டு காய்ச்சலிட்டு விதையின் ஈரப்பதத்தை 10-12சதத்துக்குள் கொண்டு வரவும்.


தகவல் : வி: வில்பிரட் மானுவல்
சு. வைரவன்
கோ. கணேசன்
தி. சுந்தரம்.
எஸ். பழனிச்சாமி
மா. சுப்பிரமணியன்

**மின்னணு மொழிபெயர்ப்புக் கருவி:**

ஐரோப்பிய நாடுகளில் பயணம் செய்வோர்க்கு, ஆங்கிலம் மட்டும் தெரிந்தால் போதாது; இது ஒரு குறை. மற்ற மொழிகளும் தெரியவேண்டியது அவசியம். இக்குறையைப் போக்க தற்போது ஒரு மொழிபெயர்ப்புக் கருவி வந்துள்ளது. அமைப்பில், சிறுகணிப்பொறி (calculator) போன்றது. மின்னணுவால் இயங்கவல்லது. ஆங்கிலம் தெரிந்தாலே போதும். இக்கருவியின் துணை கொண்டு, ஜெர்மன், பிரெஞ்சு, ஸ்பானிஷ் போன்ற மொழிகளில் உள்ள 4000 சொற்களைத் தெரிந்து கொள்ளலாம்!

மின்னணு மொழிபெயர்ப்பை ஒரு அகராதி வெளியீட்டார் செய்திருக்கிறார்கள். மாணவர்களும், சுற்றுலாப் பயணிகளும், ஐரோப்பிய நாட்டாரோடு, செய்தி பரிமாற்றம் செய்து கொள்ள ஏற்றதொரு அமைப்பு. மொழிச்சிக்கல் இருக்காது.

# வேலா சுறா



சென்னைக்கு அருகில் ஆந்திரக் கடற்கரைக்குச் சமீபத்தில்-மிகப் பெரிய சுறா மீன் ஒன்று 16.2.86 அன்று பிடிக்கப்பட்டது.

பூங்காவனம் குப்பம் மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான கண்ணாடி நாரிழைப் படகில் மீன் பிடிக்கச் சென்றபோது இந்தச் சுறா மீன் சிக்கியது. இதனை மிகவும் கஷ்டப்பட்டு கரை சேர்த்தனர்.

ரம்பம் போன்ற மூக்குள்ள இந்தச் சுறா, வேலா வகையைச் சார்ந்தது. இது 17 அடி நீளம் உள்ளது.

இந்த மீனைப் பற்றிய தகவல்கள் வருமாறு:

| | |
|---|---|
| பெயர் | : பிரிஸ்டிஸ் பெரோடேட்டி |
| தமிழ்ப் பெயர் | : வேலா சுறா |
| இனம் | : பெண் |
| மொத்த நீளம் | : 5 மீட்டர் 30 சென்டி மீட்டர் |
| ரம்பம் போன்ற மூக்கின் நீளம் | : 1 மீட்டர் 30 சென்டி மீட்டர் |
| எடை | : சுமார் 1 டன் |



## ஒருங்கிணைந்த பழங்குடியினர்க்கு குறைந்த விலையில் கோதுமை, அரிசி விநியோகம்!

மைய அரசு, ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் அமலில் உள்ள பகுதிகளில், கோதுமை கிலோ ரூ.1.50, அரிசி கிலோ ரூ. 1.85 என்ற குறைந்த விலையில் உணவு தானியங்களைக் குடும்ப அட்டைகளுக்கு வழங்கும் திட்டத்தை அனுப்பியது. தமிழ்நாடு அரசு அத்திட்டத்தைப் பரிசீலித்து கோதுமை கிலோ ரூ.1.50, அரிசி கிலோ ரூ. 1.40 என்ற விலையில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டம் அமலில் உள்ள ஒன்பது பகுதிகளில் உள்ள 38,072 குடும்ப அட்டைதாரர்களுக்குச் செயல்படுத்த முடிவு செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

இந்தத் திட்டம் சேலம் மாவட்டத்தில் ஏர்க்காடு மலைகள், கொல்லி மலைகள், கல்ராயன் மலைகள், அரநூத்து மலை, பச்சை மலை ஆகிய பகுதிகளிலும் வடார்க்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலையிலும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கல்வராயன் மலையிலும், தர்மபுரி மாவட்டத்தில் சித்தேரி மலையிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பச்சை மலையிலும் செயல்படுத்தப்படும்.

இத் திட்டத்தில் குடும்ப அட்டைக்கு அதிகபட்சமாக மாதமொன்றுக்கு 30 கிலோ கோதுமை வழங்கப்படும். இதற்கு மேல் கோதுமை தேவைப்படுவோர், பொது விநியோக முறையில் விற்கும் விலையில் வாங்கிக் கொள்ளலாம். மாதமொன்றுக்கு, பெரியவர்களுக்கு 4 கிலோ, சிறுவர்களுக்கு 2 கிலோ வீதம், ஒரு குடும்ப அட்டைக்கு 12 கிலோ வரை அரிசி கொடுக்கப்படும்.

---

# நீரிழிவு ஒரு நோயே அல்ல!

நீரிழிவு ஒரு நோயே அல்ல. இரத்தத்திலும் சிறுநீரிலும் அதிக அளவு சர்க்கரை உள்ள ஒரு நிலையே நீரிழிவு. இதைக் கட்டுப்படுத்தாவிட்டால்தான் இது ஒரு நோயாக மாறுகிறது.

இந்தக் கட்டுப்பாட்டிற்கு உணவுப் பழக்கம் மிகவும் முக்கியமானது.

உணவுக்கட்டுப்பாட்டிற்குப் பின்னும் சர்க்கரை நிலை குறையாமல், மாத்திரை, ஊசிகளால்தான் குறையும் என்ற நிலை வந்தால், மருத்துவரின் ஆலோசனைப்படி நடந்து கொள்ள வேண்டும்.

மாதம் ஒரு முறையாவது மருத்துவரைக் கலந்தாலோசிக்க வேண்டும்.

உடலின் எந்தப் பகுதியிலாவது சிறிதளவு காயம் ஏற்பட்டாலும் உடனடியாக மருத்துவரிடம் காண்பித்து, சிகிச்சை பெறவேண்டும்.

நாள்தோறும் நன்றாகத் தேய்த்துக் குளிக்க வேண்டும். ஈரத் துணியுடன் இருக்கக் கூடாது.

இறுக்கமாக ஆடைகள் அணிவது தவறு.

காலணிகள் இல்லாமல் நடக்கக்கூடாது.

வயதிற்கும் சக்திக்கும் ஏற்ப உடற்பயிற்சி செய்யவேண்டும்.

முடிந்தவரை மனதை அமைதியுடன் வைத்துக்கொள்ள வேண்டும்.

இரவில் வெகுநேரம் கண் விழித்திருக்கக் கூடாது.

உடலின் எடை அதிகமாவதோ அல்லது குறைவதோ நல்லதல்ல.

திடீரென வியர்த்தாலோ அல்லது மயக்கமாக, பலவீனமாகத் தோன்றினாலோ உடனே மருத்துவரிடம் செல்லவேண்டும்.

நோய் உள்ளவரின் குழந்தைகளும், நெருங்கிய உறவினர்களும் சர்க்கரை நிலையைப் பரிசோதித்துக் கொள்ளுதல் நல்லது.

அரிசியை ஒதுக்கி கோதுமை சாப்பிடுவதால் மட்டும் பயனில்லை, உணவின் அளவுதான் முக்கியம்.

சர்க்கரையை எந்த விதத்தில் இருந்தாலும் ஒதுக்கிவிடுங்கள்.

எந்த நேரத்திலும் பசியுடன் இருக்கக் கூடாது.

சீரான உணவு முறையாலும் சாதாரண உடற்பயிற்சியாலும் சர்க்கரை நிலையைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியும்.

—டேனிடா செய்தி மடலிலிருந்து



# உணவு உற்பத்தியில் உத்வேகம்

**சி. பி. இராமநாதன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**புதுக்கோட்டை.**

இந்தியப் பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டத்தில் வேளாண்மைக்கும், வேளாண்மை விரிவாக்கத்திற்கும், உணவு உற்பத்திக்கும் மிகவும் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

வேளாண்மை என்று கூறும்போது பழைய சாகுபடி முறைகளை விட்டுவிட்டு, நவீன தீவிரச் சாகுபடி முறைகளைக் கையாளுதலும், அதன் மூலம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுதலுமே நமது குறிக்கோள்களாகும்.

நவீன சாகுபடி முறைகள் என்ற புதிய நோக்கில், வேளாண்மைப் பொறியியல் துறையானது பல்வேறு சிறப்பான திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது.

**டிராக்டர்கள் மூலம் நவீன இயந்திர உழவு**

விவசாயத்திற்கு மிகவும் முக்கியம் நல்ல தரமான, வளமான நிலம். மண்ணின் வளமும் அதிலும் நன்கு பண்படுத்தப்பட்ட மணலும் மிகவும் தேவை. அப்போதுதான் விதைக்கப்பட்ட விதை நன்கு முளைத்து. வேர் விட்டு வளர்ந்து, பூத்து, காய்த்து பலன் தரும். பெய்யக்கூடிய சிறிதளவு மழையையும், மானாவாரி நிலங்களில் மண்ணுக்குள் இழுத்து பயிருக்குக் கிடைக்குமாறு செய்யும்.

''சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்'' என வள்ளுவர் கூறியுள்ளார். அதன்படி இந்த உலகமே ஏரின் இயக்கத்தைப் பொறுத்தே உள்ளது. பழைய முறைப்படி நாட்டுக் கலப்பை மூலம் உழவு செய்யும்போது சரியான ஆழமும், மண்ணை நன்கு கிளறி புரட்டி விடுதலும், விரைந்து உணவு செய்தலும் இயலாமல் போய்விடுகிறது. தற்போதைய முறையில் முன்னேற்றம் செய்து கண்டுபிடிக்கப்பட்ட டிராக்டர், புல்டோசர் போன்ற பல நவீனக் கருவிகள் உள்ளன.


உழுவதற்கும், விதைப்பதற்கும், உரமிடுவதற்கும், களை எடுப்பதற்கும் மற்றும் அறுவடை செய்வதற்கும் என மண்ணுக்கும், பயிருக்கும் ஏற்றவாறு பல கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. விலை கொடுத்து வாங்க இயலாத விவசாயிகள் வாடகைக்காவது இவற்றைப் பெறுவதற்கு வாய்ப்புகள் நிறையப் பெருகி உள்ளன.

தவிரவும், மானாவாரி நிலங்களாக இருந்தால் சாதாரணமாக விதைப்பதற்கு முன்னர் கோடையில் ஒரு உழவு செய்தல் மிகவும் நல்லது. இந்தக் கோடை உழவினால் மண் நன்கு பண்படுத்தப் படுகிறது. காற்றோட்டம் ஏற்படுத்தப்படுகிறது. கோடையில் பெய்யும் மழை நீர் வீணாகாமல் வயலில் நிறுத்தப்படுகிறது. அடுத்து வரும் விதைக்கும் பட்டத்தில் உழவு செய்யும்போது மண் நன்கு பக்குவப்பட்ட நிலையில் இருப்பதால், விதைக்கும் விதைகள் நன்கு முளைக்கின்றன. எனவே இந்தக் கோடை உழவிற்கு டிராக்டர்கள் மூலம் கல்டிவேட்டர் இணைத்து உழவு செய்தல் மிக்க பயன் தருகிறது.

சாதாரணமாக ஒரு ஏக்கர் உழவு செய்ய ஒரு மணிநேரம் மட்டுமே ஆகும். பழைய முறையில் நாட்டுக் கலப்பையினால்

இவ்வளவு பரப்பு உழவு செய்ய முடியாதது மட்டுமல்ல, மண்ணும், நன்கு ஆழமாகவும், புரட்டியும் உழவு செய்ய இயலாது. தமிழக விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற ஒவ்வொரு மாவட்டத்திலும் வேளாண்மைப் பொறியியல் துறையின் பொறுப்பில் ஏராளமான டிராக்டர்கள், கல்டிவேட்டர் உழவிற்குத் தயாராக இருக்கின்றன. மிகக்குறைந்த வாடகையாக மணிக்கு ரூ. 45 மட்டுமே பெற்றுக் கொண்டு வேறெந்தச் செலவும் இன்றி உழவு செய்து தர வசதியுள்ளது.

சென்ற 1984-85-ஆம் ஆண்டில் இம்மாதிரி கோடை உழவும் மற்றும் பிற பருவ கால உழவும் செய்தவகையில் ஏராளமான விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். 1984-85-க்கான இலக்காக 3200 மணி நேரம் நிர்ணயிக்கப்பட்டதில் 3540 மணி நேரம் சாதனை எய்தப்பட்டுள்ளது.



கரடுமுரடான காடுகளையும், மேட்டுப் பாங்கான பகுதிகளையும், சரிவான நிலங்களையும், திருத்தி, சமன் செய்து, சாகுபடிக்கு ஏற்றவகையில் அமைத்துத் தர புல்டோசர்கள் என்ற பெரிய நவீன இயந்திரங்கள் தற்போது தமிழகத்தில் நிறைய புழக்கத்தில் உள்ளன. வேளாண்மைப் பொறியியல் துறை இந்த புல்டோசர்களை மிகவும் குறைந்த வாடகைக்கு விவசாயிகளுக்கு வழங்குகிறது. எல்லாச் செலவுகளும், டீசல் செலவும் உட்பட மணிக்கு ரூ.125 மட்டுமே வசூல் செய்யப்படுகிறது. இதனால் வெகுஆண்டுகளாகத் தரிசாய்ப் போட்டிருந்த காடுகள் கழனிகளாகிப் பயிர் விளைவித்துப் பயன் பெற்று வருவதைக் கண்கூடாகக் காணலாம். அருகிலேயே ஒருகிணறும் இருந்துவிட்டால் நன்செய் நிலமாகவே மாற்றிவிடலாம்.

புதுக்கோட்டை வேளாண்மைப் பொறியியல் துறையின் விரைவுத் திட்ட அலுவலகத்தில் ஆறு புல்டோசர்கள் இப்பணிக்கென்றே இருக்கின்றன. 1984-85ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 9100 மணி நேரத்தையும் மிஞ்சி 10,074 மணி நேரங்கள் புல்டோசர்கள் இயங்கி 20 அம்சத் திட்டத்தில் ஒரு சாதனை எய்தப்பட்டுள்ளது.

**சிறு பாசனத் திட்டங்கள்**

இந்த வகையில் புதிய குழாய்க் கிணறுகள் அமைத்தலும், ஏற்கெனவே உள்ள கிணறுகளில், குழாய்க்கிணறுகள் அமைத்தலும் பாறைக் கிணறுகளை வெடி வைத்து ஆழப்படுத்தலும் அடங்கும்.

தோட்டக் கலை நிலங்களுக்கு மிகவும் இன்றியமையாதது கிணற்று நீர்ப்பாசனம், புதுக்கோட்டை மாவட்டத்தில் மேற்குப் பகுதியான குளத்தூர் தாலுகாவில் பாறைக் கிணறுகளும், கிழக்குப் பகுதியில் வெட்டப்பட்ட மண் கிணறுகள், குழாய்க் கிணறுகள் ஆகியவை அதிகமாக உள்ளன. பருவ கால மாறுபாட்டின் காரணமாகவும், இங்கு மழை சரிவரக் கிடைக்காத காரணத்தாலும், நில நீர் மட்டம் தாழ்ந்து கிணறுகள் வற்றிவிடும் நிலையில், வேளாண்மைப் பொறியியல் துறை சிறு பாசனத் திட்டத்தின் கீழ் உள்ள கீழ்க்கண்ட நவீனக் கருவிகள் விவசாயிகளுக்குக் கைகொடுக்கிறது.

இதனால் புதிய குழாய்க்கிணறுகள் குறைந்த ஆழத்தில் அமைக்கவும், ஏற்கெனவே உள்ள மண் கிணறுகளில் அடியில் துளையிட்டு குழாய்க் கிணறு அமைக்கவும் முடியும். இதனால் நீர் வசதி ஏற்பட்டு சாகுபடி செய்யவும், வறட்சியை ஓட்டி, பயிரைக் காக்கவும் முடியும்.

**விசைத் துளைக் கருவிகள்**

இது ஒரு இயந்திரத் துளைக் கருவியாகும். இதன் மூலம் 1000 அடியும் அதற்கு மேலும் நிலத்தில் துளையிட்டுக் குழாய்க் கிணறுகள் அமைக்கலாம்.

**பாறை வெடிக்கும் கருவி**

ஒரு அதிக அழுத்தம் கொண்ட காற்றழுத்தக் கருவியுடன் இணைந்து இயங்கும் இக்கருவியினால், பாறையான கிணற்றில் துளையிட்டு, வெடிவைத்து தகர்த்தி கிணற்றை ஆழப்படுத்தலாம். இதனால் கிணற்றில் நீர் மட்டம் உயர்ந்து கிடைக்கிறது. வெடிவைத்துத் தகர்க்கப்பட்ட பாறைத் தூள்களை அப்புறப்படுத்த கிரேன் என்ற மோட்டாரில் இயங்கும் கருவியும் வாடகைக்குக் கிடைக்கிறது. இதன் மூலம் பாறைகளை எளிதில் விரைவில் அப்புறப்படுத்தலாம்.

**ஹாமர் டிரில்**

பாறைக் கிணறுகளில் அடியில் துளையிட்டால் நீர் ஊற்று உடைக்கப்பட்டு கிணற்றுக்கு நீர் நிறையும் என்று வாய்ப்பு இருக்கும் இடங்களில், இக்கருவியினால் துளையிடலாம். இது ஒரு நவீனக் கருவியாகும். இதனால் மிக விரைவில் துளையிட்டுக் கிணற்றில் நீர் வசதியைப் பெருக்கலாம்.

மேற்கண்ட எல்லாக் கருவிகளும் விவசாயிகளுக்கு மட்டும் மிகவும் குறைக்கப்பட்ட வாடகையில் தரப்படுகின்றன. விவசாயமில்லாக் காரணங்களுக்குத் தரப்படுமேயானால், வாடகை அதிகமாகும். இந்த வாடகை விவரங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் அருகில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரப் பிரிவு அலுவலகங்களில் எந்நேரமும் தெரிந்து கொள்ளலாம்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 1984-85ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சிறு பாசனத் திட்டச் சாதனைகள்:

புதிய குழாய்க் கிணறுகள் அமைக்க இலக்கு 160. இதில் 163 அமைக்கப்பட்டுள்ளது. கிணறுகளினால் குழாய்க் கிணறு அமைக்க இலக்கு 300. இதில் 301 அமைக்கப்பட்டுள்ளது. கிணறுகளை ஆழப்படுத்த இலக்கு 70. இதில் 70 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன.

புதிய 20 அம்சத் திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் விரைவுத் திட்டத்தின் மூலம் விவசாயப் பெருக்கத்திற்கும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் உதவி செய்யப்பட்டு வருகிறது. மேலும் ஒவ்வொரு ஆண்டும் இதே பணியினைத் தொடர்ந்து செய்து உணவு உற்பத்தியில் தன்னை ஈடுபடுத்திவருகிறது.

# தமிழ்நாட்டில் குடும்ப நலம்

குடும்பநலத் திட்டம் 1956ல் மத்திய அரசால் துவக்கப்பட்டது. அப்போதிருந்தே தமிழ்நாடு அரசு அதைச் சிறப்பாக நிறைவேற்றி வருகிறது.

மற்ற மாநிலங்களைவிடத் தமிழ்நாடு இப்பணியில் முன்னணியில் இருக்கிறது; திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுகிறது. எனவே மத்திய அரசும் மற்ற மாநிலங்களும் தமிழ்நாடு அரசைப் பெரிதும் பாராட்டுகின்றன.

அறுவைச் சிகிச்சையில் 1984-85ல் தமிழ்நாடு முதலிடம் பெற்றது. இவ்வரிய சாதனைக்காக முதல் பரிசு ரூ. 2.5 கோடி தமிழகத்திற்கு மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது.

1984-85ஆம் ஆண்டுக்கு மத்திய அரசு தந்த குறியீடு 4,75,000 அறுவைச் சிகிச்சைகள். 5,25.341 அறுவைச் சிகிச்சைகள் செய்து குறியீட்டையும் மிஞ்சி 110.6 சதவிகித வெற்றியைப் பெற்றுவிட்டது.

தமிழ்நாட்டில் குடும்ப நலத் திட்டம் ,மக்கள் தாமாக ஏற்றுக் கொள்கிற திட்டமாக அமைந்து நிறைவேறி வருகிறது. எல்லா அரசியல் கட்சிகளும், எல்லாச் சமயத்தாரும்,. சமுதாயப் பணி அமைப்புகளும், மகளிர் அமைப்புகளும், அரசு ஊழியர்களும் குடும்பநலத் திட்டம் நிறைவேற ஒத்துழைக்கிறார்கள். பொது மக்களும் சிறுகுடும்ப நெறியை ஏற்றுக்கொண்டு இத்திட்ட நிறைவேற்றத்திற்கு உதவுகிறார்கள். எனவேதான் தமிழ்நாட்டில் குடும்பநலத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறி வருகிறது.

**குடும்பநலத் திட்டப் பணிகள்**

குடும்பநலத் திட்டத்தை நிறைவேற்ற ஐந்து வகையான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்கள் தொடர்பு, விளக்கப் பணிகளை விரிவுபடுத்துதல், மருத்துவ உதவிகள்,பின்கவனிப்பு, தாய் - சேய் நலம் பேணல் ஆகிய ஐந்து வகைப் பணிகளை மேற்கொண்டு குடும்பநலத் திட்டத்தை அரசு நிறைவேற்றி வருகிறது.

எந்தத் திட்டமும் மக்களுக்கு எடுத்துச் சொல்லப்பட வேண்டும். எந்தக் கொள்கையும் சரியாகப் பரப்பப்பட வேண்டும். அந்த வகையில் குடும்ப நலத் திட்டத்தைப் பற்றிய பிரச்சாரத்தை ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள குடும்ப நல மக்கள்



கல்வி மற்றும் தகவல் அலுவலர்கள் மேற்கொள்கிறார்கள். மேடைப் பேச்சு, திரைப்படம், நாடகம், வானொலி, தொலைக்காட்சி ஆகிய அனைத்தும் திட்டப் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

‘ஒரு குடும்பம் ஒரு வாரிசு’ என்ற நெறியை,நிலத்தைப் பங்கு போட்டு குறுக்கிக்கொள்வதைத் தடுக்க விரும்பும் விவசாயப் பெருமக்களே கூட ஏற்றுக் கொள்கிறார்கள். ஓய்வு பெறுவதற்கு 25 ஆண்டுகளுக்கு முன்பே குழந்தை பெறுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை மாத ஊதியம் பெறும் ஊழியர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்.

33 வயதுக்குப் பிறகு குழந்தை பெறுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்ற கருத்து அரசு ஊழியர்களுக்கு மிகவும் ஏற்றதாக அமைந்துள்ளது.

குடும்பநலக் கருத்தை அடிப்படையாகக் கொண்ட திரைப் படங்களுக்கு மூன்று பரிசுகளைத் தமிழக அரசு ஆண்டுதோறும் வழங்குகிறது. முதல் பரிசு ஒரு இலட்சம் ரூபாய், இரண்டாவது பரிசு ரூ.50 ஆயிரம்; மூன்றாவது பரிசு ரூ. 25 ஆயிரம் ஆகும். அவ்வாறே நாடகங்களுக்கு இரண்டு பரிசுகளை வழங்குகிறது. முதல் பரிசு ரூ. 15 ஆயிரம், இரண்டாவது பரிசு ரூ. 10 ஆயிரம் ஆகும்.

மேடைப் பிரச்சாரங்களைத் தொடர்ந்து, மேலும் பணி விரிவாக்கப்பட்டு, மக்களின் இல்லங்களுக்கும் இந்தக் கருத்துக்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. குடும்பநல அலுவலர்கள், இல்லங்களுக்குச் சென்று தகுதியுள்ள தம்பதியரோடு தொடர்பு கொண்டு உதவுகின்றனர். ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் தகுதியுள்ள தம்பதியர் பற்றிய பதிவேடு உள்ளது. இந்தப் பதிவுப் புத்தகம் அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டு, புதிய தம்பதிகளின் பெயர்களும் பதிவு செய்யப்படுகின்றன. இத் தம்பதியரோடு தொடர்பு கொண்டு குடும்ப நலத் திட்டத்தினால் வரும் பயன், அதற்குரிய அரசின் ஊக்கத்தொகை,அரசு ஏற்படுத்தியுள்ள வசதிகள், கருத்தடை முறைகள் ஆகியவற்றைப் பற்றி குடும்ப நல ஊழியர்கள் எடுத்துரைத்து, தேவையான உதவிகளையும் செய்து வருகின்றனர்.

**பணி வசதிகள்**

சிறுகுடும்ப நெறியை ஏற்றுக் கொள்கிற தம்பதியருக்கு அவர்கள் விரும்புகிற முறையைக்கடைப் பிடிக்கத் தக்க வசதிகள் செய்யப் பட்டுள்ளன. அறுவைச் சிகிச்சைக்குரிய வசதிகள் எல்லா அரசு மருத்துவ மனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் உள்ளன. மேலும், மாநகராட்சி நகராட்சி போன்ற உள்ளாட்சி நிறுவனங்களின் மருத்துவமனைகளிலும், அரசு உதவி பெறும் தன்னியக்க நிறுவனங்களிலும் அறுவைச் சிகிச்சை வசதிகள் உள்ளன.

தமிழ்நாடு முழுவதும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இணைக்கப்பட்டுள்ள 383 குடும்பநல மையங்கள் உள்ளன. நகர்ப் பகுதிகளில் 245 குடும்ப நல மையங்கள் உள்ளன. அறுவைச் சிகிச்சைக்குப் பின் சிகிச்சைபெறுவோரைக் கவனிக்க, பேறுகால



வடபழனியில் உள்ள மாநகராட்சி மருத்துவ மனையின் பேறுகால பின்பணி மையத்தில், அறுவைச் சிகிச்சை பெற்ற தாய்மார்கள் டி. வி, வீடியோ கண்டு களித்தல்.

பின்பணி மையங்கள் 56 உள்ளன. அறுவைச்சிகிச்சை செய்து கொள்ளும் தாய்மார்கள் 3 நாட்கள் மருத்துவ மனையில் தங்க வேண்டியதிருக்கும். அவர்களுக்காக உள்ள பின் கவனிப்பு மையங்களில் நல்ல வசதிகள் செய்யப்பட்டு, பொழுது போக்க தொலைக்காட்சி வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அறுவைச் சிகிச்சை பெற்றோரையும், பிற கருத்தடை முறைகளைப் பின்பற்றுவோரையும் நேரில் தொடர்புகொண்டு மேலும் அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளை அலுவலர்கள் செய்து தருகின்றனர். அதனால் குடும்ப நலத் திட்டத்தை ஏற்றுக் கொண்டவர்கள் நிறைவு பெறுகிறார்கள். மற்றவர்களுக்கும் அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்.

**தாய்–சேய் நலம் பேணல்**

சிறு குடும்ப நெறியை ஏற்றுக் கொள்ளவேண்டுமானால் பிறக்கிற குழந்தைகள் நலமாக உயிர் வாழ நாம் உறுதியளித்து நம்பிக்கையூட்ட வேண்டும். பிறந்த குழந்தையைக் காத்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை பிறந்தால்தான் சிறுகுடும்ப நெறியை ஏற்க மக்கள் முன் வருவார்கள். எனவே குழந்தை நலக் காப்பு குடும்ப நலத் திட்டத்தின் ஒரு முக்கியமான அம்சமாக அரசால் மிகுந்த அக்கறையுடன் கவனிக்கப்பட்டு வருகிறது. அரசு மருத்துவ மனைகளிலும், ஆரம்பச் சுகாதார மையங்களிலும் தாய் சேய் நலங்காக்க எல்லா வசதிகளும் உள்ளன.

இத்தகைய திட்டங்களால் தமிழகம் மற்ற மாநிலங்களைவிட முன்னணியில் நிற்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. குடும்ப நலத் திட்டத்தை விரைவுபடுத்தத் தமிழக அரசு ஊக்க ஊதியத்தை அதிகப்படுத்தியிருக்கிறது. முன்னர் அறுவைச்சிகிச்சைக்காக ஆட்களை அழைத்து வருவோருக்கு, ஒரு தந்தையை அழைத்துவந்தால் ரூ.10, ஒரு தாயை அழைத்து வந்தால் ரூ.12 என்று ஊக்க ஊதியம் அளிக்கப்பட்டு வந்தது. இப்போது அந்தத் தொகை ரூ.50 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இப்போது அரசு ஊழியர் மட்டுமல்ல, வேறு யார் அழைத்து வந்தாலும், அழைத்து வருவோருக்கு ரூ.50 வழங்கப்படும்.

மாண்புமிகு இந்தியப் பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டத்தில் அடங்கிய குடும்ப நலத் திட்டத்தை நிறைவேற்றுவதில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் தனிச் செல்வாக்கும் ஈடுபாடும் பெரிதும் உதவுகிறது. தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே, தலைமைச் செயலாளர் திரு டி.வி. அந்தோணி இ.ஆ.ப., ஆகியோரின் ஆர்வமும் இத்திட்டத்தின் வெற்றியை ஊக்குவித்து வருகிறது.

## பிறப்பு விகிதம்

ஆயிரத்துக்கு

| | தமிழ் நாட்டில் | இந்தியாவில். |
|---|---|---|
| 1977 | 29.3·/. | 33.00·/. |
| 1981 | 26.1·/. | 33.9·/. |

கி.பி.2000ல் பிறப்பு விகிதத்தை 1000க்கு 21 ஆகக்குறைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**மக்கள் தொகை வளர்ச்சி விகிதம்**

| | தமிழ் நாட்டில் | இந்தியாவில் |
|---|---|---|
| 1961-71 | 22.3·/· | 24.8·/. |
| 1971-81 | 17.5·/. | 25·/. |

(1978 கணக்கீடு)

| | | பிறப்பு விகிதம் | இறப்பு விகிதம் (ஆயிரத்துக்கு) | சிசு மரணம் விகிதம் |
|---|---|---|---|---|
| தமிழ்நாடு | ... | 26.1·/. | 10.9·/. | 81.2./. |
| இந்தியா | ... | 35.2·/. | 12.5·/. | 127·/. |

— தகவல் : குடும்பநலத் துறை

# கண்ணான கல்யாணம்!

மங்கல இசை காற்றிலே மிதந்து வருகிறது; அதைத் தொடர்ந்து பாண்டு இசையும் கேட்கிறது. இசை வரும் திசை நோக்கிச் செல்கிறோம்.

மணப்பந்தல். திரளான கூட்டம். மணமக்களைப் பார்க்கிறோம். ஒரு ஜோடி அல்ல, ஆறு ஜோடிகள். புத்தாடை அணிந்து பூரிப்புடன் காட்சி அளிக்கின்றனர். ஆனால்.. ஆனால்..அவர்களெல்லாம் பார்வையற்றவர்கள்!

மார்ச் திங்கள் 9ஆம் நாள் சென்னைத் தண்டையார்ப்பேட்டையில் பார்வையற்றோர் திருமணம் நடைபெற்றது. திருமணத்துக்கு நம்மோடு ஏராளமான பார்வையற்றவர்களும் வருகை தந்திருந்தார்கள். இந்தத் திருமணத்துக்கு அரிமா சங்கமும், தமிழ்நாடு விழியிழந்தோர் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

மணக்கோலம் பூணும் மணமக்கள்:

1. வீராசாமி-கண்ணம்மாள்
2. துரைசாமி-மாரியம்மாள்
3. ராஜாங்கம்-சுசீலா
4. லூயிஸ்ராஸ்-அமலோர்பவ-மேரி
5. கீதா-மருதன்
6. கணேசன்-மனோன்மணி

மணமேடைக்கு ஒவ்வொரு ஜோடியாக வருகிறார்கள். அரிமா சங்க கவர்னர் திரு வாஞ்சிநாதன் அவர்கள் முன்னிலையில் மணமக்கள் ''இன்பத்திலும் துன்பத்திலும் கணவன் மனைவியாகச் சேர்ந்து வாழுவோம்'' என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள்.

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் திருமணத்தை நடத்தி வைத்தார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாலை எடுத்துத்தர மணமக்கள் மாலை மாற்றிக்கொண்டார்கள். சம்பிரதாயப்படி தாலி எடுத்துக் கொடுக்க மணமகன் மணமகள் கழுத்தில் தாலி கட்டினார் - அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவினார்.

மணமக்கள் முகத்தில் எல்லாம் மகிழ்ச்சி வெள்ளம். இது காண்போர்க்குக் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

பிறகு மணமக்களுக்கு எவர் சில்வர் பாத்திரங்களையும், ஊன்றுகோல்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். அவர் மணமக்களை வாழ்த்திப் பேசும் போது குறிப்பிட்டார்—

''தமிழ்நாட்டில் ஊனமுற்றவர்கள் 10 இலட்சம் பேர் உள்ளனர். இவர்களில் பார்வையற்றவர்கள் 1 இலட்சத்து 92 ஆயிரம் பேர் ஆவர். இவர்களுக்குக் கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதார முன்னேற்றங்களில் அரசு உதவிகள் செய்து வந்தாலும், இது போன்ற சமூக நலச் சங்கங்களும் உதவ முன்வர வேண்டும்.

''தமிழக அரசு பார்வையற்றவர்களுக்காக 11 பள்ளிகளையும், மானிய உதவியுடன் 9 பள்ளிகளையும் ஆரம்பித்துள்ளது. இவற்றில் 1800 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள்''

சமூக நலத்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு. சி. தங்கராஜ், இ.ஆ.ப. அவர்கள் பேசுகையில், ''நீங்கள் மன உறுதியுடன் வாழ வேண்டும். வாழ்க்கையைச் சுமையாக ஆக்கிக் கொள்ளாமல், இனிமையாக ஆக்கிக் கொள்ள வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

இந்தத் திருமண விழாவோடு விழி இழந்தோர் சங்கத்தின் 6வது மாநில மாநாட்டின் தொடக்க விழா, பார்வையற்றோருக்கான அட்டைப் பெட்டி செய்யும் தொழிற்சாலை தொடக்க விழா, சங்கத்தின் காலாண்டிதழின் வெளியீட்டு விழா ஆகியவையும் நடந்தன.

இந்த விழாவில் திரு. டி. ஆசீர் நல்லதம்பி, திரு லயன்ராதா கிருஷ்ணன், திரு விசுவநாதன், திரு தேவராஜ் மற்றும் பலர் பேசினார்கள்.

பார்வையற்ற மணமக்கள் பல்லாண்டு வாழவும், அவர்கள் சமுதாயத்தில் சம அந்தஸ்து பெறவும், அவர்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் காணவும் வேண்டும் என்று நம்மையறியாமலேயே வாழ்த்துகிறோம். ஆம். மானசிகமாக அவர்களிடம் விடைபெற்று மகிழ்ச்சியுடன் வெளியே வருகிறோம்.

—நமது செய்தியாளர்



# வெண்மைப் புரட்சி

ஆவின் பால் தமிழகமெங்கும் வெண்மைப் புரட்சியை உண்டாக்கி வருகிறது.

நாளுக்கு நாள் தேவையும் பெருகி, உற்பத்தியும் பெருமளவில் உயர்ந்து வருகிறது.

காலப்போக்கில் குஜராத்திலுள்ள 'ஆனந்த்'தையும் விஞ்சுகின்ற அளவுக்குப் பால்வளம் பெருகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அதற்கு எல்லாருடைய ஒத்துழைப்பும் உறுதுணையும் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு, பால் வளத்துறை, நுகர்வோர்களை நேரிடையாகச் சந்தித்து, அவர்களது குறைகளை, ஆலோசனைகளை அறிந்து கொள்ளவும், அதற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முனைந்து செயலாற்றி வருகிறது.



18.3.86 அன்று தலைமைச் செயலகத்தில் உள்ள மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறையில், நுகர்வோர் சந்திப்பு நடைபெற்றது. சென்னை நகரின் பல பகுதிகளிலிருந்து 50 நுகர்வோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். தத்தம் பகுதிகளில் உள்ள குறைகளை எடுத்துக் கூறினார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பாலின் தரம், கொள்ளளவு, பால் தாமதமாகக் கிடைத்தல், குறித்த நேரத்திற்குள்ளாகவே பால் தீர்ந்து விடுதல், பால் கவர் கசிவு, கலப்படம் போன்ற குறைபாடுகளை உடனே களைய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

தானியங்கு பால் வழங்கு நிலையங்களில் காணப்படும் குறைபாடுகள், முறைகேடுகளையும், அவை சுகாதாரக்கேடாக விளங்குவதையும் சிலர் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிறகு செய்தியாளர்களிடம் கூறியபோது தெரிவித்த கருத்துக்களாவன:

''நாளொன்றுக்கு ஏறத்தாழ 50 ஆயிரம் லிட்டர் பால் உபரியாக உள்ளது. எனவே, பால் தட்டுப்பாடோ அல்லது பால் கார்டு வழங்குவதில் குறைபாடோ இருக்காது.

''சென்னையில் மட்டும் நாளொன்றுக்குச் சுமார் ஐந்து லட்சம் லிட்டர் பால் விநியோகிக்கப்படுகிறது. வாடிக்கையாளர்களின் நலனைப் புறக்கணித்துவிட்டு, மொத்தமாக டீக்கடை போன்றவற்றுக்கு விற்பனை செய்வது, தண்ணீர் கலந்த கலப்படப் பால் விற்பது போன்ற குறைபாடுகளைப் போக்குவதற்காக உயர் அதிகாரிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழுக்களும், திடீர்ச் சோதனைகளும் அவ்வப்போது நடத்தப்படுகின்றன.

''சென்னை மாநகரில் தற்போது 61 தானியங்கிப் பால் வழங்கு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மே மாதத்துக்குள் மேலும் புதிதாக 14 அமைக்கப்பட்டு இந்த எண்ணிக்கை 75 ஆக உயர்த்தப்படும். விரைவில் இது நூறாகவும் உயர்த்தப்படும்.''

மக்கள் குறைபோக்க நடந்த இந்தக் கூட்டத்தில், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையப் பொது மேலாளர் திரு எம். எச். ஜலால், இ.ஆ.ப., விற்பனை மேலாளர் திரு மீர்கயாம் அலி, மக்கள் தொடர்பு அலுவலர் திரு கே. சிவகாமிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

—நமது செய்தியாளர்

# நூல் நயம்

## ஆற்றல் கவிதைகள்

ஆசிரியர்: ஒன்பதாம் தொகையார் கவிஞர் ஆற்றலரசு.

விற்பனை உரிமை: கவிதா பப்ளிகேஷன், 3-2, கன்னியம்மன் கோவில் தெரு, மேட்டுப் பாளையம், சென்னை. 33.

விலை: ரூ. 30 பக்கம்: 176

மரபுக் கவிதைகள் கொண்ட இந்நூல் படிப்போர் மனத்துக்கு விருந்தளிக்கின்றது. கவிதைகளுக்குரிய சித்திரங்கள் கண்களுக்கு விருந்து படைக்கின்றன.

இந்நூலில் உள்ள 'சின்னஞ் சிறுசுகளுக்குரிய கவிதைகள்' சுவை நல்குகின்றன. பெரியோரும் படித்து இன்புறும் வண்ணம் அமைந்துள்ளன. 'ஒரு சொல் கவிதைகள்' சுவையூட்டுவதுடன் ஆசிரியரின் மொழித் திறமைக்குக் கட்டியம் கூறுகின்றன. தமிழ் மொழியின் மீது அவருக்குள்ள பற்றுதலை, 'நாடும் மொழியும்' என்ற பகுதி உணர்த்துகிறது. 'தத்துவம்' பகுதியிலுள்ள கவிதைகள் பயனுள்ள பல்வகைச் சேதிகளைத் தெரிவிக்கின்றன. இசைப் பாடல்கள் இனிமையையும் பொருள் நயத்தையும் தருகின்றன.

உயிருக்கு மேலாம் தாய்-நாடு
நீ
உயிரைக் காத்திடப் போராடு

— என்னும் கவிதை வரிகள் நாட்டுப்பற்றை எடுத்துரைக்கின்றன.

சாதிதனை ஒழித்திடுவோம்—
நற்
சாந்திதனை வளர்த்திடுவோம்

—என்னும் வரிகள் பேதமற்ற சமுதாயத்தை வலியுறுத்துகின்றன.

நீயில்லா இடமில்லை
வையத்துள்ளே
நீயின்றி உயிரில்லை
மெய்தானில்லை

'காற்றே கடவுள்' என்ற கவிதையில் உள்ள இந்த வரிகள் கவிஞரின் வாதத் திறமையை எடுத்துரைக்கின்றன.

மொத்தத்தில் பழச்சாற்றுக் கலவை போல, பயனுள்ள கருத்துகளை இக் கவிதை நூலில் காண முடிகிறது.

—தமிழ்ப்பித்தன்

## மலைத் தென்றல்

ஆசிரியர் : கவிக்குயில் பொன் ஐயனாரப்பன்

வெளியீடு: தமிழ்மணி புத்தகப் பண்ணை, 281, திருவல்லிக்கேணி நெடுஞ் சாலை, சென்னை-600 005.

விலை ரூ.10 பக்கம் 112

அகப்பொருள் குறித்தும் புறப் பொருள் குறித்தும் நெய்யப்பட்ட முப்பதுக்கு மேற்பட்ட மரபுக் கவிதைகள் இந்நூலில் உள்ளன. இவற்றில் சந்தக் கவிதைகளும் இடம் பெற்றுள்ளன.

துறவி ஆனான், பஞ்சமே பறந்து போ, சாவே விலகி நில் என்ற தலைப்புகள் கொண்ட கவிதைகள் சுவை நல்குகின்றன. ஒன்றில் இரண்டு கண்டேன் என்னும் கவிதை, உலகில் எந்த ஒரு பொருளுக்கும் இருவகையான குணநலன்கள் உள்ளன என்பதை எடுத்துக் காட்டுகிறது. துன்ப நாட்கள் என்ற கவிதை, படிப்போரின் இதயத்தை நெகிழச் செய்கிறது.

## சக்தியளிக்கும் சாயிபாபா

ஆசிரியர் : மயிலைத்தொண்டன்

வெளியீடு: தமிழ்மணி பதிப்பகம் 107ஏ பெரியார் பாதை (மேற்கு) சூளை மேடு, சென்னை—600 094.

விலை ரூ.8 பக்கம்: 116

சீரடி என்னும் ஊரில் வாழ்ந்த சாயிபாபா அவர்களின் வாழ்க்கை வரலாற்றை இந்நூல் தெரிவிக்கிறது. "எல்லாக் கடவுளும் ஒன்றே; அவர்களில் உயர்வு தாழ்வு கிடையாது. தெய்வத்தில் பிரிவில்லை — உயிரில் வேற்றுமை இல்லை" என்ற தத்துவங்களைப் பல்வேறு நிகழ்ச்சிகளின் வாயிலாக சாயி பாபா எடுத்துக் காட்டியதை இந்நூல் விளக்குகிறது. பாபா — தொண்டர்க்குத் தொண்டராக விளங்கிய நேர்த்தி இந்நூலின் மூலம் தெளிவாகிறது.

இன்றைய விஞ்ஞான உலகத்தவர் ஒப்புக்கொள்ளக்கூடிய வகையில் சில நிகழ்ச்சிகள் இல்லை என்றாலும் அன்பின் அடிப்படையில் அந்நிகழ்ச்சிகள் ஏற்பட்டுள்ளன என்பதால் அவை நமது இதயத்தைத் தொடுகின்றன. எளிய, இனிய நடை நூலுக்குச் சிறப்புச் சேர்க்கிறது.

## ஓடாதே! துரத்தப்படுவாய்

ஆசிரியர்: பட்டுக்கோட்டை பிரபாகர்

வெளியீடு: மயிலவன் பதிப்பகம் 17, கங்கை அம்மன் கோயில் தெரு, வடபழனி, சென்னை—600 026.

விலை: ரூ.8 பக்கம் 112

பிரசன்னா என்னும் ஆடவனின் பேச்சில் ஏமாந்து போய் தனது பெண்மையை இழந்துவிடும் புவனா, அவனை எப்படியும் சந்தித்து அவனுக்கு மனைவியாகிவிட வேண்டும் என்ற முயற்சியில் இறங்குவதைத் தொடக்கமாக்கி - பல்வேறு நிகழ்ச்சிகளை அடுக்கடுக்காக அமைத்து விறுவிறுப்பான முறையில் இந்த நவீனத்தை உருவாக்கியிருக்கிறார் நூலாசிரியர். இறுதியில் புவனா-பிரசன்னாவால் கொலை செய்யப்படும் நிகழ்ச்சி படிப்போரை ஏமாற்றத்திற்கு ஆளாக்குகிறது. 'உண்மை வெல்லும்' என்ற வாசகம் பொய்யானதோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

புவனாவின் வாழ்க்கை வரலாற்றைத் தெரிந்து கொண்ட போதும், அவளை மன்மார நேசித்து, அவளது மரணத்திற்காக வருந்தி, 'என் மனைவி போய்விட்டாள்' என்று சொல்லிக் கண்ணீர் விடும் பாலுவின் பாத்திரம் மறக்க முடியாதது.

பெண்கள், வாழ்க்கையில் எப்போதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறது இந்த நவீனம்.

—எஸ்.எஸ்.சுந்தரம்



## சென்ற இதழில்....

அண்மையில் மறைந்த கலாசேத்ரா நிறுவனரும் பரத நாட்டிய மேதையுமான திருமதி ருக்மணி தேவி அருண்டேல் அவர்களின் உருவப் படத்தைச் சென்ற இதழ் அட்டை (16.3.86) அலங்கரித்தது.

# முன்னாள் ஆளுநர் கே.கே.ஷா மறைவு



தமிழ்நாட்டின் முன்னாள் ஆளுநர் திரு கே.கே.ஷா அவர்கள், 14.3.86 அன்று மாரடைப்பால் மரணம் எய்தினார்.

மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த கொலபா மாவட்டத்தில் 1908ஆம் ஆண்டு அக்டோபர் 15ஆம் நாளன்று பிறந்த கே.கே. ஷா, வழக்கறிஞர் பட்டம் பெற்றவர்.

1967ஆம் ஆண்டு மைய அரசின் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சராகவும், 1969ஆம் ஆண்டு நல்வாழ்வுத்துறை அமைச்சராகவும் பொறுப்பேற்றிருந்த அவர் 1971ல் தமிழக ஆளுநராகப் பதவி ஏற்றார்.

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு கியானி ஜெயில்சிங் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:

''கே. கே. ஷாவின் மரணத்தால் எனது நெருங்கிய நண்பரை இழந்து விட்டேன். அவர் ஒரு சிறந்த நிர்வாகி. சுதந்திரம் பெற்ற பிறகு பல்வேறு துறைகளில் மிகச் சிறப்பாகப் பணியாற்றினார். அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் விடுத்துள்ள இரங்கற் செய்தியில் கூறியிருப்பதாவது:

''அவர் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர். பல்வேறு பொறுப்புகளை ஏற்றுத் திறம்பட நிர்வகித்தவர். மத்திய அரசில் அமைச்சராக இருந்து சிறப்பாகச் செயல்பட்டவர்.

''அவர் தமிழகத்தில் ஆளுநராக இருந்தபோது, பல்வேறு அரசியல் மாறுதல்கள் ஏற்பட்டன என்பதால் அவருடைய பதவிக் காலம் தமிழக மக்களுக்கு நன்கு நினைவில் இருக்கும்.

''சிறந்த தேசியவாதியாகவும், நிர்வாகியாகவும் திகழ்ந்த அவருடைய மறைவு, நமது பொது வாழ்விற்கு ஏற்பட்ட இழப்பு என்பதில் ஐயமில்லை.

''அவரை இழந்து வாடும் அனைவருக்கும் என் சார்பிலும் தமிழக அரசின் சார்பிலும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்''

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 19.3.86 அன்று, மேதகு முன்னாள் ஆளுநர் திரு கே.கே. ஷா அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் 2 நிமிடம் அஞ்சலி செலுத்திய பின்னர், ஒருமணிநேரம் அவை ஒத்தி வைக்கப்பட்டது. அதேபோல மேலவையிலும் 2 நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டு, அவை ஒருமணி நேரம் ஒத்தி வைக்கப்பட்டது.

## அறிவுச் சுடர்கள்!

வீரனாக இரு, கோழைத்தனத்தை ஓட்டு. நான் ஒரு இந்தியன் என்பதில் பெருமைகொள். நான் இந்தியன், எல்லா இந்தியர்களும் என் சகோதரர்கள் என்று உரக்க உரை.

—விவேகானந்தர்

அறிவு உடையவர்கள் வேறொன்றும் இல்லாதவராயினும் எல்லாம் உடையவரே. அறிவில்லாதவர் எல்லாமுடையவராயினும் ஒன்றுமில்லாதவரே.

—திருவள்ளுவர்

நான் அடிமையாக இருக்கமாட்டேன்; ஆகவே நான் எஜமானனாகவும் இருக்கமாட்டேன். இதுதான் ஜனநாயகக் கோட்பாட்டின் அடிப்படைத் தத்துவம்.

—ஆபிரகாம்லிங்கன்

அடிமைத் தளைகளைப் பூண்டு இலக்கியக் கல்வி கற்பதைவிட சுதந்திரம் பெற்று எழுத்து வாசனை அறியாதவர்களாகயிருந்து கல்லுடைத்துப் பிழைத்தல் மேல்.

—காந்தியடிகள்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


Exotic Designs for the New Year
A new range added in Chiffon, Polyester, Silk and Cotton sarees for you.
Visit Co-optex showrooms.
Co-optex
Handlooms
DIPR/Efficient

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

